விலை ரூபா: 20.00

# தமிழ்நாதம்

Thamil Naatham

இராகம் 01 | தாளம் 23 | வள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 05 வெள்ளிக்கிழமை (20.07.2012) | பக்கங்கள்: பதினாறு

டெங்கு ஒழிப்புப் பணியில்



அணி திரள்வோம்



பனை மீளநடுகைத் திட்டத்தினை மேம்படுத்துவதற்காக, பனை அபிவிருத்திச் சபையால் கொள்வனவு செய்யப்படவுள்ள நவீன இயந்திரமொன்றினை படத்தில் காணலாம். இவ்வியந்திரம் மரத்தினை வேரோடு பெயர்த்தெடுத்து வேறொரு இடத்தில் நாட்ட வல்லது.

## ஊழல், மோசடி, குற்றச்செயல் சந்தேக நபர்கள் தேர்தலில் போட்டியிடத் தடை

ஊழல், மோசடி மற்றும் குற்றச்செயல்களில் ஈடுபட்டார்கள் என்று சந்தேகிக்கப்படும் நபர்கள் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உத்தரவின் பேரில் தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளது என்று ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று வியாழக்கிழமை முற்பகல் இடம்பெற்றது. 02

## ஐந்து நாட்களுக்குள் இஸற் (Z) புள்ளி

2011 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தர பரீட்சை பெறுபேறுகளின் இஸட் புள்ளி இம் மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடப்படுமென பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் புஷ்பகுமார உச்ச நீதிமன்றத்துக்கு நேற்று அறிவித்தார்.

இதேவேளை உச்ச நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்திற்காக அதற்கான காரணத்தை தெளிவுபடுத்துமாறு கோரி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் 02

# படையினர்க்கு பயிற்சியளிக்கும் பிரதான நாடு இந்தியாவே

### தமிழக சிறு குழுக்களின் எதிர்ப்பால் உறவுக்குப் பாதிப்பில்லை - அமைச்சர் கெஹலிய

படையினருக்கு பயற்சியளிப்பதில் இலங்கையின் பிரதான பங்காளியாக இந்தியாவே காணப்படுகின்றது என்று அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கூறினார்.

சுமார் "1000, 1500 இலங்கையருக்குப் பயிற்சியளிக்கும் இந்தியாவுக்கு எட்டு பேர் இலங்கைப் படையினரை இந்தியாவிலிருந்து வெளியேறக் கோரியது பாரிய பிரச்சினையாகத் தோன்றாது. இதனையொரு பிரச்சினையாகக் கருதாத பட்சத்திலேயே இலங்கை விமானப்படையினர் எட்டுப் பேருக்கும் வேறு இடத்தில் பயிற்சியளிக்க இந்திய அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. இந்த நிலைமை தொடர்ந்தும் நீடிக்கும் என்றும் சொன்னார். இலங்கைக்கு எதிராக தமிழ்நாட்டைச் 02

## சட்டவிரோத அவுஸ்ரேலியப் பயணத்தின் பின்னணியில் புலம்பெயர் தமிழர்கள்

### தகவல் கிடைத்துள்ளதாக சொல்கிறது அரசாங்கம்

சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவுக்குச் செல்ல முயல்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில், இதன் பின்னணியில் புலம்பெயர் தமிழர்களின் சதித்திட்டமொன்று நிலவுவதாக தகவல்கள் கிடைத்துள்ளன என அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஏதிர்வரும் மாதங்களில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவை கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக மேற்படி விடயம் கையாளப்பட வாய்ப்பு உள்ளது என்று ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹெலிய ரம்புக் வெல்ல தெரிவித்தார்.



அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாட்டின் போது கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு 02

## 6 வருடத்துக்கு ஒரு தடவையே ஐ.தே.க. வின் தலைவர் தெரிவு

### பொன்சேகாவின் கூட்டங்களில் பங்குபற்றவும் உறுப்பினர்களுக்கு தடை

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் தெரிவு இனி 6 வருடங்களுக்கு ஒருமுறையே இடம்பெறும் என ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழுவில் நேற்று (19) தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று ஐக்கிய தேசியக் கட்சி மத்திய செயற் குழு கூடிய போது இந்த தீர்மானம் 02

## பனை ஆராய்ச்சி நிலையம் இன்று கைதடியில் திறப்பு



இந்திய அரசாங்கத்தின் நிதிப் பங்களிப்புடன் கைதடியில் புனரமைக்கப்பட்டுள்ள பனை ஆராய்ச்சி நிறுவனம் இன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

இத்திறப்பு விழாவில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் 02

## நீதிபதியின் வீடு மீது கோம்பை வீச்சு

(வல்வெட்டித்துறை)

பருத்தித்துறை மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரனின் வீட்டின் மீது இனந்தெரியாதோரால் கோம்பை வீசி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் 18 ஆம் திகதி 10.40 மணியளவில் இந்தத் தாக்குதல் சம்பவம் 02

● கிழக்கு ● வடமத்தி ● சப்ரகமுவ

## செப்டெம்பர் 8இல் தேர்தல்

### ஐ.ம.சு.மு., த.தே.கூ., ஸ்ரீல.மு.க. வேட்புமனு தாக்கல்



வடமத்திய, கிழக்கு, சப்ரகமுவ மாகாண சபைகளுக்கான தேர்தல் செப்டெம்பர் 8 ஆம் திகதி நடைபெறும் எனத் தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இத்தேர்தல்களுக்கான வேட்புமனுத் தாக்கல் நேற்று நிறைவடைந்த நிலையிலேயே தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய 02

## 'விசாரணை நடக்கும்'

யாழ்.நெல்லியடி பஸ் நிலையத்துக்கு முன்பாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது புலிக்கொடி ஏந்தியவாறு மோட்டார் சைக்கிள்களில் வலம்வந்த மர்ம நபர்கள் தொடர்பில் உரிய விசாரணை நடத்தப்படும் என்று ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவையின் பேச்சாளருமான கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார். 02

## நிர்க்கதியானோரை அழைத்துவர திட்டம்

புகலிடம் கோரிச் சட்டவிரோதமாக வெளிநாடு சென்று புகலிடக் கோரிக்கை மறுக்கப்பட்டு நிர்க்கதியாகியுள்ள இலங்கை பிரஜைகளை மீண்டும் நாட்டுக்கு அழைத்துவர இலங்கை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கென வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸின் ஆலோசனையில் தேசிய இணைப்புக் குழுவொன்று நியமிக்கப்படவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் 02

## த.தே.மு. ஆதரவாளர் வீட்டுக்கு ஒயில் வீச்சு

(வல்வெட்டித்துறை)

தமிழ்த் தேசிய முன்னணியின் ஆதரவாளரான நாகேந்திரம் புஸ்பவசந்தன் என்பவரின் வீட்டின் மீது கழிவு ஒயில் வீசி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. நேற்று 19 ஆம் திகதி அதிகாலை நெல்லியடி வடக்கு வதிரியில் உள்ள இவரது வீட்டின் மீது இனந்தெரியாத நபர்கள் இந்த ஒயில் வீச்சுத் 02

# வன்னி, தீவகப் பகுதிகளில் 107 ஆசிரியர்களுக்கு இடமாற்றம்

வன்னி மற்றும் தீவகப் பிரதேசப் பாடசாலைகளில் கடமையாற்றித் தமது சேவைக்காலங்களைப் பூர்த்தி செய்த 107 ஆசிரியர்களுக்கு எதிர்வரும் முதலாம் திகதி முதல் நிரந்தர இடமாற்றம் வழங்கப்படும். ஆசிரியர்கள் கோரிய இடங்களுக்கே இடமாற்றம் வழங்கப்படுமென்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் சரா புவனேஸ்வரன் தெரிவித்தார். கல்வியியற் கல்லூரிகளிலிருந்து புதிதாக நியமனம் பெறும் ஆசிரியர்கள் வன்னி மற்றும் தீவகப் பிரதேசங்களுக்கு நியமிக்கப்படவுள்ளனர். இது தொடர்பாக வடமாகாண கல்வியமைச்சுச் செயலாளருடன் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் அண்மையில் பேச்சுவார்த்தை நடத்தியது. அப்போதே சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்த 107 ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் முடிவு எடுக்கப்பட்டது. இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களின் விபரங்களைத் தம்மோடு தொடர்பு கொண்டால் பெற்றுக் கொள்ள முடியுமென்றும் சரா புவனேஸ்வரன் தெரிவித்தார்.

# தேர்தலுக்கு பின் மு.கா. அரசுடன் இணைந்தே செயற்படும் : அரசு அறிவிப்பு

கிழக்கு மாகாணசபைத் தேர்தலின் பின்னர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்துடன் இணைந்த செயற்படுவதான உடன்படிக்கையின் பிரகாரமே மேற்படி தேர்தலில் தனித்து போட்டியிடுவதான தீர்மானத்தை எடுத்துள்ளது என அரசாங்கம் அறிவித்தது.

தேர்தலைப் பொறுத்தவரையில் இவ்வாறான நடைமுறைகள் அடிக்கடி இடம்பெறுவது வழமையே. இந்நிலையில், தனியானதொரு அரசியல் பயணத்தை நோக்கிச் செல்வதற்காகவே தனித்துப் போட்டியிடுவதான முடிவுக்கு வந்தோம் என அக்கட்சியின் உறுப்பினர்கள் நேற்று முன்தினம் அறிவித்திருந்தாலும், அந்த தீர்மானம் நேற்று மாறியிருக்கிறது என்று ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அரசாங்க தகவல் திணைக்களத்தில் இன்று வியாழக்கிழமை முற்பகல் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்ட அமைச்சரிடம் கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தனித்து போட்டியிடுவதான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தீர்மானம் குறித்து கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு அமைச்சர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

# திறமையான இலங்கையர்களுக்கு பிரிட்டன் அழைப்பு

திறமைகொண்ட இலங்கையர்களை ஐக்கிய ராச்சியத்தில் வேலைசெய்ய அழைப்பதாக ஐக்கிய இராச்சிய அரசாங்கம் கூறுகின்றது.

இலங்கையிலும் மாலைத்தீவிலும், விஞ்ஞானம், மானுடவியல், பொறியியல் மற்றும் கலைத் துறைகளில் திறமையான சில மேதாவிகள் உள்ளனர். இவர்கள் "மேதாவிலாச திறமையானர் குடிவரவு பாதை" என்னும் விசேட ஏற்பாடு வழியாக ஐக்கிய இராச்சியத்தில் வேலை செய்யும் சாத்தியத்தை ஆராய்ந்து பார்க்கும்படி என பிரிட்டன் கூறியுள்ளது.

## 6 வருடத்திற்கு ஒரு....(தொடர்)

நிறைவேற்றப்பட்டது.

மேலும் கட்சியின் தலைவர் தெரிவு 6 வருடங்களுக்கு ஒருமுறை நடை பெறும் எனவும் கட்சி செயலாளர், தவிசாளர், பொருளாளர், பிரதித் தலைவர், உப தலைவர், தேசிய அமைப்பாளர் ஆகியோரையும் தலைவரே தெரிவு செய்வார் எனவும் தீர்மானிக்கப்பட்டதுடன்.

பிரதித் தலைவர், உப தலைவர், தேசிய அமைப்பாளர் தெரிவில் போட்டி ஏற்படுமாயின் அதன்பின் மத்திய செயற்குழுவின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் மாற்றம் செய்ய முடியும். என்றும் சரத் பொன்சேகா ஏற்பாடு செய்யும் எந்த கூட்டத்திலும் ஐதேக உறுப்பினர்கள் கலந்துகொள்ள முடியாது. என்றும் மேலும் தீர்மானிக்கப்பட்டது.

## சிறுவர் துஷ்பிரயோகம், போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுவோருக்கு மரண தண்டனை

சிறுவர் துஷ்பிரயோகங்கள் மற்றும் போதைப்பொருள் விற்பனை ஆகிய இரு குற்றங்களும் மரண தண்டனைக்கு உட்படத்தப்பட வேண்டியவை குற்றங்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளன என்று அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

மரண தண்டனைக்கு பரிந்துரைக்கப்படும் ஏனைய குற்றங்கள் தொடர்பில் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய தேவை உள்ளது. இந்த திருத்தம் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் நாட்டில் மரண தண்டனை நடைமுறைப் படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

இது தொடர்பில் அமைச்சர் கெஹெலிய மேலும் கூறியதாவது,

"மரண தண்டனையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றொரு கருத்து நாட்டில் இன்று நிலவி வருகின்றது. அரசாங்கமும் அதன் தேவையை தற்போது உணர்ந்துள்ளது - என்றார்.

## நிர்க்கதி...(தொடர்)

வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத்திட்டத்தை செயற்படுத்தவென இலங்கை வெளிநாடுகள் பலவற்றுடன் இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அகதிகள் தொடர்பான சர்வதேச அகதிகள் அமையமும் இத்திட்டத்திற்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளது.

## சட்டவிரோத அவுஸ்ரேலிய....(தொடர்)

குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், "சட்டவிரோத அவுஸ்திரேலியப் பயணமானது திட்டமிட்ட

சதியாக உள்ளது என தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில் தற்போது அவை தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அத்துடன், இந்த சட்டவிரோத பயணத்தை தடுத்து நிறுத்துவதற்காக எம்மாலான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றோம்.

அந்தவகையில், பொதுமக்களுக்கு விழிப்பூட்டும் விதமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் சில தயாரிக்கப்பட்டுள்ளன. இவை இன்று அல்லது நாளை முதல் ஒளிபரப்பப்பட்டு விழிப்புணர்வூட்டப்படவுள்ளன.

இந்த சட்டவிரோத பயணத்துக்காக சுமார் 10 இலட்சம் வரை செலவிடுகின்றனர். இந்த பணத்தின் மூலம் சட்டரீதியான முறையில் வெளிநாடுகளுக்குச் செல்வதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக்கொள்ள முடியும். இருப்பினும் அவ்வாறு செய்வதை விடுத்து இந்த சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

வெளிநாடுகளுக்கு அகதிகளாகச் சென்று அந்நாடுகளில் தஞ்சமடைதல் எனும் பிரச்சினை இலங்கையர்களுக்கு மாத்திரம் உரித்தானதல்ல. பல நாடுகள் இந்த பிரச்சினையில் சிக்குண்டுள்ளன. இருப்பினும், இவ்வாறான நடவடிக்கைகளுக்கு சட்டவிரோத பயணமே தீர்வு என்றில்லை. நாம் அந்த தீர்வுகளை நோக்கியே பயணிக்க வேண்டும்.

இந்த சட்டவிரோத பயணம் தற்போது பாதுகாப்பு பிரிவினராலேயே தடுக்கப்பட்டு வருகின்றன. இது விடயமாக அவுஸ்திரேலிய அரசாங்கத்துடன் தொடர்ந்தும் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றோம். இதனை ஒரு பிரச்சினையாகப் பார்க்குமாறு அந்நாட்டு அரசாங்கத்திடம் நாம் கோரிக்கை விடுத்துள்ளோம்" என்று அமைச்சர் மேலும் கூறினார்.

## விசாரணை... (தொடர்)

நேற்று நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாட்டின் போது, மேற்படி புலிக் கொடி விவகாரம் தொடர்பில் ஊடகவியலாளர் கேள்வி எழுப்பினார். இதற்கு பதிலளித்த அமைச்சர் ரம்புக்வெல்ல "விசாரிக்கப்படும்" என்றார்.

## செப்... (தொடர்)

இந்த அறிவிப்பை வெளியிட்டார். கிழக்கு மாகாண சபை தேர்தலில் போட்டியிடுவதற்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் இலங்கை தமிழரசுக் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி, உட்பட சுயேட்சைக் குழுக்கள் நேற்று வியாழக்கிழமை காலை மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் வேட்பு மனுக்களை தாக்கல் செய்தன.

## படையினர்க்குப் பயிற்சி....(தொடர்)

சேர்ந்த குறிப்பிட்ட சில குழவினரே குரலெழுப்பி பல்வேறு எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.

இவ்வாறான நடவடிக்கைகளுக்கு இந்திய அரசு ஆதரவு தெரிவிக்கும் பட்சத்திலேயே அது குறித்து இலங்கை கவலைப்படவோ அல்லது எதிரான நடவடிக்கைகளையோ முன்னெடுக்க வேண்டிய தேவையோ ஏற்பட்டிருக்கும்.

இந்தியாவின் ஒரு பிராந்தியமாக விளங்கும் தமிழ்நாட்டில், அரசியல் தேவைக்காகவே இலங்கைக்கு எதிரான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இருப்பினும் அதற்கு இந்திய அரசு ஆதரவு வழங்குவதில்லை.

அதற்கு சிறந்த உதாரணங்களாக புலிகளுக்கு எதிரான தடையை இந்திய அரசு நீடித்துள்ளமை மற்றும் தனிஈழம் கோரும் மாநாடு தொடர்பில் இந்திய அரசு கருணாநிதியை கண்டித்துள்ளமை போன்றவற்றைக் குறிப்பிட முடியும்.

இந்திய மத்திய அரசு இலங்கை அரசாங்கத்துடன் மிகவும் நெருக்கமான முறையில் செயற்பட்டு வருகின்றது.

இந்த உறவுக்கு களங்கம் ஏற்படுத்தும் முயற்சிகளிலேயே சில குழுவினர் செயற்பட்டு வருகின்றனர் என்று அமைச்சர் மேலும் கூறினார்.

## ஐந்து ...(தொடர்)

குழுவின் தலைவர் பேராசிரியர் சமரநாயக்காவை எதிர்வரும் 23.ஆம் திகதி ஆஜராகுமாறும் உச்ச நீதிமன்றம் நேற்று அறிவிப்பு விடுத்திருந்தது.

இலங்கை ஆசிரியர் சங்கம் மற்றும் மாணவர்கள் சிலரால் இஸற் புள்ளிகள் வெளியிடுவதில் ஏற்பட்டுள்ள காலதாமதம் குறித்து தாக்கல் செய்யப்பட்டது.

மனித உரிமைகள் மீறல் தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொண்டபோதே உச்ச நீதிமன்றம் இந்த அறிவித்தலை வழங்கியது.

கடந்த வருடத்துக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் பழைய மற்றும் புதிய பாடத் திட்டங்களுக்கமைய இஸற் புள்ளிகளை வெளியிடுமாறு உச்ச நீதிமன்றம் அறிவித்திருந்தது.

எனினும், அது குறித்து எவ்வித நடவடிக்கையும் முன்னெடுக்காததை யிட்டே பேராசிரியர் காமினி சமர நாயக்காவை எதிர்வரும் 23 ஆஜராகுமாறும் நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## பனை ஆராய்ச்சி நிலையம்....(தொடர்)

சிறுகைத் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இந்தியத் தூதுவர் அசோக் கே காந்தா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

பனை ஆராய்ச்சி நிறுவனத்தின் சகலவிதமான புனரமைப்புப் பணிகளும் பூர்த்தியாகியுள் நிலையில் இங்கு பயிலுநர்களாக நியமிக்கப்பட்டவர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நிறுவனத்தில் தரமான பனம் பொருட்களை உற்பத்தி செய்தல், உற்பத்திப் பொருட்களை நீண்ட காலப் பாவனையில் பயன்படுத்தல், புதிய உற்பத்திகளை கண்டறிதல், உற்பத்திப் பொருட்களுக்கான தரச்சான்றிதழ் வழங்குதல் போன்ற நடவடிக் கைகள் இடம்பெறும்.

## த.தே.மு...(தொடர்)

தாக்குதலை நடத்தியுள்ளனர்.

நெல்லியடியில் நேற்றைய தினம் நடைபெற்ற கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் ஏற்பாட்டாளர்களில் ஒருவரான இவர் தமிழ்த் தேசிய முன்னணியின் மே தின ஊர்வலத்தில் அறிவிப்பாளராக பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார்.

மேற்படி கழிவு ஒயில் வீச்சு, தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் கஜேந்திரன் ஆகியோர் சம்பவம் நடைபெற்ற வீட்டை நேரில் சென்று பார்வையிட்டனர். இதேவேளை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்களான ஆனந்தராசாவின் நெல்லியடியில் உள்ள வீட்டின் மீதும் மற்றும் காண்டீபனின் குடத்தனையில் உள்ள வீட்டின் மீதும் இதேபோன்ற தாக்குதல் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

இது தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## ஊழல் மோசடி, குற்றச் செயல். (தொடர்)

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் கெஹெலிய ரம்புக் வெல்ல மேற்கண்டவாறு குறிப்பிட்டார். மேலும் அவர் கூறுகையில்

குற்றச்செயல்களில் ஈடுபட்டார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் எவரும் இதுவரை குற்றவாளிகள் என நிரூபிக்கப்படவில்லை.

அதனால் அவர்கள் குற்றவாளிகள் என கூறிவிட முடியாது. அதேவேளை, இவ்வாறு குற்றச்சாட்டுக்களுக்கு இலக்கானவர்கள் அனைவரும் அரசாங்கத் தரப்பைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படும் கருத்தை நாம் மறுக்கின்றோம் என்றும் அமைச்சர் கூறினார்.

இருப்பினும், அவ்வாறான குற்றச்சாட்டுக்களுக்கு இலக்கானவர்களுக்கு வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. அத்துடன், அவர்கள் தேர்தலில் போட்டியிடுவதற்கான தற்காலிகத் தடையினை விதிக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவு பிறப்பித்துள்ளார் என்று அமைச்சர் மேலும் கூறினார்.

## நீதிபதியின் வீடு மீது....(தொடர்)

இடம்பெற்றுள்ளது. இந்தத் தாக்குதலில் வீட்டின் ஜன்னல் சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தாக்குதல் சம்பவத்தை கண்டித்து பருத்தித்துறை சட்டநூலகத்தில் சட்டத்தரணிகள் ஆட்சேபனை தெரிவிக்கும் கூட்டமொன்றினை நேற்று 19 ஆம் திகதி நடத்தியிருந்தனர். இதன்போது சட்டத்தரணி குமாரசுவாமி குறித்த தாக்குதல் சம்பவம் தொடர்பாக தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இருப்பினும் இந்தச் சம்பவம் குறித்து தமிழ்நாதம் பருத்தித்துறை நிருபர் பொலிஸாரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர்கள் சம்பவத்தை மறுத்துள்ளனர். இது இவ்வாறிருக்க நேற்றைய தினம் நீதிபதியின் வீட்டிற்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

# பருத்தித்துறை நவீன சந்தை 80 சதவீத வேலைகள் பூர்த்தி

பருத்தித்துறை நகரசபை 125 மில்லியன் ரூபா செலவில் நவீன சந்தையை நிர்மாணித்து வருகிறது. இந் நவீன சந்தையின் முதற்கட்ட கீழ்த்தள நிர்மாண வேலைகள் 'நெக்டெப்' திட்டத்தின் நிதி உதவியினால் 80 மில்லியன் ரூபா செலவில் ஏற்கனவே பூர்த்தியடைந்துள்ளது. இதில் கடைத் தொகுதிகள் அமைந்துள்ளன.

இரண்டாவது கட்ட மாடி வேலைகள் 'என்றிப்' திட்டத்தின் நிதி உதவியினால் 45 மில்லியன் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. மாடிக் கட்டடத்தில் நவீன சந்தையும் கடைத்தொகுதியும் அமைந்துள்ளன. இம் மாடிவேலைகளில் 80 சதவீதமான வேலைகள் முடிவுற்றுள்ளதாகவும், மிகுதி வேலைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாகவும், இவ் வேலைகள் பூர்த்தியானதும் சந்தை திறந்து வைக்கப்படுமெனவும் பருத்தித்துறை நகரசபைத் தவிசாளர் சட்டத்தரணி சபா.இரவீந்திரன் தெரிவித்தார்.



பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவை உலக வங்கியின் வதிவிடப் பிரதிநிதி டயறிஎற்றோ கே மற்றும் அவுஸ்திரேலியாவின் வெளிநாடுகளுக்கான உதவித்திட்ட ஆலோசகர் எட்வேட் அர்சிபால்ட் ஆகியோர் கொழும்பில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர். கடந்த 17 ஆம் திகதி நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது அவுஸ்ரேலிய உதவியுடன் இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

# செலான் வங்கித் தலைவருக்கு நீதிமன்றம் அழைப்பாணை

தனது கணக்கிலிருந்த பணம் கையாடப்பட்டுள்ளதாக வங்கியின் வாடிக்கையாளர் ஒருவர் செய்த மனு தொடர்பில் முன்னாள் சட்டமா அதிபரும் செலான் வங்கித் தலைவருமான மொஹான் பீரிஸை எதிர்வரும் 24ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கொழும்பு கோட்டை நீதிவான் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

நாவலவைச் சேர்ந்த முறைப்பாட்டாளரான ஷிரானி அனோமா துல்லெவ, கொழும்பு மோசடி விசாரணைப் பணியகத்தில் இது தொடர்பில் முறைப்பாடு செய்துள்ளார். 1995ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 4ஆம் திகதி செலான் வங்கியில் கணக்கு ஆரம்பிக்கப்பட்டபோது 22659 அமெரிக்க டொலர் மற்றும் 105,580 ரூபாவை வைப்பிலிட்டதாகவும் அவர் தனது முறைப்பாட்டில் கூறினார்.

2006ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17ஆம் திகதி வங்கிக்கு சென்ற தான், வைப்பிலிடப்பட்ட பணத்தின் இலாபத்தை தெரியப்படுத்துமாறு வங்கியிடம் கேட்டபோதிலும், அதனைத் தெரிவிக்க வங்கி தவறியதாகவும் அவர் தனது முறைப்பாட்டில் கூறினார்.

கோட்டை வங்கிக் கிளையைச் சேர்ந்த அதிகாரிகள் தனது பணத்தை கையாடியிருக்கலாம் என குற்றஞ்சாட்டியுள்ள அவர், இது தொடர்பில் விசாரணையை முன்னெடுக்குமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# இலங்கை-வியட்நாம் ஒப்பந்தங்களை துரிதமாக செயற்படுத்த திட்டம்

வியட்நாமுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ்க்கும் வியட்நாம் வெளிவிவகார அமைச்சர் பாம் பின் மின் ஆகியோருக்கும் இடையே முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

வியட்நாமின் ஹனோய் நகரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இச்சந்திப்பில் இரு நாடுகளுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளை துரிதமாக செயற்படுத்துவது குறித்து கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

2011 ஒக்டோபரில் இலங்கை வந்த வியட்நாம் ஜனாதிபதி ட்ரொங் டென் செங் அரசியல், பாதுகாப்பு, தேசிய பாதுகாப்பு, பொருளாதாரம், வர்த்தகம், முதலீடு, கலாசாரம் மற்றும் கல்வித் துறைகள் குறித்து இலங்கையுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்து கொண்டார்.

இந்த உடன்படிக்கைகளை துரிதகதியில் செயற்படுத்துவும் வர்த்தகம் மற்றும் வலய சர்வதேச விடயங்களில் இணைந்து செயற்படுவது குறித்தும் இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டுள்ளது.

2014 - 2015 இற்கான மனித உரிமை கவுன்சில் கூட்டங்களிலும் 2013 இல் நைஜீரியா ஆசிய - ஆபிரிக்க சட்ட ஆலோசனை அமைப்பில் சேரவும் வியட்நாமுக்கு ஆதரவளிக்க இலங்கை முன்வந்துள்ளது.

மேலும் சர்வதேச கடல் சட்டங்களுக்கு அமைய கடல் எல்லைப் பாதுகாப்பு விடயத்தில் இலங்கையும் வியட்நாமும் இணைந்து செயற்படத் தீர்மானித்துள்ளன.

# மருதடி குருமணல் கந்தசுவாமி ஆலய மகோற்சவம் 24ம் திகதி

பருத்தித்துறை புலோலி வடக்கு மருதடி அருள்மிகு குருமணல் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 24ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

பகல் உற்சவங்கள் தினமும் காலை 8.30 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகி, 9.30 ஸ்தம்ப பூசையும் 10.00 மணிக்கு வசந்த மண்டப் பூசையும் 11.30 மணிக்கு பகல் உற்சவங்களும் நடைபெறும்.

மாலை உற்சவங்கள் 4.00 மணிக்கு விசேட பூசைகளும் 4.30 மணிக்கு ஸ்தம்பப் பூசையும் 5.15 மணிக்கு வசந்த மண்டப பூசையும் 7.30 மணிக்கு மாலைத் திருவிழாக்கள் நிறைவு பெறும். பிரம்மஸ்ரீ ஏ.செல்வராசாக் குருக்கள் மகோற்சவ பிரதம குருவாக இருந்து திருவிழாக்களை நடாத்தடுவார்.

25ஆம் திகதி மகாவல்லி, கஜவல்லி உற்சவமும் 26ஆம் திகதி பக்திமுத்தி பாவனோற்சவமும் 27 ஆம் திகதி திருவிளக்குப் பூசையும் 28ஆம் திகதி தேவசேனப் பட்டம் திருநடனமும் 29 ஆம் திகதி மாம்பழத் திருவிழாவும் 31ஆம் திகதி சப்பறமும் 1ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 2ஆம் திகதி காலை தீர்த்தத் திருவிழாவும் மாலை 5.00 மணிக்கு கொடியிறக்கமும் 6.00 மணிக்கு சண்டேஸ்வரர் உற்சவமும் நடைபெறும்.

# யாழ்.மத்திய கல்லூரிக்கு விளையாட்டு உபகரணங்கள்

(மாவிட்டபுரம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் நீச்சல் பிரிவு மாணவர்களின் வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கில் யாழ்மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துறு சிங்காவினால் 25000 ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபர் எஜ்.கே.எழில்வேந்தனிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இராணுவ வீரர்களுக்கான நீச்சல் போட்டி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் நீச்சல் தடாகத்தில் இடம்பெற்றபோது யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் விளையாட்டுத்துறையை மேம்படுத்தும் நோக்கில் அன்பளிப்பாக 25000 ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் கல்லூரி அதிபரிடம் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துறு சிங்கவினால் வழங்கப்பட்டன.

இந்த நீச்சல் போட்டியில் 47 இராணுவ வீரர்கள் பங்குபற்றினர். இப்போட்டியின் போது யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவர்களுக்கிடையிலான நீச்சல் போட்டியும் இடம்பெற்றது. இதற்கான நிகழ்வில் கலந்து கொண்ட மஹிந்த ஹத்துறு சிங்க வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களையும் பதக்கங்களையும் வழங்கி கௌரவித்தார்.

## பயிற்சி பத்திரிகையாளர்களுக்கு ஒரு சந்தர்ப்பம்

தமிழ்நாதம் பத்திரிகையில் பயிற்சிப் பத்திரிகையாளர்களாகச் சேர விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் இருபது வயதுக்கு மேற்பட்டவராகவும் 40 வயதுக்குக் குறைவானவராகவும் இருத்தல் வேண்டும். ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். க.பொ.த சாதாரண தரம் அல்லது உயர்தரம் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பதாரிகள் தமது சுய விபரக்கோவையை அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்ப முடிவு திகதி 20.07.2012.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி.

பிரதம ஆசிரியர்,<br>
"தமிழ் நாதம்"<br>
267, நாவலர் வீதி,<br>
யாழ்ப்பாணம்.

## இன்றைய இராசி பலன் (20.07.2012)

நந்தன வருடம் ஆடித் திங்கள் 5ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**நட்சத்திரம்** : பூசம் நண்பகல் 12.36 வரை அதன் பின் ஆயிலியம்

**திதி** : பிரதமை முற்பகல் 10.32 வரை அதன் பின் துதியை

**சுபநேரம்** : 6.01 - 7.31 இராகுகாலம்: 10.31 - 12.01

(இந்த நேரங்கள் பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்)

**மேடம்** : ஏமாற்றம், மனக்குழப்பம், வீண்செலவு

**இடபம்** : பொருள் வரவு, சகோதர உதவி, சுக அனுபவம்

**மிதுனம்** : வாக்கு விரோதம், பொருள் நஷ்டம், திடீர் பிரயாணம்

**கடகம்** : குடும்ப சுகம், சுபசெய்தி, வாக்குச் சித்தி

**சிங்கம்** : பணவரவு, காரிய சித்தி, பெரியோர் ஆதரவு

**கன்னி** : தர்மசிந்தனை, தொழில் உற்சாகம், அதிகாரப்போக்கு

**துலாம்** : மனக்கஷ்டம், தொழில் குழப்பம், எதிர்பாராத இழப்பு

**விருச்சிகம்** : கைப்பொருள் இழப்பு, உஷ்ணரோகம், தந்தை வழியில் பிரச்சினை

**தனுசு** : தொழில் மாற்றம், வருமானமின்மை, பிரயாணத்தில் அவதானம்

**மகரம்** : மனச்சந்தோசம், நற்காரிய செய்தி, அந்நியர் உதவி

**கும்பம்** : காரியசித்தி, தொழில் மேன்மை, குடும்ப மகிழ்ச்சி

**மீனம்** : இடமாற்றம், யோசனை மிகுதி, நோயினால் கஷ்டம்

-சோதிடர் பா.இரத்தினசேகர்

# பருத்தித்துறை நீதிமன்ற சட்டத்தரணிகள், ஊழியர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம்





வல்வெட்டித்துறை

பருத்தித்துறை மாவட்ட நீதிவான் நீதிமன்ற சட்டத்தரணிகள் மற்றும் ஊழியர்கள் இணைந்து கண்டன ஆர்ப்பாட்ட பேரணி ஒன்றை நடாத்தியுள்ளனர்.

மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்றம் மீதான தாக்குதல் மற்றும் நீதவான் மீதான அச்சுறுத்தல்களைக் கண்டித்து இப் பேரணி நடைபெற்றுள்ளது.

பருத்தித்துறை மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் இருந்து நேற்று 19 ஆம் திகதி 12 மணிக்கு பொலிஸாரின் பாதுகாப்பு சகிதம் ஆண், பெண் ஊழியர்கள் மற்றும் சட்டத்தரணி துறைமுக வீதி ஊடாக பருத்தித்துறை நகர பஸ் நிலையத்தைச் சுற்றி பல்வேறு சுலோக அட்டைகளைத் தாங்கிய வாறும், கோசங்கள் எழுப்பியும் ஊர்வலம் சென்றனர்.

மீண்டும் நீதிமன்ற வளாகத்தை வந்தடைந்து பின் நீதிமன்றின் முன்னால் சில மணிநேரம் சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு அமைதியாக நின்றிருந்தனர்.

அவர்கள் பேரணியின்போது கைது செய்! கைது செய்! குற்றவாளியைக் கைது செய்! அச்சுறுத்தாதே அச்சுறுத்தாதே! நீதிபதியை அச்சுறுத்தாதே சட்டத்தை கையிலெடுக்காதே, தலையிடாதே நீதித்துறையில் தலையிடாதே "இன்று மன்னார் நாளை எங்கே சொல்" போன்ற கோசங்களை எழுப்பியவாறு எவ்விதத்திலும் பொது மக்களுக்கு இடையூறு விளைவிக்காத வகையில் கொடிய வெயிலில் வலம்வந்தனர். அத்துடன் பருத்தித்துறை நீதி வான் நீதிமன்ற சட்டத்தரணி களும் நேற்று முதல் இன்றுவரையும் வேலை நிறுத்தத்தையும் மேற் கொண்டிருந்தனர்.

## வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலய மகோற்சவம்

வேலணை பெருங்குளம், அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவமானது எதிர்வரும் 22ம் திகதி (22.07.2012) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து (12) பன்னிரண்டு தினங்களுக்கு திருவிழா இடம்பெறவிருக்கின்றது. எதிர்வரும் 29 ஆம் திகதி (29.07.2012) ஞாயிற்றுக் கிழமை ஆலய முன்றலில் மாபெரும் தீமிதிப்பு வைபவம் இடம்பெறவிருக்கின்றது. 30 ஆம் திகதி (30.07.2012) திங்கட்கிழமை இரவு ஆலயத்தில் பெரிய சப்பறத் திருவிழாவும் மறுதினமான 31 ஆம் திகதி 31.07.2012 தேர்த் திருவிழாவும் முதலாம் திகதி (01.08. 2012) புதன்கிழமை காலை ஆலயத் தீர்த்தத் திருவிழாவும் 2ஆம் (02.08.2012) இரவு பூங்காவனத் திருவிழாவுடன் ஆலயத் திருவிழாக்கள் முடிவடைகின்றன.

## கோண்டாவில் குட்டிசுட்டி முன்பள்ளி விளையாட்டு விழா நாளை மறுதினம்

கோண்டாவில் கிழக்கு, குட்டி சுட்டி முன்பள்ளியின் விளையாட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. இருபாலை வீதியிலுள்ள ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலைய முன்றலில் பிற்பகல் இரண்டு மணியளவில் விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகும். மேற்படி சனசமூக நிலையத்தினரும், குமரன் விளையாட்டுக் கழகத்தினரும் இணைந்து இந்த விளையாட்டு விழாவை நடத்துகின்றனர்.

பிரதம விருந்தினராக திரு.ஈ. எஸ்.பி. நாகரத்தினமும், சிறப்பு விருந்தினர்களாக கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய அதிபர் திரு. சண் வாமதேவன் மற்றும் லயன் த.இ.பாலசுந்தரம், நெடுந்தீவு இலங்கை வங்கி முகாமையாளர் திரு.கு. லவக்குமார் ஆகியோர் கலந்து கொள்வர். ஞாயிறு காலை 6.30 மணியளவில் ஆண் களுக்கான மரதன் ஓட்டப்போட்டி நடைபெறுமெனவும், விரும்பியவர்கள் யாவரும் இதில் பங்குபற்ற முடியுமென்றும் விழா ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

## வலிகாமம் வடக்கில் மீள்குடியேற்ற ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன



யாழில் உயர் பாதுகாப்பு வலயமாக இருந்து தற்சமயம் கட்டம் கட்டமாக மீள்குடியேற்றம் இடம்பெறும் பகுதிகளில் பொதுமக்களுடன் இணைந்து ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்களும் சிரமதான பணிகளில் பங்கெடுத்து வருகின்றனர்.

இன்றையதினம் மாவிட்டபுரம் வீமன்காமம் மகாவித்தியாலயம் மற்றும் அதனையண்டிய பிரதேசத்தில் பெருமெடுப்பில் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. ஏறக்குறைய இரண்டு தசாப்த காலத்திற்கு மேல் இடம்பெயர்ந்து வாழும் அம்மக்கள் தாம் மீண்டும் தம் சொந்த மண்ணில் மீளக்குடியேறப்போகும் நிலையில் உற்சாகத்துடன் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர். நாளைய தினம் இப்பகுதிகளுக்கு மின் விநியோகம் வழங்கப்பட உள்ளதும் மற்றுமோர் விடயமாகும்.

இச்சிரமதானப் பணிகளில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர்களும் பொதுமக்களும் ஈடுபட்டிருந்தனர். வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளர் சிறி மோகனனும் அங்கு பிரசன்னமாகி இருந்தார்.

## வடமாகாண கல்விமேம்பாடு பற்றிய கலந்துரையாடல்கள்

வடமாகாணக் கல்வி மேம்பாடு தொடர்பாக ஆராயும் கலந்துரையாடல்கள் எதிர்வரும் ஞாயிறு திங்கட்கிழமைகளில் நடைபெறவுள்ளன. வடமாகாண கல்வி அபிவிருத்திக் குழு இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை யாழ் நூலக கேட்போர் கூடத்தில் பிற்பகல் 4 மணியளவில் ஆரம்பமாகும்.

வேலணை மத்திய மகா வித்தியாலயத்தில் திங்கட்கிழமை காலை என்பது மணிக்குக் கலந்துரையாடல் ஆரம்பமாகும். வடமாகாணக் கல்வி அமைச்சின் அனுசரணையுடன் நடைபெறும் இக் கலந்துரையாடல் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சுயதொழில் முயற்சி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் முன்னிலையில் நடைபெறும்.

இக் கலந்துரை யாடல்களில் கலந்து கொள்ளுமாறு கல்வி ஆர்வலர்கள் அழைக் கப்படுகின்றனர்.

## யாழ். எப்.எம்.மில் நட்சத்திரப் பாடகர் போட்டி

வடக்கின் நட்சத்திரப் பாடகரை அடையாளம் காணும் முயற்சியில் யாழ். எப்.எம். வானொலி இறங்கியுள்ளது. பாடும் திறமை உடையவர்கள் விண்ணப்பங் களை ஜூலை 31ம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளனர். முன்னர் இதற்கான விண்ணப்ப முடிவு திகதி ஜூலை 15 என அறிவிக்கப்பட்டிருந்தது. விண்ணப்ப தாரிகளின் வேண்டுகோளுக்கு இணங்க மேலும் இரு வாரங்கள் நீடிக்கப்பட்டுள்ளது. விண்ணப்ப முடிவுத் திகதி மேலும் நீடிக்கப்பட மாட்டா என்றும் யாழ் எப்.எம். தெரிவித்துள்ளது.

## தனியார் ஆஸ்பத்திரிகளில் நிபுணத்துவ சேவையினை வழங்கும் சாதாரண வைத்தியர்கள்

### - மருத்துவ அதிகாரிகள் சங்கம்

வெளிநாடுகளிலிருந்து வருகை தந்துள்ள 184 சாதாரண வைத்தியர்கள் தனியார் மருத்துவமனைகளில் விசேட நிபுணத்துவ மருத்துவ சேவையில் ஈடுபடுவது தொடர்பான அதிர்ச்சித் தகவல்கள் தெரியவந்துள்ளது.

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் அதன் அலுவலகத்தில் நடாத்திய செய்தியாளர் மாநாட்டின் போது அரசாங்கத்தின் தலைவரான மருத்துவ நிபுணர் அனுருத்த பாதெனிய இத்த கவலைத் வெளியிட்டுள்ளார்.

இச் செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் குறிப்பிடுகையில் வெளி நாடுகளில் பணியாற்றும் இலங்கை மருத்துவர்கள் 184 பேர் கடந்த ஏப்ரல் மாதம் போது இலங்கைக்கு வந்து சேர்ந்துள்ளார்கள்.

இலங்கை ஆஸ்பத்திரிகளில் வெளிநாட்டு வைத்தியர்கள் கடமையாற்றுவதற்கு மருத்துவ ஒழுங்கு விதிகளின் 67 ஏ பிரிவின் கீழ் தற்காலிகமாக பதிவு செய்ய வேண்டும். இந்த அடிப்படையில் பதிவு செய்து கொண்டுள்ள சாதாரண மருத்துவர்கள்தான் தனியார் மருத்துவ மனைகளில் விசேட நிபுணத்துவ மருத்துவ சேவைகளில் ஈடுபடுகின்றனர்.

இவ்விடயத்தை அறிந்தும் உடனடியாக சுகாதார அமைச்சின் கவனத்திற்கு கொண்டு வந்ததுடன் வெளிநாடுகளிலிருந்து வந்துள்ள வைத்தியர்கள் விசேட நிபுணத்துவ மருத்துவ சேவையில் ஈடுபடுவதற்குரிய தகுதி தொடர்பாக பரிசோதனை செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், சுகாதார அமைச்சு வெளிநாடுகளிலிருந்து வந்து தனியார் மருத்துவமனைகளில் விசேட நிபுணத்துவ மருத்துவ சேவையில் ஈடுபடும் மருத்துவர்களின் தகுதியை பரிசோதிக்கும் வேலைத் திட்டத்தை மே மாதம் ஆரம்பித்தது. இதற்கேற்ப கிடைக்கப்பெற்ற 18 பேரின் விண்ணப்பப் படிவங்கள் பரீட்சிக்கப்பட்டுள்ளன. இதன்படி இந்த 18 பேரும் விசேட நிபுணத்துவ மருத்துவ சேவையில் ஈடுபடுவதற்குத் தேவையான எந்தத் தகுதியையும் கொண்டவர்களாக இல்லை என்பது கண்டறியப்பட்டிருக்கின்றது.

நிலைமை இவ்வாறு இருக்க வெளிநாடுகளிலிருந்து வருகை தந்துள்ள மேற்படி வைத்தியர்கள் தனியார் மருத்துவமனைகளில் சிறுவர் பெண் நோயியல் சத்திர சிகிச்சைகள் கண் மூக்கு காது எக்ஸ்ரே துறைகளுக்கான விசேட நிபுணத்துவ மருத்துவ சேவையில் ஈடுபடுகின்றனர்.

தகுதியில் லாதவர்கள் விசேட நிபுணத்துவ மருத்துவ சேவையில் ஈடுபடுவ தால் மக்களுக்கு ஏற்படும் பாதிப் புகளையும் மருத்துவ அதிகாரி கள் சங்கத்தினர் இச்செய்தியாளர் மாநாட்டின் போது விபரித்தனர்.

## 6 பேருக்கு மாட்டுக் கடனாக பன்னிரண்டு இலட்சம் ரூபா



பருத்தித்துறை இலங்கைவங்கி ஆறு பண்ணையாளர்களுக்கு மாடு வளர்ப்புக் கடனாக 12 இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளது. வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இக்கடனுதவிகள் வழங்கப்பட்டன.

இக் கடன்களை இலங்கை வங்கியின் இளைப்பாறிய உதவிப் பொது முகாமையாளர் எஸ்.பாலசுப்பிரமணியம், இளைப்பாறிய மாவட்ட முகாமையாளர் எஸ்.நடராஜலிங்கம் ஆகியோர் வழங்கினார்கள்.

# விலங்குவதை தடுப்பு கட்டளை சட்டத்தில் திருத்தம்: நடவடிக்கைகள் ஆரம்பம்

விலங்கு வதையை தடுப்பதற்காக, தொடர்புடைய கட்டளைச் சட்டங்களில் செய்யவுள்ள திருத்தங்களை வரையறை செய்வதற்கான ஏற்பாடுகள் தயாராகிவிட்டதாகவும் இந்த விடயம் தொடர்பான சில சட்டங்களுக்கு திருத்தங்களை வரையும் செயற்பாடுகள் நடைபெறுவதாகவும் விலங்கு வதையை தடுப்பது தொடர்பான வழக்கில் பிரதி வாதிகள் சார்பில் ஆஜரான வழக்குரைஞர்கள் மேன்முறையீட்டு நீதிமன்றில் குறிப்பிட்டுள்ளனர்.

தர்மவிஜய மன்றம், அதன் தலைவர் ஒல்கொட் குணசேகர, ஸ்ரீபோதிராஜ மன்றம், வண. ஓமல்பே சோபித தேரர், வண. போவத்த இந்திரரட்ண தேரர், பிரான்சிஸ்கன் சமூக சகோதரர் லயனல் பீரிஸ், இலங்கை மிருக பாதுகாப்பு சங்க உதவித் தலைவர் லொறைன் மார்கரெட் பிபிலே, அதன் செயலாளர் ஷர்மினி தெசிறீ ரட்நாயக்க, மிருக நலன்புரி நம்பிக்கை நிறுவனத் தலைவி இராங்கனி டீ சில்வா, அதன் தர்மகர்த்தா விசாக திலகரத்ன, குமுதினி சரவணமுத்து, தேவக ஆட்டிகல, லாலனி சேரசிங்க பெரேரா, மயூர திஸ்ஸ பிபிலே, நிகிட்டா ரவின் திசேரா, டாக்டர் சமித்த நாணயக்கார, டாக்டர் உதய விஜயவர்தன, காமினி வனகரட்ண ஆகியோர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

இம்மனு தொடர்பான விசாரணை நீதியரசர்கள் ஸ்ரீஸ்கந்தராஜா, தீபாலி விஜேசுந்தர ஆகியோர் முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தபோதே பிரதிவாதிகளின் வழக்குரைஞர்கள் மேற்படி தகவலை தெரிவித்தனர். திருத்தங்களை சமர்ப்பிக்க கால அவகாசம் வழங்க வேண்டும் அவர்கள் கோரினர். இதனையடுத்து வழக்கு விசாரணை செப்டெம்பர் 3 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# மருதங்கேணியில் சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய விழிப்புணர்வு

சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துக் காணப்படுகின்ற நிலையில் மாணவர்களுக்கான சிறுவர் துஷ்பிரயோகம தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கொன்று குடத்தனை மகா வித்தியாலத்தில் இடம்பெற்றது.

மருதங்கேணி பிரதேச செயலகத்தின் அனுசரணையுடன் சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்தில் இருந்த தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கான உக்திகளை கையாளுதல் மற்றும் சிறுவர் உரிமை தொடர்பாகவும், மாணவர்களின் கடமைகள், ஒழுக்க நெறிகளை கடைப்பிடிப்பது தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டு, சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான விளக்கப்படமும் காண்பிக்கப்பட்டது.

இப்பாடசாலையில் 80க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு தமது சந்தேகங்களையும், தம்மை பாதுகாத்துக் கொள்வதற்கான வழிமுறைகள் பற்றியும் கேள்விகள் மூலமும் பதில்கள் மூலமும் தெளிவுபடுத்திக் கொண்டுள்ளனர்.

அதேவேளை, சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான விளக்கங்கள் யாழ். சென்ஜேம்ஸ் வித்தியாலயம் மற்றும், புனித சாள்ஸ் மகா வித்தியாலயம் போன்ற பாடசாலைகளிலும் மாணவ, மாணவிகளுக்கு பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் சிறுவர் உரிமைகள் தொடர்பாகவும் விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

# காட்டு யானைகள் தாக்குதல்: நெற் களஞ்சியம் சேதம்

வவுனியா ஆறுமுகத்தான் புதுகுளத்தில் உள்ள வவுனியா பலநோக்கு கூட்டுறவுச் சங்க நெல் களஞ்சிய சாலையை யானைகள் தாக்கியுள்ளன. இதனால் பல இலட்சம் பெறுமதியான நெல் மூடைகளை சேதமாகியுள்ளதாக வவுனியா பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் தெரிவித்தார்.

இச்சம்வபவம் கடந்த புதன் கிழமை இடம்பெற்றுள்ளது.

நெற்களஞ்சியசாலையின் பிரதான வாயிற்கதவினை உடைத்து உட் சென்ற யானைகள் அங்கு அடுக்கி வைக்கப்பட்டிருந்த நெல் மூடைகளை சேதப்படுத்தியுள்ளன. அத்துடன் கட்டடத்தையும் சேதப்படுத்தியுள்ளன.

இக் களஞ்சியசாலையில் சுமார் ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாவுக்கு நெல் கொள்வனவு செய்யப்பட்டு வைக்கப்பட்டிருந்த நிலையில் யானைகள் இதனைச் சேதப்படுத்தியுள்ளன.

# கீரிமலை கோயில் காளை மாட்டை பெருமளவானோர் பார்வையிட்டனர்

வலிகாமம்

இந்து மக்களிடையே பெரும் சர்ச்சையை உருவாக்கிய காளை மாட்டை பார்வையிடுவதில் பொது மக்கள் பெருமளவில் முன்டியடித்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

கடந்த சில மாதங்களுக்க முன்னர் கால்நடைத்தினைக்களத்தில் இருந்து விற்பனை செய்யப்பட்ட காளை மாட்டை கொள்வனவு செய்த வியாபபாரி அதனை இறைச்சிக்காக வெட்ட விளம்பரம் செய்த நிலையில் நீதிமன்றத்தை நாடி காளை மாடு வியாபாரியிடம் இருந்து மீட்க்கப்பட்டு கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயத்தில் ஒப்படைக்கப்பட்டது.

குறிப்பிட்ட காளை மாடு கிரிமலை நகுலேஸ்வரத்தில் வளர்க்கப்பட்டு வரும் நிலையில் ஆடி அமாவாசைக்கு வந்த பொது மக்கள் பலரும் இந்த மாட்டைப் பார்வையிடுவதிலும் அதிக அக்கறை எடுத்துக்கொண்டதையும் காணக்கூடியதாக இருந்தது.

# திருவிழா

வலிகாமம்

அளவெட்டி கணேஸ்வரம் தெல்லிப்பளை குருக்கள் கிணற்றடி அருள் மிகு விநாயகர் ஆலய ஆண்டுப் திருவிழா 23 ஆம் திகதி திங்கள் கிழமை பகல் 11.00 மணிக்கு இடம்பெறும் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்களாக நடைபெறவுள்ளது.

நாளை 21ம் திகதி செவ்வாய்க் கிழமை பகல் 10.00 மணிக்கு தேர்த்திருவிழாவும் 01ம் திகதி பகல் 10.30 மணிக்கு தீர்த்த உற்சவமும் இடம்பெறவுள்ளது.

# வீதி விளக்குகள் இன்மையால் இருளில் மூழ்கும் வவுனியா நகரின் வீதிகள்

வவுனியா நகரசபைக்குட்பட்ட பல வீதிகளில் மின் விளக்குகள் பொருத்தப்படாமல் காணப்படுவதால் இரவு நேரத்தில் வீதிகள் இருளில் மூழ்கிக் கிடப்பதாக வவுனியா நகர வரியிறுப்பாளர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இது தொடர்பில் வவுனியா நகர வரியிறுப்பாளர் சங்கம் மேலும் தெரிவித்துள்ளதாவது.

வவுனியா நகர பிரதான வீதிகள் மற்றும் சிறு வீதிகளில் மின் விளக்குகள் பொருத்தப்படாமையினால் இரவு வேளைகளில் இப்பாதை வழியாக போக்குவரத்த மேற்கொள்ளும் பாதசாரிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

இதேவேளை நகரப்பகுதியில் திருடர்களின் தொந்தரவும் அண்மைக்காலமாக அதிகரித்து காணப்படுகின்றது. இந்நிலையில் தெரு விளக்குகளை பொருத்தி மக்களுக்கு சாதகமான போக்குவரத்து வசதியினை செய்து தருமாறு பல தரப்பினருக்கும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

நகரசபையின் சில உறுப்பினர்கள் மின் விளக்குகள் பொருத்தப்படும் என அறிக்கை விடுத்து பல மாதங்களாகியும் இது வரை மின் விளக்குகள் பொருத்தப்படாமல் காணப்படுகின்றன.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் மின் விளக்குகளை பொருத்துவதற்காக பல இலட்சம் ரூபா பெறுமதியான மின் விளக்குகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தும் அவை பயன்படுத்தப்படாமல் தேங்கிக்கிடக்கின்றன என மேலும் தெரிவிக்கப்படுகிறது.

# சைவப்புலவர் குமரனுக்கு 'சொல்லின்ப நாயகன்' பட்டம்

(அளவெட்டி)

அளவெட்டி பத்தானை ஞான வைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவ பெருந்திருவழாவில் 13 தினங்கள்கம்பராமாயணம் என்னும் தலைப்பில் தொடர் சொற்பொழிவாற்றிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் ஆசிரியர் சைவப்புலவர் எஸ்.ரி.குமரனுக்கு சொல்லின்ப நாயகன் என்னும் சிறப்புப்பட்டம் ஆலய பரிபாலன சபையினரால் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

இலங்கார உற்சவத்தின் இறுதித்தினத்தினத்தன்று ஆலய பரிபாலன சபைச் செயலாளரும் கிராம வலுப்படுத்தலுக்கான இணையத்தின் தலைவருமான எஸ்.முருகையா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஆலய பரிபாலன சபைத் தலைவர் கு.சுமனனால் இப்பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் கம்பராமாயணம் சொற்பொழிவு விடயப்பரப்பில் மாணவர்களிடையே நடாத்தப்பட்ட வினாடிவினாப்போட்டி பேச்சு போட்டி ஆகியவற்றில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



551 ஆவது படையணியினர் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள தரம்-05 இற்கான புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கான ஒருநாள் வழிகாட்டல் செயலமர்வு ஒன்றை நடத்தினர். செம்பியன்பற்றில் நடைபெற்ற இந்த செயலமர்வில் 300 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டனர். யாழ்.மாவட்டத்தில் பின்தங்கிய பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டு மேற்படி கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் இராணுவ அதிகாரிகள், கல்வித் திணைக்கள அதிகாரிகள் மற்றும் ஆசிரியர்கள் கலந்துகொண்டனர். பத்துக்கும் மேற்பட்ட துறைசார் அனுபவமுள்ள ஆசிரியர்கள் மாணவர்களுக்கான கருத்துரைகளை வழங்கினர். இதேவேளை 521 ஆவது படையணியினரும் பருத்தித்துறையில் இதேபோன்று மற்றுமொரு கருத்தரங்கு ஒன்றினை ஏற்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாதம்
Thamil Naatham
ஜூலை மாதம் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை

## பனை ஆராய்ச்சி நிறுவனம் பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு துணை

யுத்த காலத்தில் நாசமாக்கப்பட்ட பனை ஆராய்ச்சி நிறுவனம், இன்று முற்றுமுழுதாகப் புனரமைக்கப்பட்ட நிலையில் புதிய மெருகுடன் திறந்து வைக்கப்படுகிறது. பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச இன்று முற்பகல் பதினொன்றரை மணியளவில் கைதடியில் அமைந்துள்ள இந்த நிறுவனத்தைத் திறந்து வைக்கிறார். 1995ஆம் ஆண்டு இடம்பெற்ற 'சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கையின் போது ஏற்பட்ட மோதலில் இந்த நிலையம் பலத்த சேதத்துக்கு இலக்கானது. சுமார் மூன்று இலட்சம் மக்களை இந்த மூன்றாம் கட்ட ஈழப்போர் யாழ் மண்ணை விட்டு இடம்பெயரவும் செய்தது.

1986இல் ஸ்தாபிக்கப்பட்டது இந்தப் பனை ஆராய்ச்சி நிறுவனம். இங்கு தரமான பனம் பொருட்களை உற்பத்தி செய்தல், உற்பத்திப் பொருட்களை நீண்ட காலத்துக்குப் பழுதுபடாமல் வைத்திருத்தல், புதிய உற்பத்திப் பொருட்களைக் கண்டறிதல், உற்பத்திப் பொருட்களுக்குத் தரச் சான்றிதழ் வழங்குதல் போன்ற நடவடிக்கைகள் இடம்பெற்று வந்துள்ளன.

இந்த நிறுவனத்தின் புனரமைப்பு வேலைகள் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கென எழுபது மில்லியன் ரூபாவினை இந்தியா செலவு செய்திருக்கிறது. இலங்கை இந்தப் புனரமைப்புப் பணிகளுக்காக 42 மில்லியன் ரூபாவைச் செலவிட்டிருக்கிறது.

பனை மரத்தை எமது முன்னோர்கள் கற்பகதரு எனப் பெயரிட்டு அழைத்து வந்திருக்கிறார்கள். அந்தளவுக்கு வளங்களை அள்ளித்தரும் பனை வளம் வடபகுதி எங்கும் வியாபித்திருக்கிறது. கள்ளிறக்குதல், கருப்பநீர் உண்டாக்குதல், பெட்டி - பாய் இழைத்தல், பனையோலைகளை வேலிக்குக் கிடுகாகப் பயன்படுத்துதல் என்று பனையிலிருந்து பெறப்படும் பயன்களைப் பட்டியலிட்டுக் கொண்டே போகலாம். பனையிலிருந்து பெறப்படும் பலன்களையும், வளங்களையும் நவீனமயப்படுத்தி உள்நாட்டில் மட்டுமல்ல வெளிநாடுகளிலும் சந்தை வாய்ப்புகளைப் பெறுவதற்கு இந்தப் பனை ஆராய்ச்சி நிறுவனம் பெரிதும் பயன்பட்டிருக்கிறது.

இந்து சமயம் கட்டிக்காத்த வர்ணாச்சிர தர்மத்தின் விரிவாக்கமாக அல்லது அதன் வெளிப்பாடாகத் தோன்றிய சாதியமைப்புக்குப் பனையோடு சம்பந்தப்பட்ட தொழில்களும் காரணமாகின. பனை, தென்னை மரங்களில் கள் சீவுவோர் மற்றும் பனையோடு சம்பந்தப்பட்ட சில தொழில்களைச் செய்வோர் தாழ்த்தப்பட்ட சமூகத்தினரென வகைப்படுத்தப்பட்டனர். இந்த சமூகங்களைச் சேர்ந்த மக்கள் அடக்கியொடுக்கப்பட்டனர். யாழ்ப்பாணக் கிடுகுவேலி நாகரிகத்தின் சமூக அமைப்புக் கட்டிக்காத்த மரபார்ந்த அம்சங்கள் பல கொடூரமானவை. குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்த மக்கள் ஆலயங்களுக்குள் செல்ல முடியாது, பாடசாலைகளில் கல்வி கற்க வாய்ப்புக் கிடையாது, மேல்சட்டை போட முடியாது. இப்படி நயினார் பரம்பரை விதித்த கொடூரங்கள் காணாமல் போய் ஒரு ஆறு தசாப்தங்கள் கூடக் கடந்திருக்காது. அந்தக் கொடூரங்களின் மிச்ச சொச்சங்கள் இன்னமும் சில யாழ்ப்பாணக் குக் கிராமங்களில் நிலவத்தான் செய்கின்றன.

மரவரிமுறை, தவறணை முறை என்று கடந்த கால அரசாங்கங்கள் கொண்டுவந்த சில விதிமுறைகள், பொருளாதாரத் தட்டுகளில் தாழ்த்தப்பட்ட மக்கள் என்று கூறப்பட்டவர்கள் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு வழி சமைத்துக் கொடுத்தது. வடபுலத்தில் சமசமாஜிஸ்டுகளும், கம்யூனிஸ்டுகளும் நடத்திய அஹிம்சைப் போராட்டங்களும், ஆயுதப் போராட்டங்களும் ஆலயங்களின் கதவுகளை மட்டுமல்ல, ஆண்டவர்களின் கண்களையும் திறக்க வைத்தன. இதனால் சாதியமைப்பும் சரிவைச் சந்தித்தது.

பனை அபிவிருத்திச் சபையின் ஓர் அங்கமாகவே இன்றைய பனை ஆராய்ச்சி நிலையம் திறந்து வைக்கப்படுகிறது. குறிப்பிட்ட சமூகத்திற்கென யாழ்ப்பாணத்துக் கிடுகு வேலிகள் கட்டிக் காத்து வந்த மரபார்ந்த அம்சங்களைத் தகர்த்தெறிவதில் பனை சார்ந்த நிறுவனங்களும் பங்காற்றியிருக்கின்றன. காலத்தின் வளர்ச்சிப் போக்கும் அனைத்தையுமே மாற்றி அமைந்திருக்கின்றன.

இன்று திறக்கப்படும் பனை ஆராய்ச்சி நிறுவனம் எமது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, தொழில் வாய்ப்புகளைப் பெருக்க, உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் சந்தை வாய்ப்புகளை தேட எனப் பல முனைகளில் உதவும். இன்னொரு வகையில் சொல்வதானால் எமது மக்களைப் பொறுத்தவரை, ஒருவகையில் ஒரு கற்பகதருதான்.

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-2219506, பக்ஸ்: 021-2219505
e-mail: tnaatham@yahoo.com

# மதச் சார்பின்மை எனும் அரசியல் மாண்பு

**இந்தியாவில் கிரஹாம் ஸ்டேன்ஸ் என்பவர் தனது இரு சின்னஞ்சிறு புதல்வர்களுடன் மத வெறியர்களால் உயிரோடு கொளுத்தப்பட்டார். இந்த மத வெறி நடவடிக்கையைக் கண்டித்து மதுரை டோக் டேபீஸ் கல்லூரியில் கிரஹாம் ஸ்டேன்ஸ் அறக்கட்டளை நிறுவனம் சார்பாக நிகழ்த்தப்பட்ட உரையின் பகுதி இங்கே தரப்படுகிறது.**

மதச்சார்பின்மை என்பதற்கு வெப்ஸ்டர் அகராதி தரும் வரையறை - "பொதுக் கல்வியும் குடிமைக் கொள்கை சம்பந்தப்பட்ட இதர விஷயங்களும் மதக்கூறு ஏதுமின்றி நடத்தப்பட வேண்டும் என்கிற கண்ணோட்டம்" மதம் என்பது தனிமனித நம்பிக்கை எனும் தெளிவான முடிவுக்கு வந்து, குடிமக்களின் பொது விவகாரங்களிலிருந்து அதை விலக்கி வைப்பது என்பதே மதச்சார்பின்மை ஆகும். ஒரு நாட்டிலுள்ள சகல மதங்களுக்கும் அந்த நாட்டின் அரசமைப்பு உள்ளிட்ட பொது விவகாரங்களில் சம அந்தஸ்து தருவதல்ல மதச்சார்பின்மை. அது இந்தக் கோட்பாட்டிற்கு நேர்விரோதமான நடைமுறையாகிப் போகும். ஒரு மதத்திற்குப் பதிலாக பல மதங்களின் தலையீடு பொது வாழ்வில் இருக்கும் என்பது மதச்சார்பின்மை ஆகாது. அது பல மதச் சார்பு ஆகிப் போகும். "சம அந்தஸ்து" என்பதற்கு வரையறை தரமுடியாமல் பெரும்பான்மை சிறுபான்மை மதங்களுக்கிடையே மோதலை உருவாக்குவதில் கொண்டு போய்விடும்.

அரசமைப்பு - அரசியல் செயல்பாடு உள்ளிட்ட பொது விவகாரங்களில் இருந்து மதங்களை விலக்கி வைப்பது என்பது இயல்பானதாகப்படுகிற போதிலும் இந்தியாவில் அது அண்மைக்காலத்தில் ஏற்பட்ட கருத்தோட்டமே. சுதந்திர இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டம் 1950 ஜனவரியில் ஏற்கப்பட்டது. அதன் முகவுரையில் "சுயாதிபத்திய ஜனநாயகக் குடியரசு" என்று மட்டுமே இருந்தது. "மதச்சார்பற்ற" எனும் சொல் 1975 - 77 அவசரநிலை ஆட்சி காலத்தில் செய்யப்பட்ட திருத்தங்களின்போதுதான் சேர்க்கப்பட்டது.

அரசியலமைப்புச் சட்டப் புத்தகத்தில் "மதச்சார்பற்ற அரசு" எனும் சொல்லாட்சி இடம் பெற்றுவிட்டது. ஆனால் நடைமுறையில் என்ன? இந்திய அரசு மதச்சார்பற்றதாகத்தான் உள்ளதா? இந்திய அரசியல் வாழ்வு அப்படித்தான் உள்ளதா?

சுதந்திர இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவர் ராஜேந்திர பிரசாத்தும் உள்துறை அமைச்சர் வல்லபாய் படேலும் சோமநாதர் ஆலயத்தை அரசு செலவில் அமைக்கும் வேலையில் தீவிரமாக இறங்கினார்கள். நேருகூட பெரும் எதிர்ப்பு காட்டவில்லை. காந்திஜிதான் எதிர்த்தார். ஆலயம் எழுப்ப வேண்டும் என்றால் இந்துக்கள் தங்கள் சொந்தப் பணத்தில் எழுப்ப வேண்டுமே தவிர அரசுப் பணத்தில் அல்ல என்றார். ஒரு தனிமனிதர் தன்னளவில் மத நம்பிக்கையாளராக இருப்பதற்கும், ஆட்சியாளர் என்ற முறையில் மதச்சார்பற்றவராக இருப்பதற்கும் இடையில் இருக்க வேண்டிய கண்டிப்பான வித்தியாசத்தைச் சுட்டிக்காட்டினார். ஓர் ஆழ்ந்த மதநம்பிக்கையாளரான காந்திஜியிடமிருந்து வந்த எதிர்ப்பு மிகுந்த அர்த்தபாவமுடையது. இதற்கெல்லாம் சேர்த்துத்தான் அவரது உயிரைப் பலி கொண்டது இந்து மதவெறி.

1949 டிசம்பர் 22 - 23 நள்ளிரவில் அயோத்தியின் பாபர் மசூதியில் ராமர் சிலை கள்ளத்தனமாக வைக்கப்பட்டது. இதற்கு உதவி செய்தவர் அங்கே மாவட்ட கலெக்டராக இருந்த கே.கே.நாயர். இந்த அடாவடித்தனத்தை எதிர்க்க முன்வரவில்லை காங்கிரஸ் ஆட்சி. முஸ்லிம் மதத்தவர் வழிபடும் இடத்தில் - விக்கிரக ஆராதனையை ஏற்காதவர்கள் இடத்தில் - ராம விக்கிரகத்தைக் கொண்டு போய் வைத்தார்கள். இது சட்டம், ஒழுங்கு மீறல். ஒருவருக்குச் சொந்தமான இடத்தில் இன்னொருவர் அத்துமீறிப் புகுவது. அந்த விக்கிரகம் அங்கிருந்து அப்போதே அகற்றப்பட்டிருந்தால் எவ்வளவோ பிரச்சினைகள், உயிர்வாதைகள், படுகொலைகள் தவிர்க்கப்பட்டிருக்கும். அரசோ இந்துமதச் சார்புத்தன்மையோடு நடந்து கொண்டது. இப்போது பிரதான எதிர்க்கட்சியாக வளர்ந்து நிற்கிற பி.ஜே.பியோ அன்று ஜன சங்கமாக இருந்தபோது அந்த கே.கே.நாயரை எம்.எல்.ஏவாக, எம்.பியாக ஆக்கி அழகு பார்த்தது.

இப்போது வந்திருக்கிற அலகாபாத் உயர்நீதிமன்றத் தீர்ப்பு 450 ஆண்டுகளாக முஸ்லிம்களுக்கு இருந்த அனுபோக பாத்தியதை உரிமையைக் கூடக் கணக்கில் கொள்ளாமல் மசூதிக்குள் ராமர் சிலை வைக்கப்பட்ட இடம் இந்துக்களுக்கே சொந்தம் என்று அநியாயத் தீர்ப்பு தந்துள்ளது. அதை அரசியல் கட்சிகள் வரவேற்ற விதம் அதனினும் அநியாயமானது. அரசமைப்பில், பிரதான எதிர்க்கட்சியில், நீதிமன்ற அமைப்பில், பல அரசியல் கட்சிகளில் மதச்சார்புச் சிந்தனை, குறிப்பாக இந்துத்துவா சிந்தனை எப்படி ஊடுருவிக் கிடக்கிறது என்பதற்கு இது கச்சிதமான உதாரணம். கம்யூனிஸ்டுக் கட்சிகள் மற்றும் முலாயம் கட்சி இந்தத் தீர்ப்பை எதிர்த்து நிற்கின்றன என்பது சற்றே நிம்மதி தரும் விஷயம்.

இந்திய அரசு மதச்சார்பற்ற அரசு என்று சட்டப்புத்தகத்தில் இருந்தாலும் அது பெரும்பான்மை மதமாகிய இந்து மதச் சார்பு அரசாகவே உள்ளது என்பதற்கு அதன் வேறு பல செயல்பாடுகளும் எடுத்துக்காட்டுகளாக உள்ளன. அரசு நிகழ்ச்சிகள் பலவும், குறிப்பாகத் திறப்பு விழாக்கள் பலவும் இந்து சாஸ்திர, அதாவது பிராமணிய முறைப்படியே நடைபெறுகின்றன. பல மதத்தவரும் அல்லது மத நம்பிக்கையற்றவரும் கொடுத்த வரிப்பணத்தில் அரசுத் திட்டங்கள் உருவாக்கப்பட்டவை என்கிற உணர்வே இல்லை. அரசு அலுவலகங்களில் இந்து சாமி படங்கள் இருக்கின்றன. கல்லூரி - பல்கலைக்கழகங்களில் சரஸ்வதி பூஜை நடத்தப்படுகிறது. ஒரு நூலகத்திற்குப் பொறுப்பாளராக ஒரு முஸ்லிம் இருந்தால் அவர் பாடு திண்டாட்டம்தான். அவர் ஏற்காத விக்கிரக ஆராதனை அவர் கண் முன்னாலேயே நடைபெறும். இதனினும் கொடுமை இது தவறு என்கிற உணர்வே அரசு மற்றும் பொதுத்துறை ஊழியர்களிடத்தில் இல்லாதது. அதிகாரிகளைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை.



இதுவெல்லாம் சிறுபான்மை மதத்தவர் உள்ளத்தில் தாங்கள் இரண்டாந்தரக் குடிமக்கள் எனும் எண்ணத்தை உருவாக்குகிறது. அல்லது, அரசு அலுவலகங்களில் இந்து மத விழாக்கள் கொண்டாடப்படுவது போலத் தங்கள் விழாக்களும் கொண்டாடப்பட வேண்டும் எனும் கோரிக்கையைக் கிளப்புகிறது. ஆனால் சிறுபான்மையினர் என்கிற காரணத்தாலேயே அது சாத்தியமில்லாமல் போகிறது. "சகல மதங்களிடமும் அரசு சமத்துவம்" என்பது காரிய சாத்தியமில்லாதது என்பதை இது தெளிவாக உணர்த்துகிறது. ஒரே வழி அரசு நிறுவனங்களிலிருந்து சகல மதங்களையும் ஒதுக்கி வைப்பதுதான். அரசு ஊழியர்கள் அவரவர் வீட்டில் தத்தம் மத அனுஷ்டானங்களைச் செய்ய வேண்டுமே தவிர அவர்கள் பணிபுரியும் இடங்களில் அல்ல.

பொதுவாழ்வை மதத்திலிருந்து பிரித்து வைக்காமல் இரண்டையும் போட்டுக் கலக்கிற வேலை ஒரு புறம் நடக்கிறது என்றால், மறுபுறம் மதத்தைத் தனிவாழ்வாக நடத்துவதில் இடையூறுகள் செய்யப்படுகின்றன.

(7ஆம் பக்கம் பார்க்க.)

# பாலியல் குற்றச்சாட்டில் அக்குரஸ்ஸ பிரதேச சபை தலைவர் உட்பட நான்கு பேர் பதவி நீக்கம்

பாலியல் குற்றச்சாட்டு அமர்த் தப்பட்டுள்ள அக்குரஸ்ஸ பிரதேச சபைத் தலைவர் உட்பட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 4 உறுப்பினர்கள் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

பெண்ணொருவரையும் சிறுமி யொருவரையும் பாலியல் துஷ்பிர யோகத்திற்கு உட்படுத்தியதாக எழுந்த குற்றச்சாட்டைத் தொடர்ந்து பிரதேசசபைத் தலைவருக்கும் 4 மாகாணசபை உறுப்பினர்களுக் கும் எதிராக கடுமையான ஒழுக் காற்று நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளதாக இன்றைய ஊடகவிய லாளர்கள் சந்திப்பில் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறி சேன தெரிவித்துள்ளார்.

"அக்குரஸ்ஸ பிரதேசசபைத் தலைவர் உட்பட சில மாகாண சபை உறுப்பினர்களின் தவறான நடவடிக்கையால் அரசாங்கம் விமர்சிக்கப்பட்டது. இவர்களுக்கு எதிராக உறுதியான ஒழுக்காற்று நடவடிக்கையை எடுத்துள்ள நாங் கள், இவர்களை பதவிகளிலிருந்து பணிநீக்கம் செய்துள்ளோம் என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் மாகாணசபைத் தேர் தலில் அரசாங்கம் வெற்றியடை யும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை எனத் தெரிவித்த அமைச் சர், கிழக்கு மாகாணம் பாரிய அபிவிருத்தி நடவடிக்கை களில் முன்னேற்றம் கண்டுள்ள நிலை யில் மக்கள் அரசாங்கத் தரப்பின் பக்கமே இருக்கின்றனர் எனவும் அவர் கூறினார். தேர்தலை கையாள முடியாத ஐக்கிய தேசியக் கட் சிக்கு பிரசா ரங்களுக்காக அர சாங்க வளங் களை பயன்படுத் துவதாக அர சாங்கத்தின் மீது குற்றஞ்சாட்டு வதற்கு எந்வித உரி மையும் இல்லை எனவும் இது சட் டத் திற்கு எதிரானது என்பது ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட் டமைப்புக்கு தெரியும் எனவும் அமைச்சர்.

# நாஸி காலத்து யுத்த குற்றவாளி 97 வயதில் கைது

அடொல்ப் ஹிட்லர் காலத்து 97 வயது முக்கிய யுத்த குற்ற வாளி ஒருவர் ஹங்கேரி நாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார். பல தசாப்தங்களாக தேடப்பட்டு வந்த க்சிசிக் சதடி என்ற நாசிக் காலத்து சிலோவாக்கிய நாட்டு பொலிஸ் பிரதானியே கைது செய்யப்பட்டுள்ளார்.

சுமார் 15, 700 யூதர்களை ஹிட்லரின் வதை முகாம்களுக்கு நாடுகடத்தியதாக இவர் மீது குற்றச்சாட்டு சுமத்தப் பட்டுள் ளது. கடந்த 1948 ஆம் ஆண்டு சதடி மீது மரண தண்டனை விதிக் கப்பட்டதைத் தொடர்ந்து அவர் தனது அடையாளத்தை மாற்றி கனடாவுக்கு தப்பிச் சென் றுள்ளார்.

இந்நிலையில் கடந்த 1997 ஆம் ஆண்டு இவரது உண் மையான அடையாளம் தெரிய வந்தபோது கடந்த 15 ஆண்டு களாக தேடப்பட்டு வந்தார். இந் நிலையில் கடந்த திங்கட்கிழமை ஹங்கேரி தலைநகரில் வைத்து சதடி கைது செய்யப்பட்டார்.

# நாய் வளர்ப்பினால் தர்க்கம்

வலிகாமம்

கொக்குவில் கிழக்கில் நாய் வளர்ப்பதினால் ஏற் பட்டவாய்த்தாக்கத்தைத் தொடர்ந்துபிரபலபாடசாலை யின் அதிபர் ஒருவரினால் அயலவர் தாக்கப் பட்டுகாயங்களுக்கஉள்ளாகியநிலையில் யாழ்ப்பா ணம் போதனாவைத்தியசாலையில் சிகிச்சைக் காக அனு மதிக்கப்பட்டசம்பவம் ஒன்று இடம் பெற்றுள் ளது.

கொக்குவில் கிழக்கு இராமகிருஸ்னா பாடசாலை ஒழுங்கையில் இந்தசம்பவம் கடந்த மூன்றுநாட் களுக்குமுன்னர் இடம் பெற்றுள்ளது.

இதுசம்பந்தமாகதெரியவருவதாவது. குறிப்பிடட்ட அதிபரின் நாயினால் அயலவர் நாளாந்தம் பல சிரமங்களுக்கும் உள்ளாகிவருவதாகவும் இதனை தொடர்ந்துகுறிப்பிட்டநாயைகட்டிவளர்க்கும் படி கூறி யதைத் தொடர்ந்து இருவருக்கும் இடை யேவாய்த் தர்க்கம் ஏற்பட்டநிலையில் இத் தாக்குதல் சம்பவம் இடம் பெற்றதாகவும் பாதிக்கப்பட்வரினால் தெரிவிக் கப்படுகின்றது. இது சம்பந்தமாகபொலிஸார் விசார ணையைமேற் கொண்டுள்ளார்கள்.

# யுத்தத்துக்குப் பின்னரான அபிவிருத்தி பற்றிய கூட்டத்தொடர் இன்று ஆரம்பம்

யாழ் பல்கலைக்கழக சர்வதேச ஆய்வு மாநாடு ஏற்பாடு செய்த யுத்தத்துக்குப் பின்னரான அபிவி ருத்தி பற்றிய அங்குரார்ப்பணக் கூட்டத் தொடர் இன்று காலை 9.00 மணிக்கு ரில்கோ யப்னா சிற்றி ஹோட்டலில் ஆரம்பமா கிறது. காலை 10.30 மணி வரை இந்த அங்குரார்ப்பண கூட்டத் தொடர் ரில்கோ ஹோட்டலில் நடைபெறும். இதனையடுத்து முக்கிய மற்றும் தொழில்நுட்ப கூட்டத் தொடர்கள் யாழ் பல் கலைக் கழகத்தின் பிரதான வளாகத்தில் இன்றும் நாளையும் இடம்பெறுமென நிகழ்ச்சித் திட்டத் தலைவரான பேராசிரியர் எஸ்.சிவசற்குண ராஜா தெரிவித்துள்ளார்.

# விவசாயிகளுக்கு வரட்சி நிவாரணம் வழங்க ரூ. 3665 மில். ஒதுக்கீடு

- விதை நெல் இலவசமாக வழங்க ஏற்பாடு

வரட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவதற்காக 3665 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

36 ஆயிரம் ஹெக்டயர் வயல் நிலம் வரட்சிய யினால் பாதிக்கப்பட்டுள்ளது. ஒரு ஏக்கர் பயிருக்கு 4 ஆயிரம் ரூபா வீதம் வழங்கவும் இலவசமாக விதை நெல் வழங்கவும் நடவடிக்கை எடுத்துள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனா தெரிவித்துள்ளார். 23/2 நிலையியற் கட்டளையின் கீழ் அநுரகுமார திசாநாயக்க எம்.பி. எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தார்.

## சட்டவிரோதமாக நாட்டிலிருந்துவெளியேறிய 67 பேர் வென்னப்புவ கடலில் கைது

வென்னப்புவவிலிருந்து 8 கடல் மைல்களுக்குஅப்பால் 67 இலங்கையர்களைஏற்றிச் சென்றமற்றுமொரு படகுநேற்றுமுன்தினம் புதன்கிழமை கடற்படையின ரால் இடைமறிக்கப்பட்டுள்ளது. இப்படகில் 13 சிங் களவர்களும் 54 தமிழர்களும் மாகமொத்தம் 67 பேர் இருந்துள்ளனர். கொழும்பு, நீர்கொழும்பு, வென்னப் புவ, யாழ்ப்பாணம், அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என தெரியவருகிறது.

## சமரச முயற்சிகள் வெற்றி மன்னாரில் பதற்றம் நீங்கியது

மன்னாரில் புதன்கிழமை காலை ஏற்பட்ட அசம் பாவிதங்களை அடுத்து இரண்டு நாள்ளாக நிலவிய பதற்றம் நீங்கி, நிலைமை வழமைக்குத் திரும்பி யுள்ளது. மன்னார் உப்புக்குளம் பிரதேச மீனவர் களுக்குச் சொந்தமான கேந்தப்பிட்ட மீனவ துறை யினை விடத்தல் தீவு மீனவர்கள் தமதாக்கிக் கொண்ட தால் இரு பிரசேசிகளிடையேயான மோதல்கள் ஏற்பட்டன. இதன் எதிரொலியாகவே உப்புக்குள மக்கள் கடந்த புதனன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# இன்றைய சிந்தனை

## மரணத்தை மற, வாழ்வை நேசி

- கன்ஃபூசியஸ்

வாழ்க்கையைப் பற்றியே உனக்கு ஒன்றும் தெரியாதபோது மரணம் பற்றி நீ என்ன தெரிந்துகொள்ள முடியுமா?

ஒரு சமயம் கன்ஃபூசியஸிடம் ஒருவன் மரணம், மரணத்திற்கு பின்னர் உலகம் என்பது குறித்து வினவியபோது, இவர் சொன்ன பதில் இதுதான். "நாம் யாவரும் இது குறித்தும் சற்று நாம் யோசிக்க வேண்டும். மரணம் என்பது நிச்சயம். பிறக்கும் போதே மரணமும் நிச்சயிக்கப்பட்டு விடுகிறது. இது இயற்கை தவிர்க்க முடியாதது. தடுக்கவும் முடியாதது. நாம் அந்த அளவோடு விட்டுவிட வேண்டும். மரணபயம் அவசியமே இல்லை. மரணம் வரும் வந்தே தீரும். அது வரும் வரை வாழ்வோம்" இது போதுமே.

இந்த உலகம் இந்த வாழ்க்கை. இந்த மனிதர்கள் பற்றியே நாம் விரிவாக., சரியாக அறிந்து கொள்ள இயலாத நிலையில், பிடிபடாத, குழப்பமான மரணத்திற்குப் பின் என்ன என்பது குறித்த எண்ணம் ஏன்?

மரணம் என்பது முடிபு. அதோடு சரி. அது எல்லோருக்கும் உரியது. மாவீரன் அலெக்ஸாண்டரும் மரணத்தை சந்தித்தான். நெப்போலியன் இறந்துதான் போனான். பரமஹம்சரும் .. விவேகானந்தரும் இறந்துதான் போனார்கள். யாரும் விதிவிலக்கில்லை. நமக்கும் மரணம் உண்டு. வரும்போது வரட்டும். அதுவரை வாழ முயற்சிப்போம்.

வாழ்க்கை என்பது பெரிய புதிர் அல்ல. கிடைக்கும் காலம் வரை வாழ்வோம். மகிழ்ச்சியாய் இருப்போம். அன்பு செலுத்துவோம். ஆதரவைக் காட்டுவோம். உறவை வளர்ப்போம். பிறருக்கு உதவி செய்வோம்.

வாழ்க்கை நம் கையில்தான் இருக்கிறது. மரணம் வேண்டுமானால் இறைவன் கையிலோ, விதியின் கையிலோ காலனின் கையிலோ இருந்துவிட்டுப் போகட்டும். மரணம் நாம் வாழும் வரை வரப்போவதே இல்லை. வந்து பிறகு நாம் இருக்கப் போவதே இல்லை. பின்னர் எதைத்தான் நாம் சொல்வது? மரணம் மறந்து வாழ்வை நேசிப்போம்.

# வடக்கு அதிவேக நெடுஞ்சாலை மதிப்பீட்டுப் பணி அணி நிறுவனத்திடம்

வடக்கு அதிவேக நெடுஞ்சா லையின் நிர்மாணப் பணி தனக் குரிய மதிப்பீட்டைச் செய்வதற் கான பணி அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த நிறுவனமொன்றுக்கு வழங் கப்பட்டுள்ளது.

இதற்கான அமைச்சரவைப் பத் திரத்தை நெடுஞ்சாலை அமைச்ச ரென்ற வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமைச்ர வைக்குச் சமர்ப்பித்திருந்தார். 2007 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான பத்து வருடகாலப் பகுதிக்குள் ஆறு அதிவேக நெடுஞ்சாலைகள் இலங்கையில் நிர்மாணிக்கப்பட வுள்ளன. அதில் ஒன்றே வடக் கின் அதிவேக நெடுஞ்சாலை.

# 21 மில்லியனுக்கும் அதிகமான வெளிநாட்டு பணத்துடன் ஒருவர் கைது

21 மில்லியன் ரூபாவிற்கும் அதிகமான வெளிநாட்டு பணத் துடன் வந்த ஒருவர் கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதி காரிகளால் நேற்றுக் காலை கைது செய்தனர்.

9506 என்ற விமானத்தில் சார்ஜா நோக்கிப் பயணிக்கவிருந்த வர்த்தகர் ஒருவர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரின் பயணப் பொதியை சுங்க அதிகாரிகள் சோதனை செய்தபோது அதில் அதிக வெளிநாட்டு பணம் இருந் தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதில் அமெரிக்க டொலர், யூரோ மற்றும் குவைத் தினார் என்பன இருந்துள்ளன.

கைது செய்யப்பட்டவரிடம் விசா ரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சுங்க அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

# மதச் சார்பின்மை....

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி..)

ஒரு மதச்சார்பற்ற அரசுக்கு இரண்டு கடமைகள் உண்டு. ஒன்று, அது தன்னளவில் எந்தவொரு மதத்தையும் சார்ந்திருக்கக் கூடாது, எந்தவொரு மதக் கூறையும் தனது செயல்பாட்டில் கலக்கக் கூடாது. இரண்டு, தனது குடிமக்களுக்கு அவரவர் விரும்பும் மதத்தைப் பின்பற்ற, பரப்ப உரிமை தரவேண்டும். அந்த உரிமையைப் பாதுகாத்து நிற்க வேண்டும். அதுபோல எந்தவொரு மதத்தைப் பின்பற்றாமலிருக்கிற உரிமையையும் காத்து நிற்க வேண்டும்.

நமது அரசியலமைப்புச் சட்டத்தின் சரத்து 25 (1) மிகத் தெளிவாகக் கூறுகிறது: "பொது ஒழுங்கு, ஒழுக்கம், சுகாதாரம் மற்றும் இந்தப் பிரிவின் இதர சரத்துக்களுக்கு உட்பட்டு அனைவருக்கும் சமமான மனசாட்சி சுதந்திரமும், சுதந்திரமாக மதத்தைப் போதிக்கிற, பின்பற்றுகிற, பரப்புகிற உரிமையும் உண்டு." இது அடிப்படை உரிமைகளில் ஒன்றாகத் தரப்பட்டுள்ளது. ஆனால் நடைமுறையில் இந்த உரிமை சிறுபான்மை மதத்தவருக்கு இருக்கிறதா என்பது கேள்விக்குறியாகி வருகிறது.

யாருடைய நினைவாக இந்தச் சொற்றொடர் ஆற்றப்படுகிறதோ அந்த கிரஹாம் ஸ்டேன்ஸ் தன்து இரு சின்னஞ்சிறு புதல்வர்களுடன் உயிரோடு கொளுத்தப்பட்டார். இந்தப் படுபாதகத்தைச் செய்த இந்துமத வெறியன் தாராசிங்கிற்கு மரண தண்டனை தர உச்சநீதிமன்றம் மறுத்து விட்டது. இந்தப் படுகொலை "அபூர்வத்திலும் அபூர்வமல்ல" என்று சப்பைக்கட்டு கட்டியது மட்டுமல்லாது, "கிறிஸ்தவ மதப் பிரச்சாரம் செய்ததற்கு புத்தி புகட்டவே இந்தக் கொலை செய்யப்பட்டது" என்று சொல்லி அதை நியாயப்படுத்துவது போலத் தீர்ப்புக் தந்தது. மனித உரிமையாளர்கள் மற்றும் முற்போக்கு அறிவு ஜீவிகளின் கடும் எதிர்ப்புக்குப் பிறகே உச்சநீதிமன்றம் அத்தகைய சில வாசகங்களை வாபஸ் பெற்றது. இதன் அர்த்தம் தெளிவானது. இந்து மதத்தை மட்டுமல்ல, இந்துத்துவ எனும் இந்து மதவெறிக் கோட்பாட்டைப் பிரச்சாரம் செய்யவும் இங்கே உரிமை உண்டு. ஆனால், கிறிஸ்துவப் பிரச்சாரம் செய்யமுடியாது.

அரசியலமைப்புச் சட்டத்தில் பொறிக்கப்பட்டுள்ள மதச்சார்பின்மையிலிருந்து இந்திய அரசு விலகிச் செல்கிற அபாயம் இன்று அதிகரித்துள்ளது. பிரதான எதிர்க்கட்சியாக நாடாளுமன்றத்திலும் வெளியிலும் எழுந்துள்ள பி.ஜே.பி. தனது லட்சியமாக "இந்து ராஷ்ட்ரம்" என்பதைக் கொண்டுள்ளது. அது இந்து சமயச் சார்பு அரசாகும், சமயச்சார்பற்ற அரசு என்பதற்கு நேர் எதிரானதாகும். அதன்படி முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் போன்ற மதச்சிறுபான்மையினர் இந்த நாட்டில் அடங்கி ஒடுங்கி இரண்டாந்தரக் குடிமக்களாக நடக்க வேண்டும். இது இந்தியாவின் ஒற்றுமை மற்றும் வளர்ச்சிக்கு மிகப்பெரும் கேட்டை விளைவிப்பது, இங்கே ரத்தக் களரியை உருவாக்குவது என்பது பட்டப்பகல் வெளிச்சம் போன்ற உண்மை.

# வறட்சியால் பரிதவிக்கும் மண்டை தீவுக்கு குளிர்ச்சி கிட்டுமா?

சப்த தீவுகளில் தலைத்தீவாக விளங்கி வரும் மண்டைதீவு யுத்தம் முடிவுற்று சமாதானம் மலர்ந்து நீண்டகாலமாகியும் மக்களின் அடிப்படை பிரச்சனைகள் தீராத நிலையில் இருந்து வருகின்றது. ஆகவே இனியும் தாமதியாது மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை தீர்த்து மீளக் குடியேறாத மக்களை அவர்கள் சொந்த இடமான மண்டைதீவுக்கு மீளக்குடியேற்ற நவடிக்கை எடுக்கப்படவேண்டும்.



மண்டைதீவில் பெரும் பிரச்சினையாக இருப்பது குடிநீர்ப்பிரச்சினையாகும் தற்போது காணப்படும் வெப்ப அதிகரிப்பினால் இங்குள்ள நீர்நிலைகள் வற்றியுள்ளன. மக்கள் தமது அன்றாடத் தேவைக்கு நீரைப் பெற்றுக் கொள்வதற்கு பெரும் சிரமப்படுகின்றனர். வேறு இடங்களில் இருந்து இங்குள்ள தொட்டிகளுக்கு அடிக்கப்படும் தண்ணீரைக் கூட பொதுமக்கள் முழுமையாகப் பெற்றுக் கொள்வதில் பல இடையூறுகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

யுத்த அனர்த்தங்களால் உடைந்துபோன உவர் நீர்த்தடுப்பு அணைக்கட்டுகள் மீண்டும் புனரமைக்கப்பட்டு கடந்த முறை பெரும் போர் நெற்செய்கையில் ஈடுபட்டனர் விவசாயிகள். இருப்பினும் எதிர்பாராத விதமாக பலத்த நட்டமடைந்துள்ளனர். நெல் விளையும் காணிகளில் உவர் நீர் உட்புகுந்து உவர் மணற்தரை யாகியதே இதற்குக் காரணமாகும்.

விளைநிலங்களில் அடி உரம் போட்டு இரண்டு மூன்று முறை விளைநிலத்தை உழுத பின்புதான் எதிர்காலத்தில் விவசாயிகள் கூடுதல் நெல் விளைச்சல் ஏற்படும் என பாதிக்கப்பட்ட விவசாயி ஒருவர் தெரிவ-ித்துள்ளார். இம்முறை பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசு ந்ட ஈடு வழங்க முன்வரவேண்டும்.

முழுக்க விவசாயத்தினை நம்பி வாழ்க்கை நடத்திவரும் மக்கள் இதனால் ந்டம் ஏற்பட்டு நெற்செய்கையில் ஆர்வம் குன்றி வருகின்றனர். இங்கு மீனவர்களும் விவசாயிகளும் சுயதொழிலைச் செய்து காலம் காலமாக மிகவும் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர். அவர்களைப் பொறுத்தவரையில் ஆழ் கடலுக்குச் சென்று பாரிய கடலுணவுகளைப் பிடித்து திருப்திகரமான முறையில் தங்கள் தொழிலைச் செய்து பெரும் தொகைப் பணத்தைச் சம்பாதித்து வருகின்றனர்.

கடந்த முறை பெரும் போக நெற்செய்கையில் ஈடுபட்ட அனேக விவசாயிகள் எதிர்காலத்தில் சிறுபோக விவசாயத்தில் ஈடுபடவுள்ளனர் எனத் தெரியவருகிறது. இதேவேளை வருடாவருடம் புகையிலைச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் புகையிலைச் செய்கையில் ஆர்வம் காட்டாது அதற்குப் பதிலாக வெங்காயச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ்.குடாநாட்டில் பெருந்தொகையானவர் வெங்காயச் செய்கையில் ஈடுபட்டு வரும்போது வெங்காயத்தின் விலை குறையவில்லை. இதேவேளை யாழ்.குடாநாட்டில் அராலி போன்ற இடங்களில் பெரியவெங்காயச் செய்கையில் நல்ல பலன் கிடைப்பதாக இப் பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

ஆனால் ஒரு கிலோ பெரிய வெங்காயத்தின் விலை 80 ரூபா வரை விற்கப்படுகிறது. இது இவ்வாறிருக்க மண்டைதீவு அரசினர் வைத்தியசாலை இந்த ஆண்டு புனரமைக்கப்படும் என்று அரச அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக பத்திரிகை ஊடாக அறியமுடிந்தது.

ஆனால் இதுவரை எதுவித புனரமைப்பு வேலைகளும் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை. மக்கள் வைத்தியத் தேவைக்கு யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சென்று வருகின்றனர்.

மண்டைதீவில் பெரும் பிரச்சினையாக இருப்பது குடிநீர்ப்பிரச்சினையாகும் தற்போது காணப்படும் வெப்ப அதிகரிப்பினால் இங்குள்ள நீர்நிலைகள் வற்றியுள்ளன. மக்கள் தமது அன்றாடத் தேவைக்கு நீரைப் பெற்றுக் கொள்வது பெரும் சிரமப்படுகின்றனர். வேறு இடங்களில் இருந்து இங்குள்ள தொட்டிகளுக்கு அடிக்கப்படும் தண்ணீரைக் கூட பொதுமக்கள் முழுமையாகப் பெற்றுக் கொள்வதில் பல இடையூறுகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஒரு சிலர் அளவுக்கதிகமாக தண்ணீரை அள்ளிச் செல்வதால் தட்டுப்பாடு ஏற்படுகிறது. தற்போது நிலவும் வறட்சி நிலையால் தண்ணீர்த் தட்டுப்பாடு தீவுப் பகுதி களுக்கு ஒரு பெரும் பிரச்சினையாக இருந்து வருகிறது. யுத்தம் முடிவடைந்த பின்னரும் பல தேர்தல்கள் வந்து போயுள்ளன. அவற்றில் எல்லாம் இப்பகுதி மக்கள் தமது அத்தியாவசியப் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என வேண்டியே ஒற்றுமையாக வாக்களித்தார்கள். ஆனால் இன்று வரைக்கும் அவர்களால் முன்வைத்த எந்தப் பிரச்சினையும் முழுமையாக தீர்க்கப்படவில்லை என்பதே வெளிப்படையான உண்மையாகும்.

யாழ்.குடாநாட்டில் உள்ள தீவுப் பகுதிகளில் தண்ணீர்ப் பிரச்சினை ஒரு பெரும் பிரச்சினையாகவே நீண்டு செல்கின்றது. இதனைத் தீர்ப்ப தற்காக பல வழிகளில் முயற்சி செய்து வருகின்றோம். அதன் ஒரு கட்டமாகவே கடந்த ஆண்டு அல்லைப்பிட்டியில் இருந்து மண்டைதீவுக்கு குழாய் மூலம் குடி தண்ணீர் விநியோகத்தை தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சு செய்து கொடுத்தது. இந்நீர் விநியோகம் ஆரம்பித்து சிறிது காலம் மண்டைதீவு மக்கள் தண்ணீர்ப் பிரச்சினை இன்றி இருந்தார்கள். ஆனால் தற்போது இந்த நீர்விநியோகக் குழாய்கள் சில விஷமி களால் சேதமாக்கப்பட்டுள்ளதால் மண்டை தீவு மக்கள் தண்ணீரை முழுமையாகப் பெறமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.


எமது வேலணைச் சபைப் பிரிவில் 30 கிராம சேவகர் பிரிவுகள் உள்ளன. இதில் 27 பிரிவுகளில் நீண்டகாலமாக தண்ணீர்ப்பிரச்சினை இருந்து வருகிறது. இந்த இடங்களுக்கு பவுசர் மூலம் தொடர்ச்சியாக தண்ணீரை விநியோகித்து வருகின்றோம். சாட்டிப் பகுதியில் மட்டுமே இந்தக் கிராமங்களுக்குத் தேவையாக தண்ணீரைப் பெற்றுக் கொள்கின்றோம். இங்கே தான் ஊர்காவற்துறை பிரதேச சபை மற்றும் இராணுவத் தரப்பினர், தனியார் நிறுவனங் களும் பவுசர் மூலம் தண்ணீரை எடுத்துச் செல்கின்றன. இதனால் தற்போது இங்கு தண்ணீருக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டு வருகிறது. எனவே தான் எல்லாப் பிரதேசங்களுக்கு தண்ணீரை முழுமையாக விநியோகிக்க முடியவில்லை. தீவுப் பகுதிகளில் நிலவும் இந்த நீண்டகாலப் பிரச்சினைகளுக்கு தீர்வாக யாழ் கிளிநொச்சி குடிதண்ணீர் விநியோகம் அமையும் என எதிர்பார்க்கின்றோம். இத்திட்டத்தின் மூலம் தண்ணீர் இங்கு வந்து சேர்வதற்கு மூன்று வருடங்கள் காத்திருக்க வேண்டியுள்ளது.

JKWSS என்ற இத்திட்டத்திற்காக 20 ஆயிரம் கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மிக விரைவாக இத்திட்டம் நிறைவேற்றப்படுமிடத்து 2016ஆம் ஆண்டளவில் இத்தீவுப் பகுதிகள் தண்ணீர்ப் பிரச்சினையிலிருந்து விடிவு பெறும் என செயலாளர் - வேலணைப் பிரதேச சபை தெரிவித்துள்ளமை வரவேற்கத்தக்கது.



நன்றி - இணையம்

# வடக்கின் அபிவிருத்தியின் அடுத்த மைல்கல் நிலாவரை



அமைதியான சூழல், மருது, வேம்பு, வாகை மரங்கள் ஓங்கி வளர்ந்து நிழல் பரப்பும் ரம்மியமான சோலை, கால் பதித்தால் நிறமூட்டும் செம்மண், மண் வளத்தை எடுத்துக் காட்டும் பயிர்ச்செய்கைச் சுற்றாடல், பருகும் போது மீண்டும் பருகத்தூண்டும் நீர் வளம், வந்தாரை வரவேற்கும் வீதியோர வர்த்தக நிலையங்கள், வற்றாத நீர் நிலையான ஆழ் கிணறு, அத்தனையும் உற்று நோக்கிய வண்ணம் கோயில் கொண்டிருக்கும் நவசைலேஸ்வரர் ஆலயம், அத்துடன் யுத்த வடுக்களை தாங்கி நிற்கும் கட்டிட இடிபாடுகளுடன் அழகிய சுற்றாடல் கொண்டதுதான் நிலாவரை.

புத்தூர் மேற்கில் அமைந்துள்ள இந்த அமைவிடம் யாழ் நகரில் இருந்து 16 ஆவது கிலோ மீற்றரில் யாழ் நகருக்கு வடதிசையில் அச்சுவேலி நோக்கிச் செல்லும் இராசவீதியும் புத்தூர் சுன்னாகம் நெடுஞ்சாலையும் சந்திக்கும் முச்சந்திக்கும் வடக்குப் புறமாக உள்ளது. வலி கிழக்குப் பிரதேச செயலளர் பிரிவின் வடமேற்கு எல்லையில் வலிகிழக்கு பிரதேச சபையின் புத்தூர் உப அலுவலகத்தின் உள்ளூராட்சி ஆளுகைக்கு உட்பட்டது.

நிலாவரை என அழைக்கப்படும் இந்த அமைவிடம் நவக்கிரி, அச்செழு, கலைமதி, சிறுப்பிட்டி கிராமங்களுக்கு நடுவிடத்தில் அமைந்திருப்பதோடு புத்தூர் கமநல சேவை நிலையம் சுதேச வைத்திய திணைக்களத்தின் மூலிகைத் தோட்டம், கமநல சேவை திணைக்களத்தின் உரக்களஞ்சியம், வாதாரவத்தை குடிநீர் விநியோகத்திட்டத்திற்கான நீரை வழங்கும் தேசிய வடிகாலமைப்பு குடி நீர் விநியோக அதிகார சபையின் ஆழ் துளைக்கிணறு பாதுகாப்பு தரப்பினரின் நிலாவரை இராணுவ முகாம் பாதுகாப்பு தரப்பினரால் நிர்மாணிக்கப்பட்ட அறு கோண கூரை அமைப்புக் கொண்ட முருகன் கோயில் படையினரின் தேனீர்சாலையுடன் கூடிய விற்பனை நிலையம் மற்றும் சில குடும்பங்களின் வாழ்விடங்களான இல்லங்களையும் கொண்டது.

அண்மைக்காலம் வரை மிக அமைதியாகவும் ஆள் அரவமற்ற பிரதேசமாகவும் காணப்பட்டது. உள்ளூர் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஒரு சில வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் பார்வைக்கும் வழிப்போக்கர்கள் மற்றும் விவசாயிகள் இளைப்பாறிச் செல்லும் இடமாகவும் விளங்கியது. ஏ9 பாதை திறக்கப்பட்டு இயல்பு நிலை ஏற்பட்டதை அடுத்து வெளிமாவட்டங்களில் இருந்து யாழ் குடா நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப்பயணிகளின் தரிசனத்துக்கு தப்பிவிடாமல் உற்று நோக்கப்படும் மிக முக்கியமான சுற்றுலா மையம். நளாந்தம் வெளிமாவட்ட சுற்றுலாப்பயணிகளின் வாகனங்கள் பல ஒரே நேரத்தில் தரித்து நிற்பதையும் பல நூற்றுக் கணக்கான பயணிகள் ஆறுதலாக அமர்ந்திருந்து உண்டு மகிழ்ந்து வருவது கண்கொள்ளாக் காட்சியாகும்.

தென்னிலங்கையிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிக-ளின் கண்ணில் படாமல் நிலாவரை தப்புவது இல்லை. அது மட்டுமல்ல நிலாவரைச் சூழலை தமது கமராக்கள் வீடியோ பதிவுகளுக்கு உள்ளாக்காமல் விடுவதும் இல்லை. சுற்றுலாப் பயணிகளை வரவேற்பதற்கும் யாழ் மாவட்டத்துக்குச் சிறப்பாக உரிய பனம் பண்டங்களையும், பனையோலை கைப்பணிப் பொருட்களையும், யாழ்ப்பாணத்து சின்ன வெங்காயத்தையும், மாம்பழத்தையும் விற்பதற்கு நடை-பாதை விற்பனை நிலையங்கள் மணிப்பிரவாள நடையில் சிங்களத்தையும் தமிழையும் கலந்து பேசும் நடைபாதை வியாபாரமும் பார்ப்போரை கவர்ந்திழுக்காமல் இல்லை. அது மட்டுமல்ல தென்னிலங்கை கைப்பணிப்பொருள் கித்துள் பனங்கட்டி, பல்வேறு வகையான வளையல்கள் மற்றும் உணவு நிலையங்களும் வகை வகையாக வந்தோரை வரவேற்றவண்ணம் உள்ளன. மேலும் விசாலமான சிற்றுண்டிச் சாலைகளும் தமிழ், சிங்கள சிறப்புச் சிற்றுண்டிகளும் சைவ உணவு அசைவ உணவு வகைகள் உள்ளடக்கியதாக உள்ளன.

நிலாவரைக்கும் நவசைலேஸ்வரத்துக்கும் பூர்வீகமான புராண இதிகாச கதைத் தொடர்புகளும் கர்ண பரம்பரைக் கதைத் தொடர்புகளும் பல உண்டு. அந்த வகையில் இராம பிரான் தமிழ் வேந்தன் இராவணனை சங்காரம் செய்து விட்டு வடநாடு திரும்பும் போது ஸ்தாபித்த தலம் தான் நவசைலேஸ்வரம் என்றும் அவரது அம்பினால் தோண்டப்பட்டது தான் நிலாவரை வற்றாத நீர் நிலை என்றும் கூறப்படுவது உண்டு.

நிலாவரை வற்றா நீர் நிலை மற்றும் நவசைலேஸ்வரம் தொடர்பாக இராமயணத்துடன் தொடர்புபடுத்தியும் கர்ணபரம்பரையாகவும் பல்வேறு கதைகள் சம்பவங்கள் கூறப்பட்ட போதிலும் நிலாவரை வற்றாநீர் நிலைக்கு புவியியல் ரீதியிலான விஞ்ஞான விளக்கமும் நவசைலேஸ்வரத்துக்கு பூர்வீக வரலாற்றோடும் சிவன் வழிபாட்டோடும் தொடர்பான வரலாறும் உண்டு. இது உண்மைதான் என்பது சில சான்றுகள் மூலம் உறுதி செய்யப்படுகின்றது.

நல்லூர் இராசதானிக் கால ஆலயங்கள் பற்றிக் கூறும் போது தக்கிணகைலாய புராணத்தின் நவசைப்படலத்தில் புத்தூரில் இருந்த சிவன் கோயில் பற்றியும் அதன் கேணி பற்றியும் நந்தவனம் பற்றியும் கூறப்படுவதோடு குறித்த ஆலயத்தை வழிபட்ட அடியார்கள் பெற்ற நன்மைகள் பேறுகள் பற்றியும் கூறப்பட்டுள்ளன. இதில் குறிப்பிடப்படும் சிவன் கோயில் நவசைலேஸ்வரம் சிவன் கோயில் தான் என்று ஒரு சாரார் கூறும் அதே வேளையில் சிலர் இதில் கூறப்படும் சிவன் கோயில் புத்தூர் சிவன் கோயில் எனக் கூறுவதும் உண்டு.

நவசைலேஸ்வரம் புராதனமானதும் தல மகிமை கொண்டதும் பூர்வீகமானதும் என்பதில் மாறுபட்ட கருத்துக்கு இடமில்லை. இந்த ஆலயம் ஈழத்தில் சிறப்பு பொருந்திய ஆறு ஈஸ்வரங்களில் ஒன்று. அதன் பூர்வீகம் போர்த்துக்கீசர் காலத்தில் இடித்து அழிக்கப்பட்டது. ஆலயத்தின் பூர்வீக விக்கிரகங்கள் முன்னோரால் அயலில் உள்ள கிணற்றில் இடப்பட்டு மறைக்கப்பட்டது. பிற்பட்ட காலத்தில் இறையருளால் மீட்டெடுக்கப்பட்டு தற்போதைய ஆலயம் கட்டப்பட்டு அதில் பிரதிட்டை செய்யப்பட்டது எனக் கூறப்படுகின்றது. போர்த்துக்கீசரால் முற்றாக இடித்து அழிக்கப்பட்ட பூர்வீக ஆலயத்தின் அடித்தளமும் சுற்றுப்பிரகாரமும் தற்போதைய ஆலயத்தக்கு அருகில் மண்ணுள் மறைபட்டுள்ளது. சில இடிபாடுகள் மண்ணுக்கு மேல் இப்பொழுதும் காணப்படுகின்றன எனக் கூறப்படுகின்றது.

நவசைலேஸ்வரத்தில் தற்போது காணப்படும் ஆலயம் 1948ஆம் ஆண்டு காலப்பகுதியில் எதிர்பாராத விதமாக மீட்டெடுக்கப்பட்டு கட்டப்பட்டது. ஆலயத்தின் முக்கிய விக்கிரகங்கள் மற்றும் மூல மூர்த்தியாகிய சிவலிங்கமும் ஆலயத்துக்கு அருகில் உள்ள கிணற்றில் இருந்து கண்டெடுக்கப்பட்டன.

தற்போதைய ஆலயத்தை நிர்மாணித்த பரம்பரைப் பூசகரான வேலுப்பிள்ளை சுப்பையாவும் அவரின் மனையாள் சிவக்கொழுந்தும் பூசை வழிபாடு செய்தனர் என்றும் வேலுப்பிள்ளை சுப்பையாவின் பேரனும் தற்போதைய ஆலய பரிபாலன சபையின் தலைவருமான வேலுப்பிள்ளை அருணாசலம் தெரிவிக்கின்றார். தற்பொழுது காணப்படும் ஆலயம் வெளிச் சுற்றுப்பிரகாரத்துடன் சிறிய ஆலயமாக அமைந்துள்ளது. இந்த ஆலயத்தின் நித்தியபூஜைகள் வழிபாடுகளுக்கு புலம்பெயர்ந்த உறவுகள் நிதி உதவி வழங்கிவருகின்றனர். ஆலயத்தின் தற்போதைய தினசரி பூசையை அச்சேழுவைச் சேர்ந்த சிவஸ்ரீ விக்னேஸ்வரக்குருக்களும் அவர்களது குடும்பத்தினரும் மேற்கொண்டுவருகின்றனர்.

ஆலயத்தின் தீர்த்தமாக வற்றாநீர் ஊற்று காணப்படுகின்றது. ஆலயத்தின் முன்றலில் சில மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள வற்றா நீர் ஊற்றுக்கு இறங்குவதற்கு மேற்கு கிழக்காக பல படிகள் கட்டப்பட்டு தேவையின் நிமித்தம் படிக்கட்டுக்களை பயன்படுத்தி இறங்கி ஏறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த வகையில் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் 20 ற்கும் மேற்பட்ட படிக்கட்டுக்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. ஆலயமும் ஆலய வாசலில் அமைந்துள்ள வற்றா நீர் ஊற்றும் அத்தோடு இணைந்து நூற்றாண்டுக்கு மேற்பட்ட வளர்ச்சி கொண்ட மரங்கள் நிறைந்த சுற்றாடலும் ஆலயத்தின் சூழலை அழகூட்டுவனவாக இருப்பதோடு வெளிமாவட்டங்களில் இருந்து வரும் பல்லாயிரக் கணக்கான சுற்றுலாப் பயணிகளை கவர்ந்திழுக்கும் மையமாகவும் விளங்குகிறது.

வலி.கிழக்கில் புராதன வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் தனித்துவம் மிக்கதாகவும் அழகும் அமைதியும் நிறைந்த இடமாகவும் விளங்கும் நிலாவரை ஆழ் கிணறு தொடர்பாக புராண இதிகாசங்களில் இடம்பெறுவதாக கூறப்பட்ட போதிலும் அதனுடன் தொடர்பான சுலோகங்களோ பாடங்களோ இது வரை கண்டறியப்படவில்லை எனக் கூறப்படுகின்ற அதே வேளையில் வற்றாதநீர் நிலை அமைப்பதற்கு வரையறை செய்யப்பட்டு கூறப்படும் நியாயங்களும் வரைவிலக்கணமும் விஞ்ஞான ரீதியில் வேறுபட்டதாக அமைந்துள்ளன.

– எம். ஜீ. லிங்கம்



# டெங்கு நுளம்பை இனப்பெருக்க தடுப்பின் மூலம் ஒழிக்க ஆராய்ச்சி

டெங்கு நுளம்பை கட்டுப்படுத்தவென புதிய ஆராய்ச்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டு வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை வைத்திய ஆராய்ச்சி நிலையம் மற்றும் கொழும்பு பல்கலைக்கழகம் என்பன இணைந்து இந்த ஆராய்ச்சி நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றன.

நுளம்புகள் பிறப்பிக்கும் ஒலி அலைகளைக் கொண்டு அவற்றை அழிப்பது குறித்து ஆராய்ச்சி செய்யப்பட்டு வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

விசேடமாக பெண் நுளம்பு இனபெருக்கத்திற்காக ஆண் நுளம்பை கவர்வது அதன் சிறகு துடிக்கும் வேகத்தை வைத்தாகும்.

அந்த ஒலி அலைகளை இணங்கண்டு அதற்கு இடையூறு ஏற்படுத்தும் வகையிலான ஒலி அலையை உருவாக்குவது இந்த ஆராய்ச்சியின் நோக்கமாகும்.

இந்த ஆராய்ச்சின் ஆரம்பக் கட்டப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளதாகவும் விரைவில் அதனை நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ளதாகவும் சுகாதார அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது.

# 30 பேரைக் கடித்த நாய்

வவுனியாவில் விசர் நாயொன்றினால் கடிபட்ட சுமார் 30 பேர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்நாய் காண் போரையெல்லாம் கடித்ததால் வவுனியா நகரில் பரபரப்பு ஏற்பட்டது.

இறுதியில் இந்நாய் பொதுமக்களால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது இந்நாயை சுகாதார அதிகாரிகளிடம் பொலிஸார் ஒப்படைத்தனர்.

# புதையல் தோண்டிய மூவர் பதுளையில் கைது

பதுளை - பண்டாரவளை பிதான வீதியின் உடுவர 7ம் கட்டை பகுதியில் புதையல் தோண்டிக் கொண்டிருந்த மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அகரதென்ன விசேட அதிரடிப் படையினரால் நேற்றுமுன்தினம் மாலை இவர்கள் கைது செய்யப்பட்டு பதுளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் பயணித்த முச்சக்கர வண்டி, புதையல் தோண்ட பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் என்பனவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

# மாடு மேய்க்கச் சென்ற இளைஞன் மீது துப்பாக்கி சூடு

மட்டக்களப்பு - வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 40ஆம் கொலணி பகுதியில் மாடு மேய்க்கச்சென்ற இளைஞன் மீது இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிசூட்டில் இளைஞன் படுகாயமடைந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை இந்த சம்பவத்தில் இதில் அம்பிளாந்துறை - கல்சேனை பிரதேசத்தை சேர்ந்த தங்கவடிவேல் அருள்பிரகாசம் (20வயது) என்ற இளைஞரே காயமடைந்துள்ளார்.

மாடு மேய்த்துக்கொண்டிருந்த போது மறைந்திருந்த நபர்கள் தன் மீது துப்பாக்கி சூடு நடத்தியதாக காயமடைந்தவர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இளைஞர் கையில் பலத்த காயத்துடன் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பிலான விசாரணைகளை வெல்லாவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## காவத்தையில் மீண்டும் பயங்கரம்:

# தாயும் மகளும் கருகிய நிலையில் சடலங்களாக மீட்பு

இரத்தினபுரி - காவத்தை - கொட்டகேத்தன பகுதி வீடொன்றில் இருந்து எரிந்து கருகிய நிலையில் இரு பெண்களின் சடலங்கள் நேற்று அதிகாலை மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்த சடலங்கள் நேற்று அதிகாலை 4 மணியளவில் மீட்கப்பட்டுள்ளன.

63 வயது தாய் மற்றும் 32 வயதுடைய அவரது மகள் ஆகியோரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் கொலை செய்யப்பட்டிருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது.

காவத்தை பொலிஸாரும் குற்றத்தடுப்புப் பிரிவினரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இலங்கை பெண் கைது

அகுவைத்தின் - கெய்டன் நகரில் பொது இடத்தில் முறையற்ற செயல்களில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தி எகிப்து நாட்டு வாகன சாரதியும் இலங்கை பெண்ணும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த இலங்கை பெண்ணுடன் தகாத தொடர்பு வைத்துக் கொள்ள அப்பெண்ணுக்கு 5 குவைத் தினார் பணம் செலுத்தியதாகவும் அதற்கு அப்பெண் சம்மதித்ததாகவும் சாரதி தெரிவித்துள்ளார். கைது செய்யப்பட்ட இருவரும் உரிய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக குவைத் அல்-அனாப் செய்திகள் தெரிவிக்கின்றன.



ஆரத்தி நகர் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தை கவனத்தில் கொண்டு இயக்கச்சியில் நிலைகொண்டுள்ள 552 ஆவது படையணியினர் சுமார் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான அப்பியாசப் புத்தகம், பேனா உள்ளிட்ட கற்றல் உபகரணங்களை மாணவர்களுக்கு வழங்கினர்.

இதுமட்டுமன்றி பாடசாலைப் புத்தகப் பைகள், பாடசாலை நூலகங்களுக்கான புத்தகங்களும் வழங்கப்பட்டன. மேற்படி பாடசாலையில் நடைபெற்ற புத்தகங்கள் மற்றும் கற்றல் உபகரணங்கள் கையளிக்கும் வைபவத்தில் 552 ஆவது படையணியின் கட்டளைத் தளபதி கேணல் தீபால் வன்னியாராச்சி, சிரேஷ்ட படையதிகாரிகள், ஆசிரியர்கள், மாணவர்களின் பெற்றோர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஹசன் மௌலவி மு.க.வில் இணைவு

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஹசன் மௌலவி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் கடந்த புதன்கிழமை இணைந்து கொண்டுள்ளார்.

இதனையடுத்து, ஹசன் மௌலவி எதிர்வரும் கிழக்கு மாகாண சபை தேர்தலில் லங்கா முஸ்லிம் காங்கிரஸின் மரச் சின்னத்தில் போட்டியிடவுள்ளார்.

இதற்கு முன்னர் கிழக்கு மாகாண சபையினால் ஆளும் கட்சியின் சபை முதல்வராக ஹசன் மௌலவி செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஆர்.எம்.அன்வர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முதன்மை வேட்பாளராக நியமிக்கட்டுள்ளார்.

இதன்படி ஆர்.எம்.அன்வர் - புல்மோட்டை, ஜே.எம்.லாஹீர் - மூதூர். எம்.என்.சனூஸ் - கிண்ணியா, ஹசன் மௌலவி - கிண்ணியா, பி. ஹாதிர்கான் - கிண்ணியா, பரீல் சயீன் - குச்சவெளி, வை.ஏ.வாஹீட் - முள்ளிப்பொத்தானை, எம்.எம். முஸ்ஸம்மில் - கிண்ணியா உள்ளிட்ட 13 பேர் போட்டியிடவுள்ளனர்.

# இரத்தினக்கல் ஆபரண அதிகார சபை அதிகாரி ஒருவர் கைதானார்

இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் அதிகாரி ஒருவர் லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவிசாவளை பிரதேச இரத்தினக்கல் அகழ்வு தொழிலாளி ஒருவரிடம் 50,000 ரூபா இலஞ்சம் கோரி அதில் 45,000 ரூபாவை பெற்ற வேளை அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த இரத்தினக்கல் அகழ்வு தொழிலாளி சட்டவிரோதமாக இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபட்டுள்ளார். அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்காதிருப்பதற்கு அதிகாரியால் இலஞ்சம் பெறப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட அதிகாரி கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு தலா 5 இலட்சம் ரூபா இரு சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

மேலும் இம்மாதம் 31ம் திகதி மீண்டும் நீதிமன்றில் ஆஜராகுமாறு சந்தேகநபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக இலஞ்ச ஒழிப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.




# பலவகையான பெயர்களில் விநாயகர்



**மரக்குகை விநாயகர்**

கும்பகோணம் மலையப்ப நல்லூர் கிராம எல்லையில் இரண்டாயிரம் வருடங்கள் பழமை வாய்ந்த பெரிய ஆலமரம் இயற்கையாகவே பிளந்து குகை போலக் காணப்படுகின்றது. 8 அடி நீளமும் 3 அடி அகலமும் கொண்ட இந்த ஆலமரக் குகையில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் விநாயகரை வெயில், மழையிலிருந்து மரக்குகையே பாதுகாக்கிறது. இதனால் மரக்குகை விநாயகர் என அழைக்கப்படுகிறார்.

**மயில்வாகன விநாயகர்**

பாண்டிச்சேரி மணக்குள விநாயகர் ஆராய சுதைச் சித்திரத்திலும், அருப்புக்கோட்டை தாதன் குணவிநாயகர் கோயிலிலும் விநாயகர் மயில்வாகனத்தில் அமர்ந்திருக்கும் கோலத்தில் அருள் புரிகின்றார்.சென்னை தியா கராஜ நகரின் அகத்தியர் கோயிலிலும் மயில்வாகனத்தில் அமர்ந்திருக்கும் விநாயகரைத் தரிசிக்கலாம்.

**குளத்து விநாயகர்**

திருவாரூர் திருக்கண்ணமங்கை பத்தராலிப்பேட்டை பெருமான் கோயிலின் முன் தர்சன புஷ்கரணியிலுள்ள விநாயகர் மழையை பெய்விக்கும் அற்புதத்தை செய்து வருகிறார். இங்கு உரிய காலத்தில் மழைபெய்யாவிட்டால், விநாயகரை குளத்தில் இறக்கி வைத்து பூசை வழிபாடுகளைச் செய்வார்கள். மழை முடிந்த பின்னரே, விநாயகரை மீண்டும் பழைய ஸ்தானத்திற்கு எழுந்தருளச் செய்வார்கள்.

(தகவல் : செ. கந்த சத்தியதாசன்)

# சமய தீபம்

## நல்லைக் கந்தனின் மகோற்சவப் பெருவிழா

"நல்லூரான் திருவடியை நான் நினைத்த மாத்திரத்தில் எல்லாம் மறப்பேனடி-கிளியே! இரவு பகல் காணேனடி" என்று சொன்ன யோகர் சுவாமிகள், "எந்நாளும் நல்லூரை வலம் வந்து வணங்கினால் இடர்கள் எல்லாம் போய் விடும்" என்றும் நம்பிக்கையூட்டியிருக்கிறார்.

இலங்கையிலுள்ள கந்தகோட்டங்களுள் முதன்மையாகப் போற்றப்படும் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவப் பெருவிழா எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத் துடன் ஆரம்பமாகிறது. நல்லைக் கந்தனின் மகோற்சவம் ஆரம்பித்துவிட்டால் நல்லூர் பிரதேசம் மட்டுமல்ல யாழ். குடாநாடே பக்திமயமான நிலையில் காணப்படும்.

கொடியேற்றம் முதலாக தீர்த்தோற்சவம் வரையிலான இருபத்தைந்து நாட்களும் இந்து மக்கள் விரதமிருந்து புனித உணவு உட்கொண்டு முருகப் பெருமானை தியானிப்பதுடன் ஆண்கள் ஆலயத்திற்கு வருகை தந்து அங்கப் பிரதட்சணம் செய்தும், காவடி எடுத்தும், பெண்கள் அடியழித்தும், கற்பூரச் சட்டியை சுமந்தும் தங்களது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவார்கள்.

இங்கு வருடந்தோறும் ஆடி அமாவாசையிலிருந்து ஆறாவது நாள் மகோற்சவம் ஆரம்பமாவதுடன், ஆவணி மாதத்து அமாவாசை திதி நாளில் தீர்த்தோற்சவம் நடைபெறுவதும் வழக்கமாகும். சிறப்பு உற்சவங்களாக ஆகஸ்ட் 2ஆம் திகதி மஞ்சத் திருவிழாவும், 10ஆம் திகதி கார்த்திகைத் திருவிழாவும் 12ஆம் திகதி காலை சந்தான கோபாலர் திருவிழாவும், அதே தினம் மாலை கைலாச வாகனத் திருவிழாவும், 13ஆம் திகதி காலை கஜவல்லி மஹா வல்லி திருவிழாவும், அதே தினம் மாலை வேல் விமானத் திருவிழாவும் 14ஆம் திகதி காலை தெண்டாயுதபாணி திருவிழாவும், 15ஆம் திகதி சப்பரத் திருவிழாவும், 16ஆம் திகதி காலை 7.00 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவிருப்பதுடன் ஆகஸ்ட் 18ஆம் திகதி இடம்பெறும் பூங்காவனத்துடன் நல்லைக் கந்தனின் இவ்வருட மகோற்சவப் பெருவிழா நிறைவுபெறுகிறது.



# இவ்வார சமய நிகழ்வுகள்

**இந்துக்களுக்குரிய விசேட தினங்கள்**

22 ஞாயிறு : நாக சதுர்த்தி விரதம்
23 திங்கள் : ஆடிப்பூரம்
24 செவ்வாய் : சஷ்டி விரதம்
26 வியாழன் : சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை

**கிறிஸ்தவர்களுக்குரிய விசேட தினங்கள்**

25 புதன்: திருத்தூதர் புனித யாக்கோபு விழா

**முஸ்லிம்களுக்குரிய விசேட தினங்கள்**

21 சனி : றமழான் மாதம் உதயம், நோன்பு ஆரம்பம்

## இயேசுநாதரின் நற்போதனைகள்

பிறரைக் குற்றவாளிகள் என்று தீர்ப்புக் கூறாதீர்கள். அப்பொழுது நீங்களும் குற்றவாளிகள் என்ற தீர்ப்புப் பெறாதிருப்பீர்கள். பிறரைத் தண்டனைக்கு ஆளாக்காதீர்கள் அப்பொழுது நீங்களும் தண்டனைக்கு ஆளாகமாட்டீர்கள். மன்னியுங்கள், அப்பொழுது உங்களையும் கடவுள் மன்னிப்பார். கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்.

அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாக அழுந்து உங்கள் மடியிலே போடுவார்கள். நீங்கள் அளக்கும் அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்.

## முகம்மது நபியின் நல்வாக்குகள்

மார்க்க முறைப்படி செயல்படும் ஒரு முஸ்லிம் தன்னுடைய கண்ணியமான இயல்பாலும், அழகிய குணத்தாலும் இரவில் சங்கை மிக்க குர்ஆனை ஓதும் அதிக மாக நோன்பு நோற்கும் மனிதனின் பதவியை அடைந்து விடுகின்றார்.

எவரது உள்ளத்தில் அணு வளவு பெருமை இருக்குமோ, அவர் சொர்க்கம் செல்ல மாட்டார்.

## திருக்குறள் அறிவுப் போட்டி – இல: 02

இந்தப் போட்டியில் வயதுக் கட்டுப்பாடின்றி அனைவரும் கலந்து கொள்ளலாம்.இங்கு வெளியாகியுள்ள பத்து வினாக்களுக்கும் சரியான விடைகளை எழுதி அஞ்சலுறையிலிட்டு கீழே காணப்படும் முகவரிக்கு கூப்பனை ஒட்டி அனுப்பி வைத்தல் வேண்டும். முகவரிக் கூப்பன் ஒட்டப்படாத அஞ்சலுறைகளில் அனுப்பப்படும் விடைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

பத்து வினாக்களுக்கும் சரியான விடைகளை அனுப்புபவர்களிலிருந்து தெரிவுசெய்யப்படும் அதிர்ஷ்டசாலி ஒருவருக்கு திருக்குறள் நூல் பரிசாக வழங்கப்படும். ஏனைய பத்துப் பேரின் பெயர்கள் தமிழ்நாதம் பத்திரிகையில் வெளியிடப்படும்.

**வினாக்கள்**

1.திருவள்ளுவரின் வேறு பெயர்கள் நான்கு தருக.
2.திருவள்ளுவர், இரு வெவ்வேறு அதிகாரங்களுக்கு ஒரே பெயரையே பயன்படுத்தியுள்ளார். இந்த அதிகாரப் பெயர் என்ன?
3.மருத்துவர் ஒருவர் நோயின் தன்மையையும், நோயின் காரணத்தையும் ஆராய்ந்து, அதனைத் தணிக்கும் வகையில் உடலுக்குப் பொருந்தும்படியாக மருத்துவம் செய்யவேண்டும் என்பதைச் சொல்லும் குறள் எது? எந்த அதிகாரத்தில் உள்ளது?
4."நுண்பொருள் காண்ப தறிவு" என்று நிறைவுபெறும் குறளின் முதல் அடி எது?
5.உலகத்தில் அறநெறியில் நின்று வாழ்கின்றவன் பற்றி திருவள்ளுவர் என்ன சொல்கிறார்?
6.தூது உரைப்பவர்க்கு இன்றியமையாத மூன்று பண்புகள் எவை என திருக்குறளில் சொல்லப்பட்டுள்ளது? குறள் எண் எது?
7.நூறு என்ற எண் பெயரை திருவள்ளுவர் எந்தக் குறளில் பயன்படுத்தியுள்ளார்? - எந்த அதிகாரத்தில் இடம்பெற்றுள்ளது?
8.ஒரு மரத்தின் நுனிக் கொப்பில் ஏறியவர் அதையும் கடந்து மேலும் ஏறுவதற்கு முனைந்தால், அது அவருடைய உயிருக்கு முடிவாக நேர்ந்துவிடும் என்ற கருத்து எந்தக் குறளில் அடங்கியுள்ளது?
9.நட்பியல் எத்தனை அதிகாரங்களைக் கொண்டிருக்கிறது?
10.கவிரிமானின் பெயர் எந்தக் குறளில் பயன்படுத்தப்பட்டுள்ளது?

விடைகளை அனுப்பவேண்டிய இறுதித் திகதி: 31.07.2012

**விடைகளை அனுப்பவேண்டிய முகவரி:**

இங்கே வெட்டவும்

திருக்குறள் அறிவுப் போட்டி - இல: 02
தமிழ்நாதம்
267, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.

# ரமழான் மாதத்தில் நோன்பிருந்து அல்லாஹ்விடத்தில் அருள் பெறுவோம்

இஸ்லாமிய வருடத்தின் ஒன்பதாம் மாதமாகிய ரமழான் நாளைய தினம் மலருகிறது. மனிதனை நேர்வழிப்படுத்த நபி (ஸல்) அவர்களின் மூலம் அல்லாஹ்வால் புனித அல்குர்ஆன் இறக்கியருளப் பட்டது ரமழான் மாதத்திலேயாகும். அதனால் இம்மாதம் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. இதனையே திருமறையில் "ரமழான் எத்தகையதென்றால் அதில்தான் மனிதர்களுக்கு வழிகாட்டியாகவும், நேரான வழியைத் தெளிவாக்கக் கூடியதாகவும் (நன்மை தீமைகளைப்) பிரித்தறிவிப்பதுமான குர்ஆன் இறக்கியருளப்பட்டது" (ஆல் குர்ஆன் 2:185) என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ரமழான் மாதத்தின் 'லைலத்துல் கத்ர்' எனும் மகத்துவமிக்க இரவில் அல்குர்ஆனை இறக்கியருளப்பட்டதன் மூலம் அன்றைய தினம் பெருமை பெறுகிறது.

இம்மாதத்தில் நோன்பிருந்து அவனிடம் பாவமீட்சி பெறுவதன் மூலம் மனிதன் செய்யும் பாவங்கள் அனைத்தும் அடியோடு இல்லாமல் போகின்றது. இம் மாதத்தின் முதல் பத்து நாட்கள் அல்லாஹ்விடத்தில் அருள் கிடைக்கும் காலமாகவும், நடுவில் பத்து நாட்கள் பாவமன்னிப்புக்குரிய காலமாகவும், இறுதி பத்து நாட்கள் நரகத்திலிருந்து விடுதலை பெறும் காலமாகவும் அமைந்துள்ளது. இம்மாதத்தில் நாம் பெறும் அருளும் நன்மையும் எம்மை ஒரு மு'.மின்களாக வாழ்வதற்கு வழிவகுக்கின்றது.

புனித ரமழான் மாதத்தில் ஒருவர் நோன்பு நோற்பதனால் அவருடைய முந்திய பாவங்கள் மன்னிக்கப்படும் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். அது கடலைப் போல பெரிதாக இருந்தாலும் சரி, கடுகைப் போல சிறிதாக இருந்தாலும் சரி, அது அல்லாஹ்விடத்தில் மன்னிக்கப்படும். எமது கரடு முரடான பாவமிக்க உள்ளம் அல்லாஹ் வினால் சீர்பெறுகி ன்றது.

இஸ்லாத்தின் முந்திய இறைவேதங்களை அல்லாஹ் இந்த ரமழான் மாதத்திலேயே இறக்கியருளினான். இப்றாஹீம் (அலை) அவர்களுக்கான இறைத்தூது ரமழான் தலைப்பிறையிலும், மூஸா (அலை) அவர்களுக்கான தௌராத் வேதம் ரமழானின் 6ஆம் நாளிலும், ஈஸா (அலை) அவர்களுக்கான இன்ஜில் வேதம் ரமழானின் 13ஆம் நாளிலும், முஹம்மத் (ஸல்) அவர்களுக்கான அல் குர்ஆன் இம்மாதத்தின் லைலத் துல் கத்ர் இரவிலும் அருளப்பட் டிருக்கிறது என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

நாம் நோன்பு நோற்பதன் மூலம் ஏழைகளின் பசியையும் நீக்குவதுடன், எம்முடன் பொறுமை புரிந்துணர்வு, சகோதரத்துவம் வளர்வது மட்டுமல்லாமல், அல்லாஹ்விடத்தில் நெருங்கிய தொடர்பும், மறுமை வாழ்வில் நற்கூலியும் கிடைக்கும். எனவே நாம் தூய எண்ணத்துடன் நோன்பிருந்து அல்லா ஹ்விடத்திலிருந்து அன்பையும் அருளையும் பெறுவோமாக.

*-எம்.எஸ்.ஏ.எம். முபாறக்*

# நீறு பூசி நிம்மதி பெறுதல்

திருநீறு, சந்தனம் முதலாம் அருட் பிரசாதங்களை உடலில் அணிவது என்பது சைவ, இந்து மத விசுவாசத்துடன் சம்பந்தப்பட்டது என்பதோடல்லாமல் அவை அணியும் தனி நபரிலும் நிச்சயமான செல்வாக்குச் செலுத்தவல்லது.

"திருநீறில்லாதவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சுமாறே" என்றும், "நீறில்லா நெற்றி பாழ்" என்றும் சொல்வர்.

தன்னை அணிபவரைப் பாதுகாக்க வல்லது திருநீறு-விபூதி என்றும் திருநீறு அணிவதன் அவசியம் பற்றி நம் சம்பிரதாயம் கட்டளைப்படுத்தி வைத்திருந் தாலும் நாம் இவ்விடயத்தில் இன்னும் சிரத்தை காட்ட வேண்டியதன் அவசியம்.

திருநீற்றை காலையில் நீரில் குழைத்தும், நடுப்பகலில் சந்தனம் சேர்த்தும் அணிய வேண்டும். மாலை வேளைகளில் உலர்ந்த திருநீற்றை அணியவும் என விதிமுறைகள் உள்ளன. இப்படியே, பிரம்ம முகூர்த்தத்தில் சந்தனமும், விடியற்காலை குங்குமமும், மாலைப் பொழுதில் திருநீறும் அணிவது, நரம்புகளின் உறுதிக்கும் நோய்களின் நிவாரணத்துக்கும் உத்தமம் என்று, சூரிய ஒளியையும், மனித உடலையும் சம்பந்தப்படுத்திச் செய்யப்படும் ஆராய்ச்சிகள் வெளிப்படுத்துகின்றனவாம்.

சிவசின்னங்களின் மதிப்பு, அவை வேணப்படுமாறு பற்றியெல்லாம் சமய குரவர்கள் அனைவருமே தவறாது திருப்பதிகங்களில் கூறி வைத்தது டன், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானும் அச்சம்பிரதாயத்தின் அவசியம் பற்றியும் பிரஸ்தாபித்திருப்பது கவனிக்க வேண்டியது.

"நோயென்னும் பேயோட்டுவது தாயன்ன திருநீறே" என்று அப்பர் சுவாமிகளுக்கு திருநீறு தந்து நோயகலக் கண்ட திலகவதியார் போற்றுவார். அப்புனிதவழக்கு பொலிய வாழ்வோம்! திருநீற்றினை வாங்கும் போதும் கும்பிட்டு இடக்கையின் மீது வலக்கையை வைத்துக் கொண்டு வாங்க வேண்டும். நீடுவினை அணுகாது தேகம்பரிசுத்தமாகும். நீங்காமல் நிமலன் அங்கே குடிகொள்ளுவான்.

*- எம்.எஸ்.ஸ்ரீதயாளன்*

ஆனால் இப்போது கொஞ்ச காலமாக அவனுக்குப் போதாத காலம் ஆரம்பித்துவிட்டது. ஏதோ ஒரு வழக்கில் தோற்றுப் போனது முதலே அவனுக்கு அதைரியமும் அசிரத்தையும் அதிகரித்துவிட்டது. கைப்பணமும் கொஞ்சம் போய்விட்டது. அளவுக்கு மீறியே குடிக்கவும் ஆரம்பித்துவிட்டான். பல நாட்கள் சேர்ந்தாற்போல் சமையலறையில் உள்ள பெரிய நாற்காலியில் சாய்ந்துகொண்டே கிடப்பான் அவன்.

பத்திரிகைகள் படிப்பான், ஓயாமல் குடிப்பான், பீரில் தோய்த்த ரொட்டித் துண்டுகளை மோஸஸுக்குக் கொடுத்துக் கொண்டே பொழுதைப் போக்குவான். அவனுடைய வேலையாட்களும் சோம்பேறிகள், அயோக்கியர்கள். வயல்களில் களையும் முள்ளும் தழைத்துவிட்டன.

பண்ணையிலிருந்த பல கட்டிடங்களுக்கும் கொட்டில்களுக்கும் புதுசாகக் கூரைவேய்ந்தாக வேண்டியதாயிற்று. வேலிகளைச் சரிவரப் புதுப்பிக்காமல் பல இடங்களில் தேய்ந்து தொங்கின. பண்ணை மிருகங்களுக்கு உணவு கூடச் சரிவர சரியான வேளைகளில் போடுவது கிடையாது.




ஜூன் மாதம் வந்தது. புல் வெட்டுவதற்குத் தயாரான நிலையில் இருந்தது. வேனிற் காலத்தன்று ஒரு நாள் வில்லிங்டன் கிராமத்துக்குப் போன திருவாளர் ஜோன்ஸ் "செட்லயன்" கள்ளுக்கடையில் குடித்துவிட்டு, மதி மயங்கிக் கிடந்தான். மறுநாள் ஞாயிறன்று நண்பகலுக்குத் தான் பண்ணைக்குத் திரும்பினான்.

அதிகாலையி லேயே அவன் வேலையாட்கள் பாலைக் கறந்து வைத்துவிட்டு முயல் வேட்டையாடப் போய் விட்டார்கள். அவர்களில் யாரும் மிருகங்களுக்கு உணவு எடுத்துப் போடுகிற காரியத்தைக் கவனிக்கவில்லை.

வீடு திரும்பியவுடன் திருவாளர் ஜோன்ஸ், தன் முகத்தை "உலகத்துச் செய்திகள்" என்கிற செய்தித் தாளைப் போட்டு மூடிக்கொண்டு முன்னறை ஸோபாவில் படுத்து உறங்கிவிட்டான்.


ஆகவே மாலை வரையிலும் யாரும் மிருகங்களுக்கு உணவு எடுத்துப் போடவேயில்லை. விலங்குகளுக்கோ பசி பொறுக்க முடியாதபடியாகிவிட்டது. தீவனம் வைத்திருந்த கொட்டில் கதவை முட்டித் தள்ளிவிட்டு ஒரு பசு தனக்குத் தேவையானதை எடுத்துத் தின்ன ஆரம்பித்தது. மற்ற மிருகங்களும் தங்களுக்குத் தேவையான உணவைத் தேடிக் கொண்டன. அந்த சமயம் பார்த்து திருவாளர் ஜோன்ஸ் விழித்துக்கொண்டான். அடுத்த நிமிடமே அவனும் அவனுடைய நான்கு ஆட்களும் உணவு சேமித்து வைத்திருந்த கொட்டிலிற்குள் கையில் சாட்டைகளுடன் பிரவேசித்தனர். சாட்டையை நாலா பக்கமும் சொடுக்கி, கண்ணில் பட்ட மிருகங்களை வெளுத்துவிட்டனர். இதை பசியோடிருந்த மிருகங்களால் தாங்க முடியவில்லை. **(திங்கள்...)**

## பெட்ரோலில் இயங்கும் டீசலில் இயங்காது, ஏன்?

பெட்ரோல், டீசல் ஆகிய எரிபொருட்களைக் கொண்டு இயங்கும் இரு இயந்திரங்களும் ஒரே மாதிரியானவை தான். இருப்பினும் இரண்டும் வெவ்வேறு வடிவ அமைப்புகளைக் கொண்டவை. ஒவ்வொரு எரிபொருளும் ஒரு குறிப்பிட்ட வெப்ப நிலையில் தான் எரியத் துவங்கும். இதனைப் பற்றல் வெப்பநிலை என்பர். இது பெட்ரோலுக்குக் குறைவாகவும், டீசலுக்கு மிகுதியாகவும் தேவைப்படும்.

அடுத்து பெட்ரோல் இயந்திரத்தில் எரிபொருள்-காற்றுக் கலவையைப் பற்ற வைக்கும் செயலை மேற்கொள்வது தீப்பொறிச்செருகி ஆகும். மேலும், இவற்றில் எரிபொருள்-காற்றுக் கலவையைப் பற்ற வைப்பதற்கு முன்னால் தேவைப்படும் அழுத்த அளவு அதாவது அழுத்த விகிதம் குறைவு. இந்நிலையில், பெட்ரோல் இயந்திரத்தில் டீசலை எரிபொருளாகப் பயன்படுத்தும்போது பற்ற வைக்கும் வெப்பநிலை போதுமான அளவு இல்லாத காரணத்தால் எரிபொருள் பற்றவே பற்றாது.

அடுத்து டீசல் இயந்திரத்தில், பெட்ரோல் இயந்திரத்தில் இருப்பது போல் தீப்பொறிச் செருகி கிடையாது. இங்கு எரிபொருள் பற்றவைப்பு மிகுந்த அழுத்தத்தின் விளைவாக நடைபெறும். இவ்வாறு பெட்ரோல், டீசல் இயந்திரங்களுக்கு இடையே யுள்ள வடிவமைப்பு வேறுபாட்டினாலும், பற்றவைப்பு வெப்பநிலை வேறுபாட்டினாலும் பெட்ரோலுக்குப் பதிலாக டீசலையோ, டீசலுக்குப் பதிலாகப் பெட்ரோலையோ பயன்படுத்த இயலாது.



புள்ளிகளை இணையுங்கள்



குழந்தைகளே!

3 முதல் 12 வயது வரையான பிள்ளைகளின் பிறந்தநாள் வாழ்த்து தமிழ்நாதத்தில் பிரசுரமாகும். நீங்கள் செய்யவேண்டியது இதுதான்:

ஏதாவதொரு விடயத்தைப் பூர்த்தி செய்தல். அத்துடன் பெயர், ஊர் பிறந்ததினம் என்பவற்றை மாத்திரம் எழுதி உங்கள் புகைப்படத்தையும் இணைத்து எமக்கு தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

**சிறுவர் அமுதம், தமிழ்நாதம், 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

# சிறுவர் அமுதம்

LONDON 2012

மனித இனம் ஒன்றுதான் என்றாலும் நாடு, மொழி, மதம் எனப் பல பிரிவுகளாகத்தானே இருக்கிறது. இந்தப் பிரிவுகளை மறந்து ஒன்றிணைக்கும் கருவியாக இருப்பது விளையாட்டு. பல்வேறு நாடுகளுக்குள் ஒவ்வொரு விளையாட்டுக்கும் ஒரு குழு இருந்தாலும் ஏறத்தாழ எல்லா நாடுகளும் பங்கேற்கும் உலகளாவிய விளையாட்டு விழா ஒலிம்பிக் மட்டும்தான்.

கி.மு.776 ஆம் ஆண்டு பண்டைய கிரேக்க நாட்டில் தொடங்கிய ஒலிம்பிக் போட்டிகள் இன்று உலகை இணைக்கும் விளையாட்டாக உலக மக்களால் கொண்டாடப்படுகிறது. ஐந்து வளையங்கள் ஒன்றுக்குள் ஒன்றாக இணைந்திருப்பது ஒலிம்பிக்கின் சின்னம்.

### விடுகதைகள்




1.ஒட்டுத் திண்ணையில் தடுக்குப் போட்டேன், திருப்பி எடுக்கத்தான் முடியவில்லை - அது என்ன?

2.ஒரு கரண்டி மாவே ஊருக்கெல்லாம் தோசை - அது என்ன?

3.ஒரு கால், நான்கு கீத்து, ஒரு பந்தல் - இது என்ன?

4.ஒரு குளத்தில் ஒரு தட்டு, நனையாமல் கிடக்குது, மூழ்கவும் இல்லை, இது என்ன?

5.ஒரு சாண் கட்டைக்கு அரைச்சாண் மூடி - அது என்ன?

விடைகள்

1. கோலம் 2. நிலா 3. அரைக் கீரை 4. தாமரை இலை 5. பேனா

சுடோக்கு எண் 11 விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 6 | 8 | 4 | 5 | 3 | 9 | 7 | 2 |
| 5 | 2 | 4 | 9 | 1 | 7 | 6 | 8 | 3 |
| 9 | 7 | 3 | 8 | 6 | 2 | 5 | 4 | 1 |
| 3 | 4 | 2 | 6 | 8 | 9 | 7 | 1 | 5 |
| 7 | 5 | 6 | 1 | 2 | 4 | 8 | 3 | 9 |
| 8 | 1 | 9 | 7 | 3 | 5 | 4 | 2 | 6 |
| 2 | 9 | 5 | 3 | 7 | 8 | 1 | 6 | 4 |
| 4 | 8 | 1 | 2 | 9 | 6 | 3 | 5 | 7 |
| 6 | 3 | 7 | 5 | 4 | 1 | 2 | 9 | 8 |

சுடோக்கு எண் 12

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | | 8 | | 4 | 6 | 9 | 2 | 3 |
| 4 | | | | 8 | | | | |
| 5 | 9 | | | | | | | |
| | | | 3 | | | | | |
| | 2 | 3 | | | | 8 | 7 | |
| | | | | | 8 | | | |
| | | | | | | | 4 | 7 |
| | | | | 6 | | | | 9 |
| 9 | 8 | 4 | 2 | 5 | | 3 | | 1 |

# யாழ்ப்பாணத்தில் சைவ மாநாடு

## மூன்று நாள் பெருவிழா இன்று ஆரம்பமாகிறது

**மாலை** 4.45க்கு மணிக்கு ஆரம்பமாகும் முதலாம் நாள் நிகழ்வில் யாழ்ப் பாணத்தில் சைவ மாநாடு மூன்று நாள் பெருவிழா இன்று ஆரம்பமாகிறது

யாழ் சைவ பரிபாலன சபை நடத்தும் அகில இலங்கை சைவ மாநாடு (2012) இன்று வெள்ளிக் கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை நீராவியடியிலுள்ள சபையின் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறுகிறது.

மூன்று நாள் பெருவிழாவாக இடம்பெறும் சைவ மாநாட்டின் பெருந்தலைவராக சென்னை பேராசிரியர் வை. இரத்தினசபாபதி கலந்து கொள்கிறார்.

இன்று (20ஆம் திகதி) மாலை 4.00 மணிக்கு வண்ணை சிவன் கோயிலில் இடம்பெறும் பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து, விழா மண்டபத்தில் திருமுறை ஓதலுடன் சைவப்புலவர் மு. திருஞானசம்பந்தபிள்ளை வரவேற்புரையையும், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அருளுரையையும், சைவ பரிபாலன சபைத் தலைவர் த. சண்முகலிங்கம் அறிமுக உரையையும் வழங்குவார்கள். இதனைத் தொடர்ந்து பேராசிரியர் வை. இரத்தினசபாபதி தலைமையுரை ஆற்றுவார். சைவ பரிபாலன சபை செயலாளர் தி. மாணிக்க வாசகர் வழங்கும் நன்றியுரையைத் தொடர்ந்து சிறப்பு அம்சமாக தாவடியூர் கே.எஸ்.ஆர். திருஞான சம்பந்தர் வழங்கும் பண்ணிசை இடம்பெறும்.

நாளை (21ஆம் திகதி) காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும் இர ண்டாம் நாள் காலை நிகழ்ச்சிக ளுக்கு கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் தலைமை வகிப்பார்.

த. சிறிகாந்தன் வழங்கும் வரவேற்புரையைத் தொடர்ந்து, யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி சுகந்தினி சிறிமுரளிதரன் "சம்பந்தர் பாடல்கள் காட்டும் தலைமைத்துவப் பண்புகள் "என்ற பொருளிலும், யாழ். பல்கலைக்கழக கல்வியியற்று றை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி ஆர். ஜெயலக்சுமி "சம்பந்தர் தேவாரப் பாடல்களில் தாய்மைப் பண்பு" என்ற பொருளிலும், யாழ் பல்கலைக் கழக நுண்கலைத்துறை தலைவர் பேராசிரியர் ஏ.என். கிருஸ்ணவேணி "சம்பந்தர் பாடல்களில் பக்திரசம்" என்ற பொருளிலும் உரையாற்று வார்கள். இதனைத் தொடர்ந்து பேராசிரியர் வை.இரத்தினசபாபதி "கவுனியன் கட்டுரை" என்ற பொருளில் ஆற்றும் சிறப்புரை இடம்பெறும்.

நாளை மாலை 4.00 மணிக்கு ஆரம்பமாகும் மாலை நிகழ்ச்சிக ளுக்கு சைவ பரிபாலன சபை உப தலைவர் மு. திருஞானசம் பந்தபிள்ளை தலைமை வகிப்பார்.

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை உதவி விரிவுரை யாளர் சின்னராசா ரமணராஜா "சம்பந்தர் பாடல்கள் புலப்படுத்தும் சமுதாய சீர்திருத்தச் சிந்தனைகள்" என்ற பொருளிலும், யாழ். பல் கலைக்கழக இந்து நாகரிகத்துறை உதவி விரிவுரையாளர் திருச்செல்வம் செல்வ மனோகரன் "சம்பந்தர் பாடல்களில் அறிவாராய்ச்சி அடிப்படைகள்" என்ற பொருளிலும் உரையாற்றுவதுடன், சிவத்தமிழ்ச் செல்வர் ச. விநாயகமூர்த்தி' திருநெறிய தமிழ்" என்ற பொருளி லும், பேராசிரியர் வை. இரத்தின சபாபதி "பெருமணம்" என்ற பொருளிலும் ஆற்றும் சிறப்புரை களும் நாளை மாலை நிகழ்வில் இடம்பெறவிருக்கிறது.

சைவ பரிபாலன சபை பொரு ளாளர் இ. தவகோபால் வழங்கும் நன்றியுரையைத் தொடர்ந்து ஏரம் பமூர்த்தி அனுசாந்தன் வழங்கும் சங்கீத கதாப்பிரசங்கம் நாளைய சிறப்பு அம்சமாக இடம்பெறும்.

நாளை மறுதினம் (22ஆம் திகதி) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் ஆரம்பமாகும் மூன்றாம் நாள் காலை நிகழ்வில் பொ. கமலநாதன் வழங்கும் வரவேற்புரையைத் தொடர்ந்து, ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் "வினைப் போகமே ஒரு தேகம்" என்ற பொருளிலும், சைவப்புலவர் சு. செல்லத்துரை "சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவ ஞானம்" என்ற பொருளிலும் உரையாற்றுவதுடன் பேராசிரியர் வை. இரத்தினசபாபதி "இளைத்தல்" என்ற பொருளில் ஆற்றும் சிறப்புரையும் இடம்பெறும்.

மாலை 4.00 மணிக்கு சைவ பரிபாலன சபைத் தலைவர் சிவ- நெறிப் புரவலர் த. சண்முகலிங்கம் தலைமையில் ஆரம்பமாகும் மாலை நிகழ்ச்சியின்போது சிவத் தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் "தமிழ் மந்திரம்" என்ற பொருளிலும் ' 'தமிழ் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை தலைவர் பேரா சிரியர் மா. வேதநாதன் "சைவ சித்தாந்த செம்பொருள்" என்ற பொருளிலும் உரையாற்றுவது டன், பேராசிரியர் வை. இரத்தினசபாபதி "திருநெறி" என்ற பொருளில் ஆற்றும் சிறப்புரையும் இடம்பெறும்.

சைவ பரிபாலன சபையின் நிர் வாக சபை உறுப்பினர் சைவப் புலவர் கா. கமலநாதன் வழங்கும் நன்றியுரை யைத் தொடர்ந்து சிறப்பு அம்சமாக இணுவில் மத்திய கல்லூரி மாணவர்களது "கண்ணப்பர் குறவஞ்சி" நாட்டிய நாடகம் இடம்பெறும்.

சைவ பரிபாலன சபையின் நிர்வாக சபை உறுப்பினரான சைவப்புலவர் நித்திய தசீதரன் சைவமாநாட்டு நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குவார்.

# யாழ்ப்பாணத்திலும் கிளிநொச்சியிலும் பெருமளவான இடங்களில் மிதிவெடி அகற்றல் பணிகள் நிறைவு



யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் பெரும்மளவான பகுதிக ளில் மிதிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கும் யாழ் மாவட்ட மிதிவெடி செயற் பாட்டு அலுவலகர் முருகதாஸ் யாழ். குடநாட்டில் 85 ஆயிரத்து 731 சதுரமீற்றர் பரப்பளவிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் 2 இலட்சத்து 14 ஆயிரத்து 840 சதுர மீற்றர் பரப்பளவிலும் மிதிவெடி அகற்றி முடிக்கப்பட்டு அவை கையளிக்கப்படுவ தற்குத் தயார் நிலையில் உள்ளதாக தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவின் ஜே/228 கிராம சேவகர் பிரிவில் புற்று நோய் வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள காணியில் 22 ஆயிரத்து 559 சதுரமீற்றர் பரப்பளவு துப்புரவு செய்யப் பட்டுக் கையளிக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் 18 மிதிவெடிகள் மீட்கப்பட் டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் ஒட்டுப் பேலி (ஜே/330) கிராம அலுவலர் பிரிவில் 54 ஆயிரத்து 411 சதுர மீற்றர் பரப்பளவில் மிதிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. இந்தப் பகு தியில் 2 ஆயிரத்து 417 மிதிவெடிகள் மீட்கப்பட்டுள் ளன.

இதேபோன்று எழுதுமட்டுவாழ் பகுதியில் 31 ஆயிரத்து 320 சதுரமீற்றர் பரப்பளவில் மிதிவெடி அகற்றல் நடவடிக்கைகள் முடி வடைந்துள்ளன. இந்தப் பகுதியில் 16 வெடிக்காத வெடிபொருள்கள் மீட்கப்பட் டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட் பட்ட 6 பிரதேசங்களில் மிதிவெடி அகற்றல் நட வடிக்கைகள் நிறைவு பெற்றுள்ளன. பொன் நகர், ஸ்கந்தபுரம், மலையாளபுரம், உருத்திர புரம், செல்வாநகர் ஆகிய பகுதி களில் 1 லட்சத்து 24 ஆயிரத்து 388 சதுரமீற்றர் பரப்பளவில் மிதிவெடிகள் அகற்றப்பட்டுள் ளன.

இந்தப் பகுதிகளில் 462 ஆயிரம் மிதி- வெடிகள் மீட்கப்பட்டுள்ளன. இதனைவிடக் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் கோரக் கன் கட்டுப் பகுதியில் 84 ஆயிரத்து 176 சதுரமீற்றர் பரப்பில் மிதிவெடிகள் அகற்றப்பட் டுள்ளன. இந்தப் பகுதிகளில் 101 மிதி- வெடிகள் மீட்கப்பட்டுள்ளன.

பரந்தன் சந்திக்கு அண்மையில் வைத்தி லிங்கம் கமம் பகுதியில் 5 ஆயிரத்து 976 சதுரமீற்றர் பரப்பில் மிதிவெடிகள் அகற்றப் பட்டுள்ளதுடன் 15 மிதிவெடிகள் மீட்கப்பட் டுள்ளன.

இந்தப் பிரதே சங்கள் விரைவில் கையளிக்கப்படவுள்ளதாகத் அவர் தெரிவித் துள்ளார்.

# கழுகுக் கண்கள்

இலங்கையில் மீண்டும் தூக்கிலிட்டு மரண தண்டனை நிறைவேற்றப்படுவதை அமுலாக் குவதா, அல்லது மரண தண்டனை பெற்றவர்களின் தண்டனையை ஆயுள் தண்டனையாக இப்போது இருப்பது போன்று மாற்றிவிடுவதா, என்பது குறித்து இதுவரையில் அரசாங்கம் எவ்வித உத்தியோகபூர் வமான முடிவையும் எடுக்கவில்லை. இதைப்பற்றி தகவல்களை திரட்டுவதற்காக நான் சிறைச் சாலைகள் பக்கமாகவும் உயர் நீதிமன்றக் கட்டடப் பக்கமாகவும் பறந்து சென்றேன்.

நாட்டில் அதிகரித்துவரும் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, சிறுவர் மீதான பாலியல் துஷ் பிரயோகம் ஆகிய படுபயங்கரமான குற்றச்செயல்களை கட்டுப்பாட்டில் கொண்டுவர வேண்டுமாயின் மீண்டும் மரண தண்டனையை அமுலப்படுத்த வேண்டுமென்று சில சமூகவியலாளர்கள் வேண்டுகோள் விடுத்திருப்பதை நான் தெரிந்துகொண்டேன்.

இலங்கை மக்கள் நம்பிக்கை வைத்திருக்கும் சகல மதங்களும் குற்றமிழைத்த ஒரு மனிதனைத் தண்டிப்பதற்கு பதில் அவனைத் திருத்தி நல்லவனாக வாழ வைக்க வேண்டுமென்ற கருத்தையே வலியுறுத்துகின்றன. அதே நேரத்தில் கடந்த 30 ஆண்டு காலமாக இலங்கையில் எவருக்கும் மரண தண்டனை நிறைவேற்றப்படவில்லை. எமது நாட்டில் வெலிக்கடைச் சிறைச் சாலை யிலும், போகம்பறை சிறைச்சாலையிலும் மாத்திரமே மரண தண்டனையை நிறைவேற் றும் தூக்கு மரங்கள் இருக்கின் றன. அத்துடன் அதன் பலகை களும் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் இருக்கின்றன.

சுமார் நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் சிறைச்சாலை திணைக்களம் பல்லாயிரக்கணக்கான ரூபாவை செலவிட்டு வெளிநாட்டில் இருந்து தூக்குக் கயிறை இறக்குமதி செய்த போதிலும் அவை இது வரையில் பயன்படுத் தப்படவில்லை. மரண தண்டனை மீண்டும் அமுலாக்கப்பட்டால் அந்தத் தண்டனைக்குப் பயந்து இத்தகைய பாரதூரமான குற்றச் செயல்பாடுகளைப் புரியமாட்டார் கள் என்ற நம்பிக்கை சில சமூக அமைப்புகளுக்கு இருக்கின்றன.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவி அனோமா திஸாநாயக்க, பால- 'யல் ரீதியில் சிறு பிள்ளைகளை துஷ்பிரயோகம் செய்பவர்களுக்கு கட்டாயம் மரண தண்டனை விதிக்க வேண்டுமென்று பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சிறைச்சாலைகள் திணைக்களம் மரண தண்டனையை நிறைவேற்றும் அலுகோசுமாருக்கான 4 வெற்றி டங்கள் இருப்பதாகவும் அவற்றுக்கு பொருத்தமானவர்களை நியமிப்பதற்கான விளம்பரங்களை யும் செய்துள்ளது. 18முதல் 45 வயதிற்கிடைப்பட்ட நல்ல தேக ஆரோக்கியம் உடைய 8ஆம் வகுப்பில் சித்தியடைந்தவர்கள் இப்பதவிகளுக்கு விண்ணப்பம் செய்யலாம் என்றும், அவர்களு க்கு மாதாந்தம் 18 ஆயிரம் ரூபா சம்பளமும் ஏனைய அலவன்ஸ்களும் வழங்கப்படும் என்றும் அறிவித் துள்ளது. இப்பதவிகளுக்கு இது வரையில் ஐவர் விண்ணப்பித் துள்ளனர்.

இப்போது எமது சிறைச்சாலை களில் 1000 இற்கும் மேற்பட்ட வர்கள் மீது மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கி றது. இவர்கள் தங்களின் எதிர் காலம் எவ்விதம் அமையுமென்று தெரியாத நிலையில் இன்று சிறையில் நடைபிணங்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

மேல் நீதிமன்றம் ஒன்று விதிக்கும் மரண தண்டனையை எதிர்த்து மேன்முறையீட்டு நீதிமன்றம் சம்பந்தப்பட்டவர் மீதான மரண தண்டனையை நீக்கிவிடும் அல்லது அந்தத் தண்டனையை உறுதிப்படுத்துவ தற்கான அதிகாரத்தைக் கொண்டுள்ளது.

சமீபத்தில் றோயல் பார்க் கொலை வழக்கில் 12 வருட கடுங்காவல் சிறைத்தண்டனையைப் பெற்ற குற்றவாளி ஒருவர் அந்தத் தண்டனையை ரத்து செய்யுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் சம்பந்தப்பட்ட நபருக்கு கொடுக்கப்பட்ட 12 வருட சிறைத்தண்டனை அவர் செய்த குற்றத்திற்கு ஏற்புடையதல்ல என்று தீர்மானித்து அந்த நபருக்கு மரண தண்டனையை வழங்கியது.

ஒரு மனிதன் மரண தண்டனை பெறுவது ஒரு வேதனைக்குரிய செயலாக இருந்தாலும் சட்டமும், ஒழுங்கும் நிலை நாட்டப்படுவ தற்கும் மரண தண்டனையை மீண்டும் அமுல்படுத்துவது அவசியம் என்ற கருத்து, நாட்டில் பரவலாக இருந்து வருகின்றது.

இது தொடர்பாக என்ன முடிவு எடுக்கப்படும் என்பதை நாம் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். அது வரை, கழுகு கண்கள் இது விடயமாக பரிசீலனை செய்து தமிழ்நாதம் நேயர்களுக்கு உடனுக்குடன் தகவல்களை பெற்றுத்தர விரும்புகிறது.

# இருபத்திநான்கு லொறிகளை குண்டு வைத்து தகர்த்து பழி தீர்த்த தலிபான்கள்

ஆப்கானிஸ்தானில் நேட்டோ படைகளுக்காக எரிபொருள் கொண்டு சென்ற லொறிகளை, தலிபான்கள் குண்டு வைத்து தகர்த்ததில் 24 லொறிகள் எரிந்து சாம்பலாயின.

ஆப்கானிஸ்தானில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ள நேட்டோ படைகளுக்கு, தேவையான எரிபொருட்கள் பாகிஸ்தான் வழியாக கொண்டு செல்லப்படுகின்றன.

இந்நிலையில் கடந்தாண்டு நவம்பர் மாதம் நேட்டோ படைகள் நடத்திய தாக்குதலில், 24 பாகிஸ்தான் இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர்.

இந்த சம்பவத்திற்கு அமெரிக்கா மன்னிப்பு ஏதும் கேட்காத காரணத்தினால், ஆப்கானிஸ்தானுக்கான வழியை பாகிஸ்தான் மூடியது.

இதனால் நேட்டோ படைகளுக்கான பொருட்களை விநியோகம் செய்ய இயலாத நிலை ஏற்பட்டது. இதனையடுத்து அமெரிக்கா வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் மன்னிப்பு கேட்ட பின், பாகிஸ்தான் வழியை திறக்க சம்மதித்தது.

நேட்டோ வாகன போக்குவரத்துக்கு அனுமதியளித்தால், அந்த வாகனங்களை குண்டு வைத்து தகர்ப்போம் என தலிபான்கள் ஏற்கனவே எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

இதனால் பாகிஸ்தான் அரசு நேட்டோ வாகனங்களுக்காக பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்திருந்தது.

எனவே பாகிஸ்தான் பகுதியில் இந்த வாகனங்களை தகர்க்க முடியாத காரணத்தால், ஆப்கானிஸ் தானில்- உஸ்பெகிஸ்தான் எல்லையையொட்டிய சமாங்கன் மாகாணத்தில் நேட்டோ வாகனங்



கள் செல்லும் பாதையில் தலிபான்கள் நேற்று வெடிகுண்டை வெடிக்கச் செய்தனர்.

இதில் எரிபொருள் நிரப்பிய டாங்கர் லொறி வெடித்துச் சிதறியதில், அருகே இருந்த மற்ற 23 லொறிகளும் எரிந்து சாம்பலின.

இச்சம்பவத்தில் தனியார் பாதுகாப்பு நிறுவன வீரர்கள் சிலர் பலியாகி உள்ளனர். ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீத் கர்சாய், இச் செயலுக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

# ஜப்பானிய விஞ்ஞானிகளால் புகுஷிமா அணு உலையிலிருந்து எரிபொருள் நீக்கம்

ஜப்பானில் கடந்தாண்டு மார்ச் மாதம் ஏற்பட்ட நிலநடுக்கமும், சுனாமியும் புகுமா அணு உலையை சேதப்படுத்தியது.

இதனைத் தொடர்ந்து புகுஷிமா அணு மின் நிலையத்திலிருந்து எரிபொருளை நீக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.

இப்பணியில் 12-க்கும் மேற்பட்ட நிபுணர்கள், வெள்ளை கவச உடை அணிந்து ஈடுபட்டனர்.

மிக மோசமாக பாதிக்கப்பட்ட அணு உலை பிரிவு 4-லிலிருந்து எரிபொருள் கிரேன் மூலம் அகற்றப்பட்டது. ஒவ்வொன்றும் 12 அடி நீளம் கொண்ட இரண்டு எரிபொருள் கொண்ட உருளைகள் நீக்கப்பட்டன.

சுனாமியால் கடுமையாக பாதிக்கப்பட்ட டோக்கியோ எலெக்ட்ரிக் பவர் கார்ப்பரேஷனின் அணு மின் நிலையத்திலிருந்து முதல் முறையாக அணு எரிபொருள் நீக்கப்பட்டுள்ளது.

இப்போது செயலிழக்கப்பட்ட எரிபொருள் உருளையில் எந்த அளவுக்கு பாதிப்பு உள்ளது என்பதை ஆராயப் போவதாக நிறுவன உயர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அணு உலையை சுனாமி



தாக்கியபோது சுமார் 1,300 பயன்படுத்தப்பட்ட எரிபொருள் உருளைகளும், 200 பயன்படுத்தப்படாத உருளைகளும் இந்தப் பிரிவில் இருந்ததாக நிறுவன செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

# கூட்டத்தின் நடுவே மனைவிக்கு முத்தம் கொடுத்து மக்கள் ஆதரவைப் பெற்ற ஒபாமா

அமெரிக்காவுக்கும், பிரேசிலுக்கும் இடையே நடந்த நட்புறவு கூடைப் பந்தாட்டைப் போட்டியைக் காண தனது மனைவி மிச்சேல் ஒபாமா, மகள் மலியாவுடன் சென்றார் பராக் ஒபாமா.

போட்டி நடந்து கொண்டிருந்த போதே மனைவிக்கு அழுத்தமான முத்தம் கொடுத்தார் ஒபாமா. இதை மகள் மலியாவும், மைதானத்தில் திரண்டிருந்த ஆயிரக்கணக்கானோரும் ரசித்துப் பார்த்து கரகோஷம் எழுப்பினர்.

அமெரிக்க கூடைப் பந்தாட்ட அணிக்கும், பிரேசில் அணிக்கும் இடையே ஒலிம்பிக் போட்டிக்கு முந்தைய நட்புப் போட்டி ஒன்று வொஷிங்டனில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தப் போட்டியைக் காண ஆயிரக்கணக்கானோர் திரண்டிருந்தனர். போட்டி வொஷிங்டன் வெரிசோன் மையத்தில் நடந்தது. ஜனாதிபதி ஒபாமா, அவரது மனைவி மிச்சேல், மகள் மலியா, துணை ஜனாதிபதி ஜோ பிடென், அவரது பேத்தி உள்ளிட்ட பிரபலங்களும் திரண்டிருந்தனர்.

ஒபாமாவே ஒரு சிறந்த கூடைப் பந்தாட்ட வீரர்தான். தனது மகள் மலியா, சாஷா ஆகியோருக்கு இவர்தான் கூடைப்பந்தாட்ட பயிற்சியாளரும் கூட. மேலும் அமெரிக்க கூடைப்பந்தாட்ட அணியில் இடம் பெற்றிருக்கும் வீரர்களில் பாதிக்கும் மேற்பட்டோர் ஒபாமா ஆதரவாளர்கள். இதனால் போட்டிக்கு ஆஜராகியிருந்தார் ஒபாமா.

போட்டி விறுவிறுப்பாகப் போய்க் கொண்டிருந்தது. வீரர்கள் விளை



யாடுவதை அத்தனை பேரும் ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தனர். ஆனால் ஒபாமா, தனது மனைவியின் பக்கம் திரும்பி திடீரென முத்தம் கொடுத்தார்.

இந்த காட்சியை அத்தனை பேரும் ஆச்சரியமடைந்தனர். பிறகு ஹோ வென குரல் எழுப்பி உற்சாகப்பட்டனர். மேலும் அடுத்த நான்கு ஆண்டுகளும் நீங்கள் தான் என்று ஜனாதிபதி தேர்தலில் மீண்டும் போட்டியிடும் ஒபாமாவுக்கு ஆதரவாகவும் குரல் எழுப்பினர்.

# தொடர்ந்து 40 மணி நேரம் கேம் விளையாடிய நபர் மரணம்

தைவானில் தொடர்ந்து 40 மணி நேரம் வீடியோ கேம் விளையாடிய இளைஞர் பரிதாபமாக உயிரிழந்தார்.

தைவானில் தெற்கில் உள்ளது டைவான் என்ற பகுதி. இங்குள்ள இணையத்தள நிலையத்திற்கு கடந்த 13ஆம் திகதி சுவாங் (வயது 18) என்ற இளைஞர் வீடியோ கேம் விளையாட வந்தார்.

தொடர்ந்து 40 மணி நேரம் வீடியோ கேம் விளையாடிக் கொண்டிருந்தார். இந்நிலையில் கடந்த 15ஆம் திகதி, மேஜை மீது தலை வைத்து படுத்திருந்த சுவாங்கை இணையத்தள ஊழியர் ஒருவர் எழுப்பினார்.

மயக்க நிலையில் இருந்த சுவாங்கை உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். ஆனால்



சுவாங் ஏற்கனவே இறந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

# உலக பார்வை

## இத்தாலியில் மோனாலிசாவின் எலும்புக் கூடுகள் கண்டுபிடிப்பு

உலகப் புகழ் பெற்ற மோனா லிசா ஓவியத்தினை வரைவதற்கு மொடலாக இருந்த லிஸா கிரார்தினியின் எலும்புக் கூடுகளை கண்டுபிடித்துள்ளதாக தொல் பொருள் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

டாவின்சி மோனாலிசா ஓவியத்தை வரைவதற்கு தூண்டுகோலாக இருந்தவர் தான் லிஸா கிரார்தினி.

இந்த பெண் தொடர்பாக அவ்வப்போது பல தகவல்கள் வெளிவந்தாலும், அவற்றில் சில தகவல்கள் மட்டுமே உண்மையானவை.

இந்நிலையில் இத்தாலிய தொல் பொருள் ஆய்வாளர்கள், புளொரொன்சில் உள்ள புனித உர்சுலா மடமொன்றில் லிஸா கிரார்தினியின் எலும்புக் கூடுகளை கண்டுபிடித்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

மோனாலிசா இத்தாலியில் லாகியோகொண்டா என அறியப்படுகின்றது.

நவீன வரலாற்று ஆசிரியர்களும் மோனாலிசா படத்திற்கு மொடலாக இருந்தவர் லிசா டெல் கியோகொண்டா என ஏற்கொண்டுள்ளனர்.

வரலாற்றுக் குறிப்புகளின் படி, அப்பெண் தனது கணவர் இறந்ததற்கு பின்பு துறவியாக மாறியதாகவும், அவர் மரணமடைந்த பின்னர் அம் மடத்திலேயே புதைக்கப்பட்டதாகவும் தெரிகிறது.

இந்நிலையில் கடந்தாண்டு கண்டுபிடிக்கப்பட்ட மண்டை ஓட்



டுடன், தற்போது கண்டுபிடிக்கபட்டுள்ள எலும்புக்கூடுகள் ஒத்துப் போகின்றதா என்பது குறித்து ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றது.

இவரது எலும்புக்கூடு கண்டுபிடிக்கப்பட்ட இடத்திற்கு அருகில் மேலும் இரண்டு எலும் புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இவ்விரண்டு எலும்புக்கூடுகளும் அவரது பிள்ளைகளின் எலும்புக் கூடுகளாக இருக்கலாம் என நம்பப்படுகின்றது.

லிசா டெல் கியோகொண்டாவின் எலும்புக்கூடும் மற்றைய இரண்டு எலும்புக்கூடுகளும் ஒத்துப் போகின்றனவா எனப் பரி சோதனை செய்யப்படவுள்ளது.

இதன் பின்னர் அவரது மண்டையோட்டினை வைத்து நவீன தொழில்நுட்பங்களின் மூலம் அவரது முகம் எவ்வாறு இருந்தது என்பதனை உருவகப்படுத்த முடியுமென ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர்.

இவற்றையடுத்து மோனாலிசாவின் மர்மப் புன்னகைக்கும் விடைகிடைக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.




பெலரோஸ் சென்றிருந்த ரஷ்யா பிரதமர் டிமெட்ரிமித்வதேவ் (இடது), அந்நாட்டு அதிபர் அலெக்ஸாண்டர் லூகாஸ்ஹென்கோவை (வலது), மின்சிக் நகரில் சந்தித்து பேசினார்.


## லண்டனிலும் பேருந்து ஊழியர்கள் வேலை நிறுத்த போராட்டம்: குழப்பத்தில் அரசு

லண்டனில் ஒலிம்பிக் போட்டிகள் தொடங்க உள்ள நிலையில், பேருந்து ஊழியர்கள் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட போவதாக அறிவித்தது பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியது.

லண்டனில் ஒலிம்பிக் போட்டிகள் தொடங்க இருப்பதால், அந்நகரம் முழுவதுமே விழா கோலம் பூண்டுள்ளது.

இந்நிலையில் பிரிட்டனில் உள்ள 20 பேருந்து நிறுவனங்களை சேர்ந்த தொழிலாளர்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த மாதம் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இதற்கிடையே வரும் 24ஆம் திகதி மீண்டும் அவர்கள் வேலை நிறுத்தம் செய்ய திர்மானித்தி



ருந்தனர்.

இதனையடுத்து பேருந்து ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டால் பிரச்சினை அதிகரிக்கும் என நினைத்த அரசு, ஒலிம்பிக் போட்டியையொட்டி அவர்களுக்கு 21 நாள் போனஸ் அறிவித்துள்ளது.

எனவே தங்கள் போராட்டத்தை வாபஸ் பெறப் போவதாக அறிவித்துள்ளனர்.

# எனது வெற்றியை பாருங்கள்:


எனது வெற்றியை, 22ஆம் திகதியன்று பாருங்கள், என, தேசிய ஜனநாயக கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சங்மா கூறினார். முதல்வர் ஜெயலலிதாவை போயஸ் தோட்டத்தில் நேற்று சந்தித்த பின், நிருபர்களிடம் அவர் கூறியதாவது: ஜனாதிபதி வேட்பாளராக தமிழக முதல்வர் ஜெயலலிதா என்னை அறிவித்ததோடு, மற்ற கட்சிகளிடமும் ஆதரவைத் திரட்டினார். இது எனக்கு மிகுந்த பலத்தை அளித்துள்ளது. இதற்காக அவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி, காங்கிரஸ் வேட்பாளர் பிரணாப் முகர்ஜிக்கு ஆதரவு தெரிவித்துள்ள நிலையில், எனது வெற்றி வாய்ப்பு குறித்து கேட்கிறீர்கள். 22ஆம் திகதி, என் வெற்றியைப் பாருங்கள். இவ்வாறு

## சங்மா சவால்

சங்மா கூறினார்.ஜனாதிபதி வேட்பாளராக, சென்னையிலிருந்து பிரசாரத்தைத் துவங்கிய சங்மா, அனைத்து மாநிலங்களுக்கும் சென்று ஆதரவு திரட்டிய பின், ஜனாதிபதி வேட்பாளராக தன்னை முன்னிறுத்திய ஜெயலலிதாவுக்கு நன்றி தெரிவித்து, தன் பிரசாரத்தை, நேற்று முன்தினம் சென்னையில் முடித்துக் கொண்டார்.

# அசாம் இளம்பெண் விவகாரம்:

## ரி.வி. ஆசிரியர் ராஜினாமா



அசாமில் இளம்பெண்ணொருவர் சமூக விரோதிகளால் மானபங்கப்படுத்தப்பட்ட சம்பவத்தில் இதை வீடியோ எடுத்த டி.வி. சேனலின் ஆசிரியர் ராஜினாமா செய்துள்ளார்.

அசாமின் கவுகாத்தி நகரில் கடந்த வாரம் நடைபெற்ற இச்சம்பவத்தை தனியார் தொலைகாட்சி சேனல் படம்பிடித்து ஒளிபரப்பியது.

அந்த வீடியோவின் அடிப்படையில் குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டு இதுவரை, 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். முக்கிய குற்றவாளியான அமர்ஜோதி கலிதா என்பவன் மட்டும் தலைமறைவாக இருக்கிறான்.

இதற்கிடையே கவுகாத்தியில் நேற்று முன்தினம் பேட்டியளித்த அசாம் முதல்வர் தருண் கோகாய், இளம்பெண் மானபங்கப்படுத்தப்பட்டதை வீடியோ எடுத்து டி.வி.யில் ஒளிபரப்பியது தவறு.

இந்த சம்பவத்தை பார்த்ததும் அதை தடுக்க முயற்சி செய்திருக்க வேண்டும், அதோடு பொலிஸுக்கும் தகவல் அளித்திருக்க வேண்டும் என்று டி.வி சேனல் மீதே குற்றம்சாட்டினார்.

ஏற்கனவே இந்த விவகாரத்தில் அந்த டி.வி.யின் நிருபர் கவுரவ் ஜோதி நியோக்தான் தூண்டிவிட்டிருக்கிறார் என்று தகவல் ஆர்வலர் அகில் கோகய் குற்றமசாட்டி இருந்தார். இதனால், நியோக் தனது பதவியை ராஜினாமா செய்துவிட்டார்.

இந்நிலையில் அந்த டி.வி சேனலின் ஆசிரியர் அதானு புயான் கவுகாத்தியில் நேற்று நிருபர்களுக்கு அளித்த பேட்டியில், முதல்வரின் பேட்டியை தொடர்ந்து நிருபர் நியோக்கிடம் பொலிஸார் 4 மணி நேரம் விசாரணை நடத்தினர். இந்த விவகாரத்தில் நேர் மையான முறையில் விசாரணை நடக்காது என்று அஞ்சுகிறேன்.

எனவே, டி.வி சேனலின் ஆசிரியர் பொறுப்பி லிருந்து ராஜினாமா செய்கிறேன். எங்கள் வீடியோவை பார்த்துதான் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பதை மறுக்க முடியாது என்றார்.

# அமைச்சர் பொறுப்பிலிருந்து செங்கோட்டையன் நீக்கம்:

## தமிழக முதல்வர் அதிரடி:



அமைச்சர் பொறுப்பிலிருந்து செங்கோட்டையன் நீக்கம்: தமிழ்நாட்டில் வருவாய்த்துறை அமைச்சராக இருந்த கே.ஏ.செங் கோட்டையனை முதல்வர் ஜெயலலிதா அமைச்சர் பொறுப்பில் இருந்து நீக்கியுள்ளார்.

அவருக்கு பதிலாக வருவாய்த் துறை அமைச்சராக பெருந்துறை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்.டி., வெங்கடாசலம் நியமிக்கப்பட்டுள்ளார். அவரின் பதவியேற்பு விழா இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறும் என்று கூறப்பட்டுள்ளது.

மேலும்,கே.ஏ.செங்கோட்டையன் அதிமுக கழக தலைமை நிலையச் செயலாளர் பொறுப்பில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார் என்று தகவல் தெரிவிக்கப்பட்டது.

செங்கோட்டையன் எதன் காரணமாக நீக்கப்பட்டார் என்பது பற்றி இதுவரை தகவல் எதுவும் வெளிவரவில்லை.

# ஐ.பி.எல் ஆபாச நடனம்: விளக்கமளிக்க பொலிவுட் நடிகைகளுக்கு உத்தரவு



இந்தியாவில் நடைபெற்ற ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டிகளின் தொடக்க விழாவில் ஆபாச நடனமாடிய பொலிவுட் நடிகைகளுக்கு நோட்டீஸ் அனுப்ப உயர்நீதமன்ற மதுரை கிளை உத்தரவிட்டுள்ளது.

கடந்த ஏப்ரல், மே மாதங்களில் நடைபெற்ற ஐ.பி.எல் போட்டிகளுக்கான தொடக்க விழா சென்னையில் கோலகலமாக நடைபெற்றது.

இதில் பொலிவுட் திரை நட்சத்திரங்களான ப்ரியங்கா சோப்ரா, கரீனா கபூர், அமிதாப்பச்சன் என பலரும் கலந்து கொண்டனர்.

இவர்கள் இவ்விழாவில் ஆபாச நடனமாடியதாக எழுந்த புகாரின் அடிப்படையில் மதுரையை சேர்ந்த சட்டத்தரணி ஜெயககுமார் என்பவர் உயர் நீதிமன்ற மதுரை கிளையில் ஒரு மனுத் தாக்கல் செய்திருந்தார்.

அதில் கூறியிருப்பதாவது: சென்னையில் நடைபெற்ற தொடக்க விழாவில் நடிகைகள் கரீனா கபூர், பிரியங்கா சோப்ரா, நடிகர்கள் அமிதாப்பச்சன், சல்மான்கான் உள்பட பலர் ஆபாச நடனம் ஆடினர்.


முகம் சுளிக்கும் வகையில் நடந்த இந்த நடனத்தை பல்லாயிரக்கணக்கானோர் பார்த்தனர். இதுகுறித்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க பொலிஸ் டி.ஜி.பி. மற்றும் தென் மண்டல ஐ.ஜி. உட்பட பல பொலிஸ் அதிகாரிகளுக்கு மனு அனுப்பியிருந்தேன்.

ஆனால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன் என்று கூறியிருந்தார். இந்நிலையில் இம்மனு மீதான விசாரணை நீதிபதி செல்வம் முன்பு இன்று விசாரணைக்கு வந்தது.

இம்மனு விசாரணை முடிவில் நீதிபதி செல்வம், இது குறித்து நீதிமன்றத்திற்கு உரிய பதிலளிக்கும்படி பொலிஸ் டி.ஜி.பி., ஐ.ஜி. (பொது) பொலிஸ் ஐ.ஜி. தென் மண்டலம், ஐ.பி.எல். தலைவர் ராஜேஷ் சுக்லா, நடிகர்கள் அமிதாப்பச்சன், சல்மான்கான், நடிகைகள் கரீனா கபூர், பிரியங்கா சோப்ரா உள்பட 12 பேருக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டார். மேலும் இந்த வழக்கை வருகிற 31.ஆம் திகதி ஒத்தி வைத்தார்.

# இந்திய செய்திகள்

## சர்வதேச மணற்சிற்ப போட்டி: இந்திய வீரருக்கு இரட்டைத் தங்கம்



உலகளவில் ஸ்பெயினில் நடைபெற்ற மணற்சிற்ப போட்டியில் இந்தியாவின் பிரபல மணற்சிற்ப கலைஞரான சுதர்ஷன் பட்நாயக், முதல் இரண்டு பரிசுகளை தட்டிச் சென்றார்.

ஸ்பெயினின் மாபெல்லா நகரில் 7 நாட்கள் நடைபெற்ற இப்போட்டியில், 10 நாடுகளைச் சேர்ந்த மணற்சிற்ப கலைஞர்கள் கலந்து கொண்டனர்.

இதில் இந்தியாவைச் சேர்ந்த பட்நாயக் 3.5 மீற்றர் நீளமுள்ள விநாயகர் சிற்பத்தை உருவாக்கினார். இந்த விநாயகர் சிற்பம் படகில் அமர்ந்து அருள் பாலிப்பதைப் போன்று வடிவமைத்திருந்தார்.

மேலும் அதனைச் சுற்றி கடல வாழ் உயிரினங்களை காப்போம், வெப்பமயமாதலில் இருந்து உலகை காப்போம் என்ற விழிப்புணர்வு வாசகங்களையும் பொறித்திருந்தார்.

அனைவரையும் கவர்ந்த இச்சிற் பத்துக்கு 2 தங்கப் பதக்கங்கள் கிடைத்தது. இதுபற்றி சிற்பக்கலைஞர் பட்நாயக் கூறுகையில், இந்தியாவில் புகழ் பெற்ற தெய்வமான விநாயகர் சிற்பத்தை 1000 தொன் மணலைக் கொண்டு உருவாக்கினேன். இந்த சிற்பம் மக்களிடையே அமோக வரவேற்பை பெற்றது. இதனால் இரண்டு பரிசுகள் கிடைத்தது என்றார்.

கடந்த மாதம் கோபன்ஹேகன் நகரில் நடந்த போட்டியிலும் பட்நாயக் முதல் பரிசு பெற்றார்.

இவரது சொந்த ஊர் ஒடிசா மாநிலம் பூரி ஆகும். கடந்த 27 ஆண்டுகளாக விழிப்புணர்வு மணற்சிற்பங்களை வரைந்து வரும் பட்நாயக், சர்வதேச அளவில் பல பரிசுகளை வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.



ஆடி அமாவாசையை முன்னிட்டு ராமேஸ்வரம் அக்னிதீர்த்த கடலில் ஏராளமான பக்தர்கள் கடலில் புனித நீராடி முன்னோர்களை வயணழிபட்டனர்.

## ராகுலுக்கு பதவி: சோனியா புது தகவல்



கட்சியில் முக்கிய பங்கு வகிப்பது குறித்து, ராகுல் தான் முடிவு செய்ய வேண்டும் என, காங்கிரஸ் தலைவர் சோனியா கூறியுள்ளார்.

ஜனாதிபதி மற்றும் துணை ஜனாதிபதி தேர்தல்கள் முடிந்த பின், காங்கிரஸ் கட்சியில், ராகுலுக்கு முக்கிய பொறுப்பு அளிக்கப்படவுள்ளதாக, தகவல் வெளியானது. ராகுலின் கட்சிப் பணி குறித்து, காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே, விமர்சனங்கள் எழுந்ததாலும். அடுத்த லோக்சபா தேர்தலில், பிரதமர் வேட்பாளராக, ராகுலை தயார் படுத்தும் விதமாகவும், கட்சி மேலிடம் இந்த முடிவு எடுத்துள்ளதாகவும் செய்திகள் வெளியாகின. காங்., பொதுச் செயலர் திக்விஜய் சிங்கும், இதை உறுதி செய்வது போல், செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார்.

இந்நிலையில், துணை ஜனாதிபதி தேர்தலில், ஐ.மு., கூட்டணி சார்பில், ஹமீத் அன்சாரி, நேற்று வேட்பு மனு தாக்கல் செய்தார். சோனியாவும், அவருடன் வந்திருந்தார்.

அப்போது, ராகுல் விவகாரம் குறித்து, செய்தியாளர்கள், அவரிடம் கேள்வி எழுப்பினர். இதற்கு சோனியா, கட்சியில், முக்கிய பங்கு வகிப்பது குறித்தும், பெரிய அளவில் செயல்படுவது குறித்தும், ராகுல் தான் முடிவு செய்ய வேண்டும். அவர் சார்பாக, வேறு யாரும் முடிவு எடுக்க முடியாது என்றார். இதையடுத்து, ராகுல் பற்றிய வெளியான செய்திகளுக்கு, முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

# போக்குவரத்து, பாதுகாப்பு பிரச்சினைகளால் ஒலிம்பிக் தொடக்க விழா நேரம் குறைந்தது

போக்குவரத்து நெரிசல் மற்றும் பாதுகாப்பு பிரச்னைகளை கருத்தில் கொண்டு ஒலிம்பிக் போட்டி தொடக்கவிழா நிகழ்ச்சியில் அரை மணி நேரத்தை குறைக்க முடிவு செய்துள்ளனர். லண்டன் ஒலிம்பிக் போட்டி தொடக்கவிழா 27ம் தேதி கோலாகலமாக நடக்க உள்ளது. இந்த விழாவுக்கான நிகழ்ச்சிகளை பிரபல திரைப்பட இயக்குனர் டேனி பாயல் (ஸ்லம் டாக் மில்லியனர் புகழ்) வடிவமைத்து வருகிறார்.

இரவு 9.00 மணிக்கு தொடங்கி நள்ளிரவையும் தாண்டி 12.30 வரை நீடிக்கும் வகையில் கலை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து வந்தனர். இந்த நிலையில், ஒலிம்பிக் கிராமம் திறக்கப்பட்டு பல நாட்டு வீரர், வீராங்கனைகளும் குவியத் தொடங்கியுள்ள நிலையில், லண்டன் நகரம் போக்குவரத்து நெரிசலில் சிக்கித் தவிக்கிறது. வீரர்கள் சென்ற பேருந்து ஒன்று வழிதவறிச் சென்று 4 மணிநேரம் அலைய நேரிட்டதால், பாதுகாப்பு பிரச்சினையும் எழுந்தது.

தொடக்கவிழா நடக்கும்போது ஒலிம்பிக் ஸ்ரேடியத்தில் 80,000 ரசிகர்கள், 16,000 வீர, வீராங்கனைகள், நிர்வாகிகள், 10,000 கலைஞர்கள், 70 செம்மறி ஆடு, 12 குதிரை, 10 கோழி, 3 பசு, 2 வெள்ளாடு, நாய்கள் மற்றும் வாத்துகள் இருக்கும் என கணக்கிட்டுள்ளனர். நள்ளிரவுக்கு மேல் நிகழ்ச்சி நீண்டால் இவ்வளவு பேருக்கும் பாதுகாப்பு அளிப்பது சிரமம், நிகழ்ச்சி முடிந்து திரும்பும்போது மீண்டும் போக்குவரத்து நெரிசல் ஏற்படும் என்று ஒலிம்பிக் பாதுகாப்பு பொறுப்பை ஏற்றுள்ள ஜி4எஸ் நிறுவனம் எச்சரித்ததை அடுத்து, அரை மணி நேர மோட்டார் பைக் சாகச நிகழ்ச்சி ரத்து செய்யப்பட்டுள்ளது.

இதனால், தொடக்கவிழா சரியாக நள்ளிரவு முடிவுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. பைக் சாகச குழுவினருக்கு ஒப்பந்தப்படி முழு தொகையும் அளிக்கப்படும் என்றும் அறிவித்துள்ளனர்.

# கூட்டுறவாளர் தின விளையாட்டு சுன்னாகம் கயிறிழுத்தல் சம்பியன்

(வலிகாமம்)

சங்கானை பலநோக்கு சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கமும் சுன்னாகம் பலநோக்கு சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கமும் மோதிய கயிறுழுத்தல் போட்டியில் சுன்னாகம் பலநோக்கு சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் சம்பியன் வென்றது.

யாழ். மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தினால் சர்வதேச கூட்டுறவாளர் தினத்தையொட்டி மாவட்ட கூட்டுறவு அமைப்புகளுக்கு இடையே நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் கயிறுழுத்தல் போட்டியில் சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்க அணி சம்பியனாகியது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லாரி மைதானத்தில் இடம் பெற்ற கயிறுழுத்தல் போட்டியில் சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்க அணியும் சுன்னாகம் பல நோக்கு கூட்டுறவுச் சங்க சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்க அணியும் மோதிக்கொண்டன. இதில் சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சிக்கன கடனுதவு கூட்டுறவுச்சங்க அணி 02:00 என்ற அடிப்படையில் சங்கானை பலநோக்கக் கூட்டுறவுச் சங்க சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்க அணியை வெற்றி பெற்று சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

# நீச்சல் போட்டி நாளை

வலிகாமம்

வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் மாவட்ட அணிகளுக்கு இடையேயான ஆண்கள் பெண்களுக்கான நீச்சல் போட்டி நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி நீச்சல் தடாகத்தில் இடம் பெறவுள்ளது.

முதல் தடவையாக நடைபெறும் இந்த நீச்சல் போட்டியில் முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மன்னர் மற்றும் வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த வீர, வீராங்கனைகள் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் முதல் தடவையாக இந்த நீச்சல் போட்டி இடம் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# இலங்கை வந்தது இந்திய அணி




தோனி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி நேற்று முன்தினம் இலங்கை வந்தது.

இலங்கை-இந்திய அணிகளுக்கு இடையிலான 5 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடர்வரும் சனிக்கிழமை தொடங்கு கிறது. முதல் ஆட்டம் இலங்கையின் அம்பாந்தோட்டையில் நடை பெறுகிறது.

ஒருநாள் தொடரைத் தொடர்ந்து இலங்கைக்கு எதிராக ஒரேயொரு ருவென்ரி-20 ஆட்டத்தில் விளையாடுகிறது இந்திய அணி. 7 வார இடைவெளிக்குப் பிறகு ஒருநாள் தொடரில் விளையாடுகிறது இந்திய அணி. இப்போதைய இந்திய அணியில் இடம்பெற்றுள்ள வீரர்களில் பெரும்பாலானோர் நீண்ட இடைவெளிக்குப் பிறகு விளையாடவுள்ளனர்.

அதனால் களத்தடுப்பு உள்ளிட்ட ஆட்ட உத்தி களில் வேறுபாடு காணப்படும் என்று தெரிகிறது.

# ருவென்ரி-20 உலகக் கிண்ணம்: அவுஸ்திரேலிய உத்தேச அணி

செப்ரெம்பர் மாதம் இலங்கையில் இடம்பெறவுள்ள சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ண ருவென்ரி-20 தொடருக்கான அவுஸ்திரேலிய உத்தேச அணி அறிவிக்கப்பட்டுள்ளது. 30 பேர் கொண்ட அணியாக அறிவிக்கப்பட்டுள்ள இவ்வணியிலிருந்து 15 வீரர்கள் ருவென்ரி-20 தொடருக்காகத் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

அறிவிக்கப்பட்டுள்ள அணியில் வளர்ந்து வரும் வேகப்பந்து வீச்சாளரான ஜேம்ஸ் பற்றின்சனுக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை. அத்தோடு சுழற்பந்து வீச்சாளர் நெதன் லயனும் இவ்வணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். எதிர்பார்க்கப்பட்ட இவ்விரண்டு வீரர்களும் 30 பேர் கொண்ட அணியிலேயே இடம் பெற்றிருக்கவில்லை.

அவுஸ்திரேலிய முன்னாள் ருவென்ரி-20 அணித்தலைவர் கமரன் வைட் அணிக்கு மீண்டும் அழைக்கப்பட்டுள்ளதோடு, அண்மையில் தனது ஓய்விலிருந்து வெளியே வந்து பிக்பார் லீக் மற்றும் ஐ.பி.எல். தொடர்களில் பங்கு பற்றிய பிரட் ஹொக் இற்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அறிவிக்கப்பட்ட அணி:

ஜோர்ஜ் பெய்லி, ட்ரவிஸ் பே[illegible] டானியல் கிறிஸ்டியன், பற் கமின்ஸ், ேவியர் டொகேர்ட்டி, ஜேம்ஸ் ஃபோள்க்னர், ஆரொன் ஃபின்ச், றயன் ஹரிஸ், பென் ஹில்பன் ஹோஸ், பிரட் ஹொக், டெவிட் ஹசி, மைக்கல் ஹசி, மிற்சல் ஜோன்சன், பென் லாஃப்ளின், மிற்சல் மாரஷ், ோன் மார், கிளென் மக்வெல், அன்ட்ரு மக்டொனால்ட், கிளின்ட் மக்காய், டேர்க் நன்னீஸ், ஸ்டீஃபன் ஓஃப்கீ, ரிம் பெய்ன், ரொப் குய்னீ, ஸ்டீவன் ஸ்மித், மிற்சல் ஸ்ரார்க், அடம் வோகஸ், மத்தியூ வேட், டேவிட் வோணர், ஷேன் வட்சன், கமரன் வைட்

# ருவென்ரி-20 உலகக் கிண்ணம்: சர்வதேச விளம்பர துதராக மலிங்க



சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி) ருவென்ரி-20 உலகக் கிண்ணத் தொடர், இம்முறை இலங்கையில் நடைபெற உள் ளது. எதிர்வரும் செப்ரெம்பர் 18 ஆம் திகதி முதல் ஒக்ரோபர் 7ஆம் திகதி வரை நடைபெற உள்ளது.

இப்போட்டிக்கான தூதராக, இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்கவை சர்வதேச கிரிக்கெட் சபை தெரிவு செய்துள்ளது. இதுகுறித்து சர்வதேச கிரிக்கெட் சபையின் முதன்மைச் செயல் அதிகாரியான ஹாரூன் லார்கட் கூறுகையில், ஆடுகளத்திலும், வெளியிலும் மலிங்கவின் செயற்பாடுகள் மற்ற வீரர்களுக்கு முன்மாதிரியாக இருப்பதால் அவரை உலகக் கிண்ண போட்டியின் தூதராக தெரிவு செய்ததாக தெரிவித்தார்.

ஆக்ரோஷமான பந்துவீச்சு மலிங்கவை உலகத் தரத்திற்கு உயர்த்தியிருக்கிறது. மேலும் அவரது தனித்துவமான, ஸ்ரைலான மற்றும் வண்ணமயமான ஆளுமை, ருவென்ரி-20 போட்டிக்கான விறு விறுப்புடன் ஒத்ததாக இருக்கிறது.

மலிங்கவின் புகழ் இலங்கை மட்டுமின்றி உலகம் முழுவதும் பரவியுள்ளதால் அவர் தூதர் பதவிக்கு சிறந்த தெரிவாக இருக்கும் எனவும் அவர் தெரிவித்தார். இதன்மூலம் உலகக்கிண்ண போட்டி தொடர்பான விளம்பரங்களில் மலிங்க தோன்றி உலகம் முழுவதும் - போட்டியை பிரபலப்படுத்துவார்.

விளம்பர தூதராக தான் தெரிவு பெற்றதை மலிங்க மகிழ்ச்சியுடன் வரவேற்றார்.

இதுபற்றி அவர் கூறுகையில், ஆசியாவில் நடைபெற உள்ள முதல் ருவென்ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் பங்கேற்பதை பெருமையாகக் கருதுகிறேன். அதேசமயம் விளம்பரத் தூதர் என்ற முறையில், உலகம் முழுவதும் இப்போட்டி தொடர்பான செய்தியை அனைத்து சமூகத்தினருக்கும், ரசிகர்களுக்கும் எடுத்துச் செல்வேன். என்னை விளம்பர தூதராக தெரிவு செய்ததற்கு சர்வதேச கிரிக்கெட் சபைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன் - என்றார்.மேலும், இப்போட்டிகளுக்கு ரசிகர்கள் ஆதரவு அளிக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

# கூட்டுறவாளர் தின விளையாட்டு சுன்னாகம் கயிறிழுத்தல் சம்பியன்

(வலிகாமம்)

சங்கானை பலநோக்கு சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கமும் சுன்னாகம் பலநோக்கு சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கமும் மோதிய கயிறுழுத்தல் போட்டியில் சுன்னாகம் பலநோக்கு சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் சம்பியன் வென்றது.

யாழ். மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தினால் சர்வதேச கூட்டுறவாளர் தினத்தையொட்டி மாவட்ட கூட்டுறவு அமைப்புகளுக்கு இடையே நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் கயிறுழுத்தல் போட்டியில் சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்க அணி சம்பியனாகியது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லாரி மைதானத்தில் இடம் பெற்ற கயிறுழுத்தல் போட்டியில் சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்க அணியும் சுன்னாகம் பல நோக்கு கூட்டுறவுச் சங்க சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்க அணியும் மோதிக்கொண்டன. இதில் சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சிக்கன கடனுதவு கூட்டுறவுச்சங்க அணி 02:00 என்ற அடிப்படையில் சங்கானை பலநோக்கக் கூட்டுறவுச் சங்க சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்க அணியை வெற்றி பெற்ற சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டது.

# ருவென்ரி-20 உலகக் கிண்ணம்: பீற்றர்சன் அணியில் இல்லை

உலக கிண்ண ருவென்ரி-20 போட்டிக்கான இங்கிலாந்து உத்தேச அணியில் அதிரடி துடுப்பாட்ட வீரர் கெவின் பீற்றர்சனுக்கு இடம் கிடைக்கவில்லை. இவர் சமீபத்தில் ஒருநாள் போட்டியில் இருந்து ஓய்வு பெற்றார். அதே நேரத்தில் ருவென்ரி-20 கிரிக்கெட் போட்டியில் தொடர்ந்து விளையாட விருப்பம் தெரிவித் திருந்தார்.

இங்கிலாந்து, கிரிக்கெட் சபையின் ஒப்பந்தத்தின்படி, ஒரு வீரர் ஒருநாள் அல்லது ருவென்ரி-20 போட்டிகளில் ஏதாவது ஒன்றிலிருந்து விலகும் பட்சத்தில் இரண்டில் இருந்தும் விலகியதாகக் கணக்கில் கொள்ளப்படும். அதன்படி தற்போது பீற்றர்சனுக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது.

2 ஆண்டுகளுக்கு முன்பு மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்ற ருவென்ரி-20 உலக கிண்ணப் போட்டியில், இங்கிலாந்து அணி சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது. இறுதி ஆட்டத்தில் சிறப்பாக ஆடிய பீற்றர்சன் ஆட்ட நாயகன் விருதையும் தட்டிச் சென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.



அணி விவரம்: ஸ்டுவர்ட் பிராட் (அணித்தலைவர்), ஜேம்ஸ் ஆண்டர்சன், ஜொனாதன் பேர்ஸ்டோவ், கேரீத் பட்டி, இயான் பெல், ரவி போபாரா, ஸ்காட் போர்த்விக், டிம் பிரெஸ்னன், டேனி பிரிக்ஸ், ஜோஸ் பட்லர், அலாஸ்டர் குக், ஸ்டீவன் கிராஃப்ட், ஸ்டீவன் டேவிஸ், ஜேட் டெர்ன்பாச், ஸ்டீவன் ஃபின், அலெக்ஸ் ஹேல்ஸ், கிரேக் கீஸ்வெட்டர், மைக்கேல் லம்ப், ஸ்டுவர்ட் மீக்கர், இய்ன் மோர்கன், கிரஹாம் ஆனியன்ஸ், சமித் படேல், மட் பிரையர், ஜோ ரூட், பென் ஸ்டோக்ஸ், கிரீம் ஸ்வான், ஜேம்ஸ் ரெய்லர், ஜேம்ஸ் டிரெட்வெல், கிரிஸ் வோக்ஸ், லியூக்ரைட்.

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 20.07.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது